பொழிவு - 17
குவிப்பு - 10
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஒக்ரோபர் 2014
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 161/ News / 2014"

## இலங்கைத் திருச்சபைக்கு மாபெரும் மகிழ்ச்சியின் செய்தி!

### பல்லாண்டுக் கனவு நனவாகியது! இலங்கை நாட்டிற்கு முதல் புனிதர்!

### ஆலய மணிகள் ஒலித்தன! நன்றிச் செபங்கள் ஏறெடுக்கப்பட்டன!

## அருளாளர் யோசவ்வாஸ் புனிதராக உயர்த்தப்பட

# திருத்தந்தை பிரான்சிஸ் அங்கீகாரம்



அருளாளர் யோசவ்வாஸ் புனிதராக உயர்த்தப்படுவதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அங்கீகாரம் வழங்கியுள்ளார் என்ற மாபெரும் மகிழ்ச்சியின் செய்தியை வாசகப் பெருமக்களுக்கு அறிவிப்பதில் மன்னா பெருமகிழ்ச்சியடைகின்றது. இச்செய்தி இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையை அக்களிப்பில் ஆழ்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'இலங்கையின் திருத்தூதர்' என்று அழைக்கப்படுகின்ற அருளாளர் யோசவ்வாஸ் எதிர்வரும் ஜனவரி மாதம் 14ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெறும் திருப்பலியின்போது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதராக உயர்த்தப்படவுள்ளார்.

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்)

## திருத்தந்தையின் வருகையினை அரசியலாக்க இடமளியோம்

### - கர்தினால் மல்கம் றஞ்சித் -

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வருகையை இந்த நாட்டில் எவரும் அரசியல் கருவியாகப் பயன்படுத்துவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். அந்தவகையில் தேர்தல் பிரசாரக் காலத்தில் திருத்தந்தையினால் இலங்கைக்கு விஜயம் செய்ய முடியாது என்பதனை அரசாங்கத்துக்கு நாம் அறிவித்துள்ளோம். கத்தோலிக்க திருச்சபையின் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் கவனத்திற்கொள்ளும் என நாம் நம்புகிறோம் என்று கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.


கொழும்பு பேராயர் இல்லத்தில் கடந்த செப்ரம்பர் மாதம் 12ஆம் திகதி நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே கர்தினால் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

## திருத்தந்தையின் இலங்கை விஜயம்! விரிவான தகவல்கள் உள்ளே.....!

எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை வரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை வருகையின் நிகழ்ச்சி நிரல் உட்பட பல முக்கியமான, சுவையான தகவல்களை கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.


கடந்த செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின்போதே கர்தினால் இந்த விபரங்களை வெளியிட்டார். அவற்றை 6ஆம் பக்கத்தில் காணலாம்.

## தீபாவளி வாழ்த்துக்கள்




இம்மாதம் (ஒக்ரோபர்) 22ஆம் திகதி தீபத்திருநாளாம் தீபாவளியைக் கொண்டாடும் அனைத்து இந்துசமய சகோதரர்களுக்கும் கிறிஸ்தவ மக்களின் சார்பாக தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மன்னா மகிழ்ச்சியடைகின்றது.

## உலக மறைபரப்பு ஞாயிறு ஒக்ரோபர் 19ஆம் திகதி




இவ்வாண்டு உலக மறைபரப்பு ஞாயிறு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகின்றது. "இறையரசின் மதிப்பீடுகளை அறிவிக்க எமது வாழ்க்கை முறையை மாற்றுவோம்" என்னும் கருப்பொருள் இவ்வாண்டு முன்வைக்கப்பட்டுள்ளது. மறையறிவிப்புக்காக இறைமக்கள் தமது செபங்களையும், பரித்தியாகச் செயல்களையும், நிதியுதவியையும் தாராளமாக வழங்கவேண்டுமென திருச்சபைத் தாய் எதிர்பார்க்கின்றாள்.

வழமையான உற்சாகத்தோடும் ஆர்வத்தோடும் மறைபரப்பு ஞாயிறு நிதி சேகரிப்பு முயற்சிகளில் ஈடுபடுமாறும், இந்த நிதி சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்தும் மன்னார் ஆயர் அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்துப் பங்குத்தந்தையர்களுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளுடைய (Pontifical Mission Societies) மன்னார் மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி. ஏ. யூட் குரூஸ் அடிகளார் உலக மறைபரப்பு ஞாயிறுதின வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றார்.

## மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மாநாடு 2015

அடுத்த ஆண்டுக்கான மன்னார் மறைமாவட்ட அருட்பணிகளைத் திட்டமிடும் வருடாந்த அருட்பணித் (மேய்ப்புப்பணி) திட்டமிடல் மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் 6ஆம் (புதன், வியாழன்) திகதிகளில் மடுத்தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்த ஆண்டை திருத்தந்தை பிரான்சிஸ் 'துறவற வாழ்வு ஆண்டு' *(Year of Consecrated Life)* எனப் பிரகடனம் செய்துள்ள நிலையில் மன்னார் மறைமாவட்டத்திலும் அடுத்த ஆண்டு துறவற வாழ்வு ஆண்டாகக் கடைப்பிடிக்கப்படும். எனவே அடுத்த ஆண்டுக்கான அருட்பணித் திட்டமிடல் மாநாட்டின்போது இந்த ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் திட்டங்களும், தீர்மானங்களும் மேற்கொள்ளப்படும்.

மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மாநாட்டுக் குழுவினர் இம்மாநாடு தொடர்பாக ஆலோசனைகளை நடாத்திவருகின்றனர். திட்டமிடல் மாநாட்டின் புதிய செயலர் எவ். றெஜினோல்ட் அடிகளார் இம்மாநாடு தொடர்பான விபரங்களை விரைவில் பங்குத்தந்தையர்களுக்கும் சம்மந்தப்பட்ட ஏனையவர்களுக்கும் அனுப்பிவைப்பார்.

கடந்த ஆண்டுகளில் இந்த மாநாட்டின் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றிய அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்டச் சமூகம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

## ஹச் பெருநாள் வாழ்த்துக்கள்




இம்மாதம் ஒக்ரோபர் 5ஆம் திகதி ஹச்சுப் பெருநாளைக் கொண்டாடிய அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் கிறிஸ்தவ மக்கள் சார்பாக ஹச்சுப் பெருநாள் வாழ்த்துக்களை மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

## மன்னார் மறைமாவட்ட இணையத்தளங்கள்

### பார்வையிடுங்கள்! பயனடையுங்கள்!

Visit our websites :
mannardiocese.net
manna.lk




மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையமான 'கலையருவி'யினால் இரண்டு இணையத்தளங்கள் உருவாக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. **mannardiocese.net** என்ற பெயரில் மன்னார் மறைமாவட்டம் தொடர்பான பல தகவல்களைக் கெண்டதான ஒரு இணையத்தளமும், **manna.lk** என்ற பெயரில் மன்னார் மறைமாவட்டச் செய்திகளையும் ஏனைய திருச்சபைச் செய்திகளையும் உடனுக்குடன் வழங்கும் ஒரு இணையத்தளமும் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பார்வையிடுங்கள், பயனடையுங்கள். இவை பற்றிய உங்கள் கருத்துக்களை எமக்குத் தெரியப்படுத்துங்கள். இயக்குனர், கலையருவி, தொ.பே. 0233233276, 0232250789, *E.mail : nesanmnr@gmail.com*

## தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக மன்னார் ஆயருடன் முதலமைச்சர் கலந்துரையாடல்

வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான விசேட குழு கடந்த செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையை மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியது.

இந்தச் சந்திப்பின்போது வடமாகாணம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன், கல்வி அமைச்சர் த. குருகுலராசா, விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னா

## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## ஆசிரியப்பணி பற்றிய அறிவுசார் மதிப்பீடு

ஆசிரியர்கள்! அகிலமெல்லாம் அறிவுச்சுடரை ஏற்றிவைக்கும் ஆசான்கள்! கல்வி என்ற செல்வத்தை கருத்தோடு வழங்கும் கல்வியாளர்கள். அக்டோபர் ஆறாம் திகதி அகில உலக ஆசிரியர் தினம்.

ஆசிரியர் தினம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு அருமையான நாள். தமக்கு கல்விச் செல்வத்தை ஊட்டும் ஆசிரியப் பெருந்தகைகளை மாணவர்கள் நன்றியோடு நினைக்கும் நன்நாள். ஆசிரியர்கள் தம் பணியின் புனிதத்தை, மேன்மையை, சிறப்பை நினைத்து மகிழ்ந்திருக்கும் பொன்னாள். தமது ஆசிரிய அர்ப்பணத்தை ஆழப்படுத்தும் முக்கியமான நாள்.

### ஆசிரியப் பணியின் மேன்மை

அழிவற்ற செல்வமாகிய – கொடுக்கக் கொடுக்க அதிகரிக்கின்ற செல்வமாகிய கல்விக் கருவூலத்தை வழங்குகின்ற பெருமக்கள் ஆசிரியர்கள். சங்க காலத்திலே அரசர்களைவிட அந்த அரசர்களுக்குக் கல்வி புகட்டிய ஆசான்களுக்கே அதிக மதிப்பு வழங்கப்பட்டதை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. "அறியாமை என்ற இருளைப் போக்கும் ஞான விளக்குகளே ஆசிரியர்கள்" என்றார் சோக்கரிட்டீஸ். "ஆசிரியர்கள் நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் தூண் போன்றவர்கள்" என்றார் மகாத்மா காந்தி.

ஆசிரியர் ஒருவர் மாணவர் செல்லும் வழியைக் காட்டும் திசைகாட்டி. ஆசிரியர் ஒரு சமுதாயத்தை உயர்த்துகின்ற ஏணிப்படி. "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்று சொல்லப்படும்போது ஆசிரியர்கள் நல்லறிவு புகட்டி வழிநடத்திச் செல்லும் கண்கண்ட தெய்வங்கள் என்றே இங்கு அர்த்தப்படுத்தப்படுகின்றது. ஆசு + இரியர் = ஆசிரியர். ஆசு – குற்றம், இரியர் - அகற்றுபவர். குற்றங்களை அகற்றி அறிவை ஊட்டுபவரே ஆசிரியர்.

இன்றைய விஞ்ஞான உலகில் எத்தனையோ நவீன கற்பித்தல் சாதனங்கள் உண்டு. ஆனால் அவை அனைத்தும் ஒரு ஆசிரியர் வழங்கும் அன்பை, பரிவை, அரவணைப்பை, அறிவுரையை, கண்டிப்பைத் தரமுடியுமா?

### யார் பெருமைப்பட முடியும்?

ஒவ்வொரு ஆண்டும் வரும் ஆசிரிய தினத்தில் அனைத்து ஆசிரியர்களும் தமது பணிபற்றி பெருமைப்பட முடியுமா? தமது ஆசிரியப் பணி பற்றி பெருமைப்படக்கூடியவர்கள், மகிழ்ச்சியடையக்கூடியவர்கள் யார்? என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும். எந்த ஆசிரியர் தமது நலனைத் தேடாமல் மாணவர்களின் வளர்ச்சியில், உயர்ச்சியில் அதிக அக்கறை காட்டுகின்றாரோ அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்குரிய தினம்தான் ஆசிரியர் தினம். அவர்களே இத்தினத்தில் பெருமைப்பட முடியும். மகிழ்ச்சி அடைய முடியும்.

### சுய மதிப்பீடு தேவை

ஆசிரியர்கள் தாம் செய்வது ஒரு தொழில் அல்ல – மாறாக அது ஒரு பணி என்பதை முதலில் உணர வேண்டும். கடமைக்காக, சம்பளத்திற்காகப் பணிசெய்கின்றவர்கள்.... பாடசாலைக்குப் பிந்தி வந்து முந்திச் செல்பவர்கள்.... பாடசாலை நிகழ்வுகளில் ஏனோதானோ என்று இருப்பவர்கள்..... சுருக்கமாகச் சொல்லப்போனால் ஆசிரியப்பணியின் புனிதத்திற்கு குந்தகம் ஏற்படும் வகையில் நடப்பவர்கள் தமது பணிபற்றி இச்சந்தர்ப்பத்தில் சுய மதிப்பீடு - சுய விமர்சனம் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

வகுப்பறைப் பாடப்புத்தகங்களில் இருந்து மட்டும் மாணவர்கள் கற்றுக்கொள்வதில்லை. ஒவ்வொரு ஆசிரியரின் வாழ்க்கைப் புத்தகத்தில் இருந்தும் மாணவர்கள் பாடம் கற்றுக்கொள்கின்றனர். ஒவ்வொரு ஆசிரியரின் வாழ்வும் ஒரு திறந்த புத்தகமாக இருக்க வேண்டும். ஆசிரியர்களின் உதாரணமான வாழ்வு மூலமே மாணவர்கள் பாடம் கற்றுக்கொள்கின்றனர்.

### 'மதிப்பு' தேடி வரட்டும்

நம் மண்ணில் குறிப்பாகக் கத்தோலிக்க கிராமங்களில் பங்குத் தந்தையருக்கு அடுத்தபடியாக சமுதாயத்தில் உயர் நிலையில் மதித்துப் போற்றப்பட்டு வந்தவர்கள் ஆசிரியர்கள். ஆனால் இன்று அந்த நிலை இல்லை. இன்று ஆசிரியர்கள் மாணவ சமூகத்தினால் மதிக்கப்படுவதில்லை என்றும் சமூகத்தில் ஆசிரியர்களுக்குரிய இடம் கொடுக்கப்படுவதில்லை என்றும் பொதுவாகக் குறைகூறப்படுகிறது. மதிப்பு என்பது வலிந்து பெற்றுக்கொள்வதல்ல. மாறாக அது இயல்பாக வரவேண்டிய ஒன்று. மாணவர்களைப்பற்றி முடிவு செய்யும் அதிகாரியாக, அன்பு செலுத்தும் அன்னையாக, கட்டுப்பாட்டை வளர்க்கும் தந்தையாக ஆசிரியர்கள் செயற்படும்போது மதிப்பு என்பது அவர்களைத் தேடிவரும். வெறுமனே வகுப்பறைக்குள் தமது பணியை சுருக்கிக்கொள்ளாது சமூகத்தின் மேம்பாட்டிற்காக உழைக்கும்போது – திருச்சபையின் பணிகளில் பங்காளிகளாக மாறும்போது சமூகம் ஆசிரியர்களை இனம் காணும், கனம் பண்ணும், கௌரவிக்கும்!

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
அன்புடன் அருட்பணி. தமிழ் நேசன்,
மன்னா பதிப்பாசிரியர்

## இறந்த ஆன்மாக்களின் பெயர்கள் கார்த்திகை மாதம் வாசிக்கப்பட வேண்டுமோ?

- அருட்பணி. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் -
(இயக்குனர். தேசிய திருவழிபாட்டு ஆணைக்குழு)



- அனைத்துத் திருப்பலிகளிலும் உயிரோடு வாழ்பவர்களுக்காகவும், இறந்தவர்களுக்காகவும் திருச்சபை செபித்துக்கொண்டு வருகின்றது.
- வழிபாட்டு ஆண்டில் விசேடமாக கார்த்திகை மாதம் இறந்த ஆன்மாக்களுக்கென ஒதுக்கப்பட்டு அவர்களின் நித்திய இளைப்பாற்றிக்காகத் திருச்சபை விசுவாசிகள் வழியாக செபிக்கின்றது.
- இறந்தவரின் பெயர் வாசித்தால்தான் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றி கிடைக்கும் என்ற நியதி இல்லை.
- இறந்தவரின் பெயர் /பெயர்கள் கொடுக்கும்போது பெயரைக் கொடுக்கும் நபரும் திருப்பலியில் கலந்துகொள்வது முக்கியமாகும்.
- கார்த்திகை மாதத்தில் சில ஆலயங்களில் சொற்ப பெயர்கள் கொடுக்கப்படும்போது அப்பெயர்களை வாசிக்கலாம், ஆனால் தினமும் ஒரு ஆலயத்தில் 30 - 200 பெயர்கள் கொடுக்கப்படும்போது அப்பெயர்களை வாசிப்பது நடைமுறைச் சாத்தியமில்லை. இச்சந்தர்ப்பத்தில் திருப்பலிக்கு முன்பு பீடத்திற்கு முன்னால் ஒரு பெட்டி வைத்து பெயர்களையும், விரும்பிய பணத்தையும் பெட்டியில் இடலாம்.
- பெயர்களை ஏனைய மாதங்களிலும் - அதாவது இறந்தவரின் பிறந்த தினம், இறந்த தினம் அன்று அல்லது அந்த ஆன்மா நினைவுக்குவரும்போது - திருப்பலியை ஒப்புக்கொடுப்பது நலமாகும்.
- இறந்த ஆன்மாக்களை நினைவுப்படுத்தி, அவர்களுக்காகச் செபித்து, திருப்பலி ஒப்புக்கொடுக்க நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.
- ஒரு திருப்பலியில் எப்போதும் எழுந்தேற்றத்திற்குப் பின்பு பெயர்களை வாசிக்கச் சந்தர்ப்பமும், அதை அடுத்து சகல இறந்த ஆன்மாக்களை பொதுவாக ஞாபகப்படுத்தவும் சந்தர்ப்பம் இருக்கின்றது. கார்த்திகை மாதத்தில் அதிகமாக பெயர்கள் இருக்கும்போது அச்சந்தர்ப்பத்தில் சற்று மௌனம் காத்து இறந்தவர்களை நினைவுபடுத்தி அவர்களுக்காகச் செபிப்பதும் நலமாகும்.
- இறந்த ஆன்மாவிற்கு திருப்பலி ஒப்புக்கொடுத்த பின்பு அவரின் பெயரில் ஏழை எளியோருக்கு தானம் கொடுப்பதும் நலமாகும்.
- சில பெரிய பங்குகளில் கார்த்திகை மாதம் 02ஆம் திகதிக்குப் பின்பு, ஒரு தினத்தில் ஆன்மாக்களுக்காக (பெயர்களை வாசிக்கலாம்) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மறுதினம் அவர்களின் பெயரால் தானம் வழங்கப்படுகின்றது. இதுவும் நல்லதொரு விடயமாகும்.

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2014

### ஐப்பசி

01 - குழந்தை இயேசு திருவிழா - பாவிலுப்பட்டான்கட்டி குடியிருப்பு.
04 - செபமாலை அன்னை திருவிழா - மடுத்திருப்பதி, தங்கநாகர், சகாய மாதா - பாவற்குளம்
06 - செபமாலை அன்னை விழா - பெரிய நீலாசேனை
07 - செபமாலை மாதா - மணல்மோட்டை.
11 - மன்னார் மடுமாதா சிறிய குருமட விழா
14 - செபமாலை அன்னை திருவிழா - தலைமன்னார் ஸ்ரேசன்
19 - உலக மறைபரப்புத் தினம் (காணிக்கை ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்)
20 - மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆயராக அபிசேகம் செய்யப்பட்ட நாள் (1992)
25 - தூய அடைக்கல அன்னை திருவிழா - தட்டாங்குளம்
28 - புனித யூதாததேயு திருவிழா - ஒலிமடு, இரட்டைக்குளம்

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆயர் திருநிலைப்படுத்தல் தின வாழ்த்துக்கள்



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட (Episcopal Anniversary) 22வது ஆண்டு நிறைவை 1992 - 2014) இம்மாதம் (ஒக்ரோபர்) 20ஆம் திகதி நினைவுகூர்கின்றார்.

மேதகு ஆயர் அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டக் குருக்கள், துறவியர் இறைமக்கள் அனைவரினதும் வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்வெய்துகின்றது.

## வன்னியில் இறுதிக்கட்ட போரின்போது இருந்த குருக்கள்மீது தீவிர கண்காணிப்பு

வன்னியில் இறுதிக்கட்டப் போரின்போது இருந்த தமிழ்க் கத்தோலிக்க குருக்கள் கண்காணிக்கப்படுவதாகத் தெரியவருகிறது. இவர்கள் ஐக்கிய நாடுகளின் போர்க்குற்ற விசாரணைக்கு கண்கண்ட சாட்சிகளாக மாறக்கூடும் என்ற அடிப்படையிலேயே இந்தக் கண்காணிப்புக்கான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே கத்தோலிக்க குருவான யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஏ. அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினால் விசாரணை செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள ஆயர் இல்லத்தில் வைத்து இறுதிப்போரின் முக்கிய சாட்சிகள் சர்வதேச விசாரணைக்கு சாட்சியமளிக்கலாம் என்ற சந்தேகத்திலேயே அவர் விசாரிக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் உடுவில் திருக்குடும்ப ஆலயப் பங்குத்தந்தையான அருட்பணி. அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் கடந்த செப்ரம்பர் 02ஆம் திகதி யாழ் ஆயர் இல்லத்தில் வைத்துப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் விசாரிக்கப்பட்டுள்ளார். போரின்போது நேரடியான சாட்சி என்ற அடிப்படையிலேயே அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை ஓகஸ்ட் 20ஆம் திகதியன்று மற்றொரு யாழ் கத்தோலிக்க குருவான அருட்பணி. மௌலிஸ் அடிகளார் விசாரணை செய்யப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறை புனித தோமையார் ஆலயப் பங்குத்தந்தை ஆவார். விசாரணைக்குட்படுத்தப்பட்ட இரண்டு குருக்களும் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

## சிறிய குருமட யூபிலிக் கண்காட்சி
### வினாவிடை போட்டியில் வெற்றிபெற்றோர்

மன்னார் சிறிய குருமடத்தின் 25வது ஆண்டு நிறைவு யூபிலியை முன்னிட்டு நடாத்தப்பட்ட கண்காட்சி வினாவிடைப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் :

**1ம் இடம்:** ஞா. எய்லின் கயானி - (மன்னார் பேராலயப் பங்கு) 41/47, குருமட வீதி, குழந்தையேசுபுரம், மன்னார்.

**2ம் இடம்:** திருமதி. மேரி திரேஸா அற்புதம் - (மன்னார் பேராலயப் பங்கு) வைத்தியசாலை வீதி, மன்னார்.

**3ம் இடம்:** ஏ. அக்னேஸ்- (பெரிய குஞ்சுக்குளம் பங்கு), திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.

**ஆறுதல் பரிசு பெறுவோர் :**

1. மா. மேரி பவுஸ்ரினா, வட்டுப்பித்தான் மடு, உயிலங்குளம்.
2. அ. டெல்சியஸ், சிறிய குருமடம், மன்னார்.
3. எ. அபினா, 404, எமில்நகர் வீதி, மன்னார்.
4. எம். கே. ரஜீவன், மடு வீதி, பெரிய குஞ்சுக்குளம்.
5. ஆர். கிறேசியன் பறுணாந்து, 8ம் வட்டாரம், மடு அன்னை வீதி, பேசாலை.


**பாராட்டுப் பெறுவோர்:**

1. ஜே. யதுசன் டயஸ், 4ம் வட்டாரம், பேசாலை.
2. ஜே. பிறின்சியா, பண்டிவிரிச்சான், மடு.
3. இயேசுநேசன் பிகிறாடோ, 384, வேளாங்கண்ணி வீதி, பள்ளிமுனை மேற்கு, மன்.
4. அ. றுக்சிதா, சிறுகண்டல், முருங்கன்.
5. எ. விதுஷா பீரிஸ், பெ. பண்டிவிரிச்சான், மடு.
6. கௌசிகா விக்டர், 406, மூர்வீதி, மன்னார்.
7. சி. அபிநயா, ப.க.கொ. மேற்கு, மன்னார்.
8. ஊ. கிளன்சன், 8ம் வட்டாரம், பேசாலை.
9. எஸ் . லுமின், குருமட வீதி, மன்னார்
10. எஸ். ஜொணர்த்தன், 8ம் வட்டாரம், பேசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனரீதியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மன்னார் ஆயருடன் ஆலோசனை நடத்தினோம்

## – முதலமைச்சர் விக்னேஸ்வரன் –



இனரீயாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகைக்கும் வடக்கு மாகாண முதமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனுக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த செம்பரம்பர் மாதம் 30ஆம் திகதி அன்று மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பு முடிவடைந்த நிலையில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன், பல்வேறு விடயங்கள் குறித்து மன்னார் ஆயருடன் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. மன்னார் ஆயர் இங்கு இடம்பெறுகின்ற சகல பிரச்சினைகளையும் நன்றாக அறிந்தவர். அவருடைய கருத்துகளை நாங்கள் மதிக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

அந்த வகையில் அவரிடமிருந்து பல விடயங்களைப் பெற்றுக்கொண்டோம். இங்கு நடக்கின்ற பிரச்சினைகள், மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பான கருத்துகளையும் அவர் எமக்குத் தந்து உதவியுள்ளார். மன்னார் ஆயருடன் கலந்துபேசியதில் நாங்கள் பல்வேறு பிரச்சினைகளைத் தெரிந்துகொண்டுள்ளோம். வடமாகாண சபை என்ற வகையில் குறித்த பிரச்சினைகளுக்கு நாங்கள் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தொடர்பில் உறுப்பினர்களோடு கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுப்போம் என்றார்.

குறிப்பாக எவ்விதமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என முதலமைச்சரிடம் கேட்டபோது, மக்கள் சம்பந்தமாக, காணி தொடர்பாக, மக்களின் வாழ்வாதாரம் தொடர்பாகவும், இனப்பிரச்சினைகள் தொடர்பாகவும் இனரீதியாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் நாங்கள் பேசியிருக்கின்றோம். ஆகவே அவற்றினுடைய தாற்பரியங்கள் என்னவென்று அறிந்து அதற்குரிய நடவடிக்கைகளை எம்மால் முடியுமான அளவிற்குச் செய்வோம். இப்பிரச்சினைகளில் அரசியல் கலந்திருப்பதை நான் அறிகிறேன். அரசியல் காரணங்களினாலேயே மக்கள் கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதைத் தெரிந்துகொண்டுள்ளோம்.

ஆனால் எங்களுக்கு மக்களினுடைய நன்மையும், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியதும்தான் முக்கியமே தவிர அரசியல் எமக்குத் தேவையற்ற விடயம். ஆனால் எல்லாவற்றையும் கொண்டுவந்து அரசியலுக்குள் மாட்டி விட்டதால்தான் பல பிரச்சினைகளை நாம் எதிர்நோக்குகின்றோம். ஆனால் நாம் குறித்த பிரச்சனைகள் தொடர்பில் கலந்தாலோசித்து நடவடிக்கைகளை எடுப்போம் என்றார்.


மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம்
கலையருவி கிளரீசியன் வெளியீட்டகத்துடன்
இணைந்து ஒழுங்குசெய்யும்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

உங்கள் ஆன்மீக வழிகாட்டி கிளரீசியன் வெளியீட்டகம் உங்களுக்களுக்கு வழங்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். பெரியோர் சிறியோர், மாணவர்கள் என அனைவரும் வாருங்கள்!

காலம் : ஒக்டோபர் 11,12,13 (சனி, ஞாயிறு, திங்கள்)
நேரம் : மு.ப 10.00 – பி.ப 6.00 மணி வரை
இடம்: கலையருவி, புனித சூசையப்பர் வீதி, மன்னார்

வாருங்கள்! வாங்குகள்! வளம் பெறுங்கள்!
தொடர்பு : இயக்குனர், கலையருவி
023 2250789, 023 3233276, 077 7420811


## மன்னார் மறைமாவட்டம் குருக்களின் புதிய பணிப்பொறுப்புக்கள்

அருட்பணி. ஏ. இராயப்பு - இயக்குனர், மடு தியான இல்லம்
அருட்பணி. எவ். றெஜினோல்ட் - மறைமாவட்ட அருட்பணி மாநாட்டுச் செயலாளர்
அருட்பணி. ஏ. ஞானப்பிரகாசம் - அதிபர், மன்னார் சிறிய குருமடம்
அருட்பணி. ஏ. ஆரோக்கியம் - இயக்குனர். அன்பிய ஆணைக்குழு/ திருவழிபாட்டு ஆணைக்குழு
அருட்பணி. எஸ். நெவின்ஸ் பீரிஸ் - இயக்குனர், இளைஞர் ஆணைக்குழு/ விவிலிய ஆணைக்குழு
அருட்பணி. எஸ். சவுல்நாதன் - பங்குத்தந்தை, பண்டிவிரிச்சான்
அருட்பணி. எம். செல்வநாதன் பீரிஸ் - பங்குத்தந்தை, விடத்தல்தீவு
அருட்பணி. ஏ. டெஸ்மன் ஆஞ்சலோ - பங்குத்தந்தை, ஆட்காட்டிவெளி
அருட்பணி. எஸ். அருட்குமரன் - பதில் பங்குத்தந்தை, தேவன்பிட்டி
அருட்பணி. ஆர். ரெறன்ஸ் குலாஸ் - உதவிப் பங்குத்தந்தை, வவுனியா
அருட்பணி. பி. லோறன்ஸ் லியோன் - உதவிப் பங்குத்தந்தை 1. மன்னார் பேராலயம்
அருட்பணி. எல். றொணிஸ் வாஸ் - உதவிப் பங்குத்தந்தை 2. மன்னார் பேராலயம்
அருட்பணி. ஐ. அன்ரனி சோசை - உதவிப் பரிபாலகர், மடு
அருட்பணி. எம். கொட்வின் கமிலஸ் (சணா) IVD - உதவிப் பங்குத்தந்தை, வங்காலை
அருட்பணி. தேவதாஸ் யூட்தாஸ் (யாழ் மறைமாவட்டம்) - உதவிப்பங்குத்தந்தை, பேசாலை

புதிய பணித்தளங்களைப் பொறுப்பேற்றுள்ள, பொறுப்பேற்கவுள்ள அருட்பணியாளர்களுக்கு மன்னார் மறைமாவட்ட இறைமக்களின் வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது.


## சிறிய குருமட வெள்ளி விழா சிறப்பு மலர்



மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. *'வெள்ளியாகி வெளிச்சமான ....!'* என்ற மகுடத்தைத் தாங்கிய இம்மலரில் சிறிய குருமடம் தொடர்பான பல முக்கிய தகவல்கள், பழைய மாணவர்களின் அனுபவப் பகிர்வுகள் போன்ற பல சுவையான விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

மலர்க்குழுவினருக்கும் சிறப்பாக இதழாசிரியர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அவர்களுக்கும் மன்னார் மறைமாவட்டச் சமூகம் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றது.

## மன்னார் சிறிய குருமட வெள்ளி விழா நிகழ்வுகள்



மன்னார் மறைமாவட்ட மடுமாதா சிறிய குருமடத்தின் 25 வருட நிறைவையொட்டிய வெள்ளிவிழா நிகழ்வுகள் கடந்த செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மன்னார் ஆயரும் இந்நாள் யாழ் ஆயருமான மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மாலை 5.00 மணிக்கு யூபிலி விழாச் சிறப்புத் திருப்பலி இடம்பெற்றது. தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. யூபிலி விழா சிறப்பிதழும் வெளியிடப்பட்டது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## அருட்பணி அன்ரன் அமெரிக்கா பயணம்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. எஸ். அன்ரன் அடிகளார் பங்குப் பணியையும் உயர் கல்வியையும் மேற்கொள்வதற்காக கடந்த ஓகஸ்ட் 19ஆம் திகதி அமெரிக்கா பயணமாகினார். கடந்த காலங்களில் மன்னார் மறைமாவட்ட நிதியாளராக இவர் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்கு எமது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

## புலமைப் பரிசில் பரீட்சை

### மன்/ தலைமன்னார் துறை றோ.க.த.க பா. மாணவி

## மன்னார் மாவட்டத்தில் முதலிடம்

### மன்/ சென். மேரிஸ் வித்தியாலய மாணவி இரண்டாமிடம்
### மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மாணவன் மூன்றாமிடம்

கடந்த செம்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி வெளியாகிய ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் மன்/தலைமன்னார் துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி செல்வி. குணசீலன் ஆன் பொபிஷா 190 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.



ஆன் பொபிஷா

தனது வெற்றிக்கு உறுதுணையாக நின்று ஆதரவளித்த மற்றும் நெறிப்படுத்திய அதிபர் எம். சிவானந்தன், வகுப்பாசிரியர் செல்வி. சுதர்சினி, திருமதி. எக்ஸ். ஜே. பி. ஜெயதீபா அவர்களுக்கும் மற்றும் தனது பெற்றோருக்கும் ஆன் பொபிஷா தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இப்பரீட்சையில் இரண்டாம் இடத்தை 188 புள்ளிகளை பெற்று பேசாலை மன்/ சென். மேரிஸ் வித்தியாலய மாணவி செல்வி. ஒஸ்மன் டிவோனா பெனாண்டோ அவர்களும், மூன்றாம் இடத்தை 187 புள்ளிகளைப் பெற்று மன்/சித்தி விநாயகர் இந்துத் தேசிய பாடசாலை மாணவன் செல்வன் யோகராஜா ரூபஸ் அவர்களும் பெற்றுள்ளனர். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்.)


*மன்னா விநியோகஸ்தர்களே!*
உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!
– மன்னா நிர்வாகம் –


## அருட்பணி. ஏ. ஞானப்பிரகாசம் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பினார்!

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஏ. ஞானப்பிரகாசம் அடிகளார் கடந்த செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பினார்.

கடந்த நாலரை வருடங்களாக (2010 - 2014) அமெரிக்க நாட்டின் நியூயோர்க் நகரில் உள்ள பங்கு ஒன்றில் பங்குப் பணியையும், போர்டம் பல்கலைக்கழகத்தில் (Fordham University) உயர் [illegible]

இவர் தற்போது மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஞானப்பிரகாசம் அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்டத் திருச்சபைச் சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம். அவரை அன்போடு வரவேற்கின்றோம். புதிய பணிப்பொறுப்பை செவ்வனே ஆற்ற இறையருள் வேண்டுகின்றோம்.


வேலைவாய்ப்பைத் தேடிக்கொண்டிருக்கிறீர்களா?

## உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

இலங்கையில் முன்னோடிக் காப்புறுதி நிறுவனமான "செலிங்கோ லை.ஃப்" தனது மன்னார் கிளைக்கு விற்பனை மேற்பார்வையாளர் பதவிக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது.

கல்வித் தகைமை :
- க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 06 பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- க.பொ.த. உயர் தரத்தில் 03 பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

❖ *விற்பனைத் துறையில் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*
❖ *அரச சேவையில் ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.*

தகுதியுடையோர் உங்கள் சுயவிபரக் கோவையை கீழ்வரும் முகவரிக்கு எதிர்வரும் 25.10.2014 க்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி :
*முகாமையாளர், செலிங்கோ லை.ஃப்,*
*பரமேஸ்வரி கட்டிடம், வைத்தியசாலை வீதி, மன்னார்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக பல்கலைக்கழகங்களுக்கிடையிலான படகு ஓட்டப் போட்டியில் மன்னார் மாணவர்கள்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மொறட்டுவப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் இருவர் 2014ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 12,13,14 ஆம் திகதிகளில் பிரான்ஸ் நாட்டில் கிரவலிங்ஸ் நகரில் நடைபெறவிருக்கும் உலக பல்கலைகழகங்களுக்கிடையிலான 13வது படகு ஓட்டப்போட்டியில் (Rowing Championship) கலந்துகொள்வதற்காக இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விளையாட்டுச் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டு கடந்த 07.09.2014 அன்று பிரான்ஸ் பயணமானார்கள்.

மன்னார் எழுத்தூரைச் சேர்ந்த புண்ணியலிங்கம் ஜோய் நிதர்சனன் மற்றும் மன்னார் உயிலங்குளம் சிறுநீலாசேனையைச் சேர்ந்த கிங்ஸ்லி சாள்ஸ் லியோ ஆகியோரே இந்த மன்னார் மண்ணின் மைந்தர்கள் ஆவர்.

மன்னார் எழுத்தூரைச் சேர்ந்த புண்ணியலிங்கம் ஜோய் நிதர்சனன் 2011, 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான படகோட்டப் (Rowing) போட்டிகளில் கலந்து பல பதக்கங்களையும், பரிசுகளையும் பெற்றதுடன் 2013 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகங்களின் சிறந்த வீரருக்கான விருதினையும் பெற்றுள்ளார். மேலும் 2012, 2013, 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்களுக்கான தனிநபர் போட்டியில் மொறட்டுவப் பல்கலைக்கழகம் சார்பில் பங்குபற்றி வெற்றியீட்டியதுடன் வெற்றிக்கிண்ணத்தினையும், கேடயத்தினையும் பெற்றுள்ளார்.

2013ம் ஆண்டு ரஷ்யா நாட்டில் நடைபெற்ற 27வது உலக பல்கலைக்கழக விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றியதுடன், 2014ம் ஆண்டு யூன் மாதம் நடைபெற்ற தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட 29வது (Rowing) வெற்றிக்கிண்ண ஆண்களுக்கான போட்டியில் கலந்துகொண்டு 3ம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் வென்றுள்ளார்.



மன்னார் எழுத்தூரைச் சேர்ந்த புண்ணியலிங்கம் ஜோய் நிதர்சனன்



மன்னார் உயிலங்குளம் சிறுநீலாசேனையைச் சேர்ந்த கிங்ஸ்லி சாள்ஸ் லியோ

இவர் மன்னார் எழுத்தூர் றோ.க.த.க பாடசாலை மற்றும் மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவனுமாவார்.

மன்னார் உயிலங்குளம் சிறுநீலாசேனையைச் சேர்ந்த கிங்ஸ்லி சாள்ஸ் லியோ 2014ல் நடைபெற்ற பல்கலைக் கழங்களுக்கிடையிலான படகு ஓட்டப் போட்டியில் கலந்துகொண்டு 1ம் இடத்தைப் பெற்றுள்ளதோடு இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுடன் போட்டியிட்டு பல பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

இவர் மன்னார் நொச்சிக்குளம் றோ. க. த. க. பாடசாலை மன்/ உயிலங்குளம் றோ. க. த. க. பாடசாலை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவராவர்.

இவர்களோடு இணைந்து இரண்டு சிங்கள மாணவர்களும் செல்கின்றனர்.

## மன்னார் ஊடகவியலாளர் சங்கம் ஆரம்பிப்பு

மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் கடந்த 31.07.2014 அன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரசபை மண்டபத்தில் ஆரம்பமான குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவராக மன்னார் மாவட்டத்தின் பிரபல ஊடகவியலாளரான எல். ஜீ. வாஸ் கூஞ்ஞ அவர்களும், உபதலைவராக ஜனாப் எம். ஏ. காதர் அவர்களும், செயலாளராக என். ஜே. பெலிஸ்டஸ் பச்சேக் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நிர்வாக சபை உறுப்பினர்களாக ஏ. ரி. மார்க் மற்றும் எஸ். ஆர். லெம்பேட் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## நலம்பெறச் செபிப்போம்!

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளார் உடல் நலம் குன்றி இருக்கும் நிலையில் அவர் விரைவில் முழுமையான நலம்பெறச் செபிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.



## பறிபோகும் நிலையில் உள்ள மன்னார் சவுத்பார் மீன்பிடித்துறை

– பேராசிரியர் சூசை ஆனந்தன் –



மன்னாரில் மிக முக்கிய மீன்பிடித்தளங்களில் ஒன்றான சவுத்பார் என்ற மீன்பிடித்துறையை தென் பகுதி மீனவர்களுக்கான ஒரு துறையாக மாற்றும் முயற்சி தீவிரமடைந்திருக்கிறது. பருவகால மீன்பிடித்துறையான சவுத்பாரில் இன்று (சோளகப் பருவம்) எவரும் இல்லாத மனித சஞ்சாரமற்ற தற்காலிகக் குடிசைகளை (மீன்வாடிகள்) மட்டும் கொண்டுள்ளதுடன் இராணுவமானது உள்ளூர் மீனவர்கள் எவரையும் அனுமதிக்க விடாது பாதுகாத்தும் வருகின்றது.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட வாடிகள் பேய்வீடுகள்போல எவருமில்லாது காட்சியளிக்கின்றன. மீன்பிடிப்பதற்கான பருவம் முடிந்து வெளியேறிய தென்பகுதி மீனவர்கள் வாடை மீன் உற்பத்தி பிறந்ததும் ஒக்டோபர் முற்பகுதியில் மீண்டும் குடும்பங்களாக இப்பகுதிக்கு வருகை தருவர். தமக்குரிய வாடிகளில் தங்கி பருவகாலம் முழுவதும் தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

வழமையாக பொதுப்பாடு எனப்படும் சவுத்பார் துறையில் வடபகுதி மீனவர்கள் உட்பட தென்பகுதி மீனவர்களும் தங்கியிருந்து மீன்பிடிப்பது வழமை.

மன்னார் பகுதி மீனவர்கள் குறிப்பாக பனங்கட்டிக்கொட்டு, சாந்திபுரம் பகுதி மீனவர்கள் தென்பகுதி சிங்கள மீனவர்களின் வருகையை எதிர்த்து கடந்த வருடம் ஆர்ப்பாட்டம் நடாத்தியிருந்தனர். தங்களது பகுதியை விட்டுக்கொடுக்க் இப்பகுதி மீனவர்கள் தயாரில்லை. எனினும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சில தென்பகுதி மீனவர்கள் மட்டும் மீன்பிடிக்க அனுமதிக்க ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலும் அவை தோல்வியிலேயே முடிவடைந்தன. ஆயினும் இன்றைய சூழலில் இராணுவம் அப்பகுதியில் எவரையும் உள்ளே அனுமதிக்காது தற்கால வாடிகளை பாதுகாப்பதன் நோக்கம் இப்பகுதியை சிங்களக் குடியிருப்பாக மாற்றுகின்ற ஒரு நடவடிக்கையாகவே நோக்கவேண்டியுள்ளது. மன்னாரில் அரச அதிபர் சிங்களவராக இருப்பதால் காரியம் கைகூடுவதில் எந்தத் தடையும் இருக்கப்போவதில்லை.

யுத்தத்தின்பின் இப்போது இராணுவத்தின் வேலை வடபகுதியில் முடிந்த அளவில் எந்த ரூபத்திலாவது நிலங்களை சூறையாடுவதில்தான் முனைப்புப்பெற்றுள்ளது. கடற்படையில்லாத கரையோரங்களும் இல்லை காலால் படைகள் இல்லாத காடுகளும் இல்லை. காவல்படைகள் இல்லாத கிராமங்களும் இல்லை. எங்கும் இராணுவம் எதிலும் இராணுவமே. போதாக்குறைக்கு சந்திகளில் ரொட்டிக் கடைகள், முக்கிய இடங்களில் உல்லாச விடுதிகள், புத்தர் சிலைகள், அரச மரங்கள் என்று விரிவடைந்து இன்று பருவகால மீன்பிடிக் குடியிருப்புக்களையும் ஆக்கிரமிப்பதில் தனது கை வரிசையை காட்டியிருக்கிறது இராணுவம். இன்று சவுத்பார் நாளை சிலாபத்துறையும் தலைமன்னார் பியரும் பறிபோகலாம். தடுத்து நிறுத்துவார் யாரோ?

# நாட்டு நடப்புக்கள்

## தருவது நாங்கள் ........ தீர்மானிப்பது நீங்கள்........

### இந்தியாவில் 30 நிமிடத்திற்கு ஒரு பாலியல் வன்செயல்: ஆய்வு

இந்தியாவில் ஒவ்வொரு 30 நிமிடத்திற்கு ஒரு பாலியல் வன்செயல் இடம்பெறுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. நாடு முழுவதும் 28 மாநிலங்களில் கடந்த 13 ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வில், பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக மொத்தம் 2,72,844 புகார்கள் பதிவானதாக புள்ளிவிபரம் கூறுகிறது. மேலும் பெண்களுக்கெதிரான வன்முறை அதிகரித்துக்கொண்டே வருவதாக கொமன்வெல்த் மனித உரிமைகள் அமைப்பின் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### மன அழுத்தத்தின் காரணமாக 80,000 பேர் தற்கொலை முயற்சி

இளம் பராந்தியத்தினர் எதிர்கொள்ளும் அதிகரித்த மனஅழுத்தம் உள்ளிட்ட மனநலப் பாதிப்புக்கள் காரணமாக இலங்கையில் வருடாந்தம் 80,000 இளையோர் தற்கொலை செய்துகொள்ள முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி எலன் சிப்னேலர் தெரிவித்தார்.

### சமாதான காலத்தில் மதுபானசாலைகள், தற்கொலைகள் அதிகரிப்பு

அரசாங்கம் சமாதானம் என்று கூறும் கடந்த 5 வருட காலகட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் கலாசார சீரழிவுகள், மாணவர் தற்கொலை, மதுபானசாலைகள் ஆகியவையே அதிகரித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

### ஐந்து ஆண்டுகளில் அரசு குடி வகைகளால் 25,000 கோடி சம்பாதிப்பு

2008 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் இருந்து 2013 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதம் வரையில் மதுபான அனுமதிப்பத்திரங்கள் மூலம் 25,396 கோடி ரூபாவை கலால் வரிகள் என்ற ரீதியில் அரசு பெற்றுள்ளது என்று நிதி மற்றும் திட்டமிடல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### 50 மொழிகளில் தட்டச்சு செய்யும் எட்டு வயதுச் சிறுவன்

சென்னையைச் சேர்ந்த 8 வயது பாடசாலை மாணவன் சுமார் 50 மொழிகளில் தட்டச்சுச் செய்யும் தனது அபாரத் திறமையின் மூலம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி வருகின்றார்.

சென்னை வியாசர்பாடி மகாகவி பாரதியார் நகரைச் சேர்ந்த அப்துல் ஹமீது, ஆமினாள் பேகம் ஆகியோரின் மூத்த மகன் மகமூத் அக்ரம். சென்னையில் மருத்துவர் ராதாகிருஷ்ணன் ஆங்கில மேல்நிலைப் பாடசாலையில் 4 ஆம் வகுப்பில் பயின்று வருகின்றார்.

கணனியில் தட்டச்சு செய்யும் ஆற்றலை சிறு வயதிலேயே பெற்ற அக்ரம் சுமார் 50 இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளிலும் சரளமாக டைப்பிங் செய்யும் திறனை பெற்றார்.

அக்ரமின் திறமையை அறிந்த யுனிக் உலக சாதனைகள் அமைப்பு, தங்களுடைய 2014 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு அக்ரமின் திறமையை வெளிக்காட்டுமாறு அழைப்பு விடுத்தனர். இதனை ஏற்ற சிறுவன் மகமூத் அக்ரம் கடந்த 24-8-2014 அன்று பஞ்சாப்பின் பதிண்டா என்ற இடத்தில் நடைபெற்ற யுனிக் உலக சாதனைகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். இதில் யுனிக் வேர்ல்ட் ரிக் கார்ட்ஸ் அமைப்பின் பெயரை 50 மொழிகளில் தட்டச்சு செய்து அக்ரமின் திறமையை வெளிக்காட்டுமாறு நிகழ்ச்சியாளர்கள் கோரினார்கள். அக்ரமின் திறமையை எல்லோரும் அறிய பெரிய திரையில் திரையிட்டுக் காட்டப்பட்டது. அதன்படி கூடியிருந்த அனைத்து ஊடகங்கள் முன்பாகவும் விழாவுக்கு வந்திருந்த அனைவரின் முன்பாகவும் மகமூத் அக்ரம் தட்டச்சு செய்து எல்லோரையும் ஆச்சரியத்தில் அசத்தினார்.

### 10 யுவதிகளில் ஒருவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்

20 வயதுக்குட்பட்ட யுவதிகளில் 10இல் ஒருவர் (ஏறக்குறைய உலகளவில் 120 மில்லியன் யுவதிகள்) பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுகின்றனர் அல்லது துன்புறுத்தப்படுகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

2012இல் 95,000 சிறுவர்களும் பதின்ம பருவத்தினரும் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் யுனிசெப் கூறியுள்ளது. இதில் இலத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் கரீபியன் பகுதிகளிலேயே அதிகளவான கொலைகள் இடம்பெற்றுள்ளன.

## குஞ்சுக்குளம் மக்களின் நீண்டகாலத் தேவை நிறைவேறுகிறது!

## குஞ்சுக்குளம் பாலம் ரூபா. 27 மில்லியனில் புனரமைப்பு



இடர் முகாமைத்துவ அமைச்சின் 27 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள பாலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

மன்னார் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டதாக மாதா கிராமம், பெரியமுறிப்பு மற்றும் குஞ்சுக்குளம் ஆகிய கிராமங்கள் அமைந்திருக்கின்றன. போக்குவரத்தை மேம்படுத்தும் பொருட்டு இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

வருடந்தோறும் மழை காலங்களின்போது ஏற்படும் வெள்ளப்பெருக்கின் காரணமாக மேற்படி கிராமங்களுக்கான தரைவழிப்பாதை ஊடாக போக்குவரத்து முற்றிலும் தடைப்படுவதுண்டு. இதனால் குறித்த கிராமவாசிகளுக்கு மன்னாரின் ஏனைய பிரதேசங்களுடனான வெளித்தொடர்புகள் தடைப்பட்டு வருகின்றன.


இதனையடுத்து குஞ்சுக்குளம் பகுதியில் மல்வத்து ஓயாவுக்கு மேலாகப் பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# நீதி கிடைக்கும் என்றோ அரசியல் தீர்வு வழங்கப்படுமென்றோ எதிர்பார்க்க முடியாது

### மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை



எமது நாட்டில் நீதி கிடைக்கும் என்றோ சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படுமென்றோ எதிர்பார்க்க முடியாது என்று மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவித்தார். மன்னார் ஆயர் அவர்கள் காணாமல்போனோர் விசாரணைக்குழு தொடர்பாகவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்; இலங்கையில் ஆணைக்குழு விசாரணையென்பது முன்பு பராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததுபோல காலைக்கடன் கழிப்பது போன்றதாகும். நியமிக்கப்பட்ட எந்த ஆணைக்குழுவினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கோ தமிழ் மக்களுக்கோ நன்மையோ தீர்வோ கிடைக்கப்போவதில்லையென்பதே உண்மையாகும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு என்ன நடந்தது? அமைச்சர் சமரசிங்க மேற்படி அறிக்கையில் 95 வீதத்தை நிறைவேற்றிவிட்டோமென்று குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கையை மறுதலிக்கும் வகையில் வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மேற்படி அறிக்கையில் 35 வீதம்தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். மக்களிடம் கேட்டுப்பார்த்தால் 5 வீதமும் நிறைவேற்றப்படவில்லையெனக் கூறுகின்றார்கள்.

வீதிகள் போடப்படுகின்றன, வீடுகள் கட்டிக்கொடுக்கப் - பட்டிருக்கின்றன என்பதனால் எல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று கூறமுடியாது. மக்களுக்கு முதன்மையான விடயங்களை அரசு முதலில் செய்ய வேண்டும். எல்லாமே கண்துடைப்புக்குத்தான் நடக்கின்றது.

ஐ.நா. சபை சர்வதேச விசாரணைக்கு ஆணைக்குழுவை நியமித்துள்ளது என்ற வீம்புக்காக, அரசாங்கம் ஆணைக்குழுக்களை அடுக்கடுக்காக நியமித்துக் கொண்டிருக்கிறது. வெளிநாட்டு நிபுணர்கள் என நியமிக்கப்பட்டிருப்பவர்களுக்கு எவ்வகை அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது? அவர்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட முடியுமா? என்பது பற்றியெல்லாம் தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே உள்நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற எந்த முயற்சியும் எங்களுக்கு நன்மை தரப்போவதில்லை. மாறாக ஏமாற்று வித்தையாகவும் இதய சுத்தியற்றதாகவுமே இருக்கப்போகிறது.

நாட்டிலுள்ள மக்களுக்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோமென்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். அதற்குரிய எந்த ஆயத்தத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை, மக்களையும் அதற்காக ஆயத்தப்படுத்தவில்லை. இராணுவத்தின் பெரும் பகுதி வடபகுதியிலேயே குவிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் மக்களுடன் ஒன்றுடன் ஒன்று கலக்கும் முயற்சியிலேயே தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். போர் முடிந்து பல வருடங்கள் கழிந்தும் அவர்கள் ஏன் இங்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது புரியவில்லை?

பிரயோசனமற்று நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவத்தைப் பயன்படுத்தி உற்பத்திகளைப் பெருக்க அரசு முயற்சிசெய்ய வேண்டும். வடகிழக்கை ஸ்தம்பிக்க வைத்து மக்களின் அன்றாட வாழ்வை சமநிலையற்றதாக்க முயற்சிக்கக்கூடாது என ஆயர் மேலும் தெரிவித்தார்.

# பேசாலை மடுமாதா கியூரியாவின் வருடாந்த வெளிவிழா

மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனைக் கியூரிக்களுள் ஒன்றான பேசாலை மடுமாதா கியூரியா தனது வருடாந்த வெளிவிழாவை தலைமன்னார் பியர் சதாசகாய மாதா பிரசீடியத்தின் அனுசரணையோடு சதாசகாய மாதா ஆலய வளவில் வெகுவிமரிசையாகவும் குதூகலமாகவும் கொண்டாடி மகிழ்ந்தது.

இவ்விழாவுக்கு மடுமாதா கியூரியாவைச் சேர்ந்த 15 பிரசீடிய சகோதரர்கள் கலந்து சிறப்பித்தார்கள். மாதாந்தக் கியூரியா கூட்டத்தோடு தலைமன்னார் பங்குத்தந்தை பி. டெஸ்மன் குலாஸ் அடிகளார் வருகைதந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து ஆழமான மறையுரை வழங்கி, ஆண்டவர் இயேசுவினதும் அன்னை மரியாளினதும் ஆசீர்வாதங்களைப் பெற்றுத்தந்தார்கள்.

மதிய உணவு, சிற்றுண்டி உபசரணை ஏனைய சகல உதவிகளையும் சதாசகாய மாதா பிரசீடிய உறுப்பினர்களும் இன்னும் அவ்வூர் மக்கள் ஆண்கள் பெண்கள் பலரும் ஒன்றிணைந்து வழங்கியமை அவ்வூர் மக்கள் அன்னை மரியாளின்மீது வைத்திருக்கும் பக்தியை வெளிக்காட்டி நின்றது. மடுமாதா கியூரியா சகோதரர்கள் அவர்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்தனர்.



இறுதியாக நாம் அனைவரும் தலைமன்னார் பியர் கடலோரமாக அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி மாதா சிற்றாலயத்துக்குச் சென்று வழிபாடு செய்ததோடு விழா நிறைவுபெற்றது.

# சிறுக்கண்டல் புதிய பங்கு ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டு நிறைவு விழா





சிறுக்கண்டல் புனித அந்தோனியார் ஆலயப் புதிய பங்கின் ஓர் ஆண்டு நிறைவு விழா கடந்த 14- 09- 2014 அன்று புதிய ஆலயக் கட்டிடத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் இப்பங்கின் பங்குத் தந்தை, பங்குமக்கள், அருட்சகோதரி அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறிய நன்றித் திருவிழாவாகவும், கடந்த ஒரு வருடப் பயண வளர்ச்சியைப் பின்நோக்கிப் பார்க்கும் சந்தர்ப்பமாகவும் இவ்விழா அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஓர் ஆண்டு நிறைவு விழாத் திருப்பலியை மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். சிறுக்கண்டல் பங்குத் தந்தை அருட்பணி. எமில் எழில்ராஜ், அருட்பணி. தி. நவரெட்னம், அருட்பணி. அ. இராயப்பு ஆகியோரும் திருப்பலியில் இணைந்துகொண்டனர். இந்த இனிய நாளில் இப்பங்கில் முதல் முறையாக 38 சிறுவர், சிறுமியர் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்திருந்தது.

# சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மன்னார் பனங்கட்டுக்கொட்டு மாணவர்களுக்கு கௌரவம்







மன்னார், பனங்கட்டுக்கொட்டு கிராமத்திலிருந்து 2013ம் ஆண்டு கல்விசார்ந்த நிகழ்வுகளில் பங்குகொண்டு வெற்றிபெற்ற சாதனை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பனங்கட்டுக்கொட்டு கல்வி கலாசார மேம்பாட்டு அமைப்பான பேசோ (PECEO) அமைப்பின் தலைவர் பொறியியலாளர் பி. ஜே. ரமேஸ் மற்றும் வைத்திய கலாநிதி ரி. ஒஸ்மன் ரெனி ஆகியோரின் இணைத்தலைமையில் பனங்கட்டுக்கொட்டுக் கிராமத்தில் நடைபெற்றது.

2013ம் ஆண்டு கல்வித்துறையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை, புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றவர்கள், மாகாண மட்டத்தில், தேசிய மட்டத்தில் வெற்றிபெற்றவர்கள், எலக்ரீயூசன் பரீட்சையில் 100 புள்ளிகளைப் பெற்றவர்கள், UCmass பரீட்சையில் தேசிய ரீதியில் கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்கள் ஆகியோருக்கு இந்நிகழ்வில் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

கிராம மட்டத்தில் உள்ள மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் நோக்கோடு இந்நிகழ்வினை நடாத்தியதன் காரணத்தினால் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், கோட்ட மட்ட ரீதியில் வெற்றிபெற்றவர்கள், மாகாண மட்டத்தில், தேசிய மட்டத்தில் போட்களுக்குத் தெரிவானவர்கள், எலக்ரீயூசன் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் ஆகியோரும் நினைவுப்பரிசு வழங்கப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள் (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# அன்பிய வாரத்தையொட்டி பேராலயப் பங்கில் விளையாட்டுப் போட்டி

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்கிலுள்ள அனைத்துப் பணிக்குழுக்களையும் பங்கு மக்களையும் ஒன்றிணைத்து அன்பியவார நிறைவுநாள் அன்று விளையாட்டுப் போட்டிகள் பேராலயத்தின் தூய இரண்டாம் சின்னப்பர் அரங்கு மைதானத்தில் நடைபெற்றது.

இதனை 'இயேசுவே ஆண்டவர்' பணிக்குழுவினர் முன்னின்று நடத்தினார். ஆண், பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டி, சாக்கோட்டம், முட்டைவீசி எறிதல், வாயில் தேசிக்கரண்டியுடன் ஓடுதல், சங்கீதக் கதிரை, விவிலிய விளையாட்டு, மகிழ்வராங்கம் போன்ற நிகழ்வுகள் அன்பியக் கொண்டாட்டத்தின் சிறப்பு அம்சமாகவும் அனைவரையும் மகிழ்வூட்டுவதாகவும் அமைந்திருந்தது.

அன்றைய தினம் மாலை விழிப்பூட்டல் நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்விற்கு முதியோர் சங்க இயக்குனர் அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம், அன்பிய இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு ஆகியோர் பங்குபற்றி ஆசி உரைகள் வழங்கினார்கள்.

தொடர்ந்து 56 அன்பியப் பணியாளர்கள் திருமலை நகர் சுற்றுலா சென்று திரும்பினர். இதற்குத் துணையாக உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. யேசுராஜா (றேகன்) செயற்பட்டார். அன்பிய வார நிகழ்வுகள் யாவும் நெஞ்சைவிட்டகலா நிகழ்வுகளாக அமைந்திருந்தன.

**தகவல் : பேராலய அன்பியப் பணியாளர்களின் செயலாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தையின் இலங்கை வருகை நிகழ்ச்சிநிரலும், முக்கிய தகவல்களும்

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக கத்தோலிக்க திருச்சபையின் கொழும்புப் பேராயர் இல்லம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. கட்டுநாயக்கவிலிருந்து திறந்த வாகனத்தில் (ரத பவனியாக) நீர்கொழும்பு – கொழும்பு வீதியூடாக திருத்தந்தை கொழும்புக்கு அழைத்துவரப்படுவார் என்றும் இலங்கை விஜயத்தின்போது திருத்தந்தை பிரசித்திபெற்ற மடுத்திருப்பதிக்குப் பயணிப்பார் என்றும் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 14ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் விசேட திருப்பலி நாட்டு மக்களுக்காக திருத்தந்தையால் நடாத்தப்படும். இனமத வேறுபாடின்றி எமக்கே உரிய கலாசார மரபுகளுடன் நாம் திருத்தந்தையை வரவேற்கத் தயாராவோம் என்றும் ஆண்டகை கோரிக்கை விடுத்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயம் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு பேராயர் இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் செய்தியாளர் மாநாட்டில் திருத்தந்தையின் இலங்கை விஜயத்துக்காக உருவாக்கப்பட்டுள்ள இணையத்தளம் மல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. மேலும் திருத்தந்தையின் இலங்கை விஜயத்துக்கான நினைவுச்சின்னமும் வெளியிடப்பட்டது. திருத்தந்தையின் இலங்கை வருகையின் கருப்பொருளாக "அன்பில் நிலைத்திருங்கள்" என்ற வாசகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் காலி மறைமாவட்ட ஆயர் ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை, கொழும்பு மறைமாவட்டத் துணை ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

செய்தியாளர் மாநாட்டில் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் குறிப்பிட்டதாவது :

### அழைப்பு விடுத்தோம்

2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் புதிய திருத்தந்தையாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டது வாக்களிப்பில் கலந்துகொண்ட கர்தினால் என்ற அடிப்படையில் நான் அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கச் சென்றிருந்தேன். அப்பொழுது அவரிடம் ஆசியாவுக்கு விஜயம் செய்யுமாறும் ஆசியாவின் அனைத்து விடயங்களையும் பிரதிபலிக்கின்ற இலங்கைக்கு வருமாறும் நான் கோரிக்கை விடுத்தேன். எனது அழைப்பை ஏற்றுக்கொண்ட அவர் கடிதம் மூலம் அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

### வத்திக்கான் தூதுக்குழு

அதன் பின்னர் இலங்கை வந்தடைந்த நான் கத்தோலிக்க திருச்சபை ஆயர்களுடன் கலந்துரையாடிவிட்டு திருத்தந்தைக்கு இலங்கை வருமாறு அழைப்பு விடுத்துக் கடிதம் அனுப்பினோம். அதேபோன்று ஒரு அழைப்பை இலங்கை அரசாங்கமும் அனுப்பியிருந்தது. அதன்படி திருத்தந்தை இலங்கைக்கு வருவதை அண்மையில் உறுதிப்படுத்தினார். அண்மையில் எமது கத்தோலிக்க ஆயர்குழு உரோம் சென்றிருந்தபோது திருத்தந்தை இலங்கை வருவதை மீளவும் உறுதிப்படுத்தினார். அதன் பின்னர் வத்திக்கானில் இருந்து அதிகாரிகள் மட்டத் தூதுக்குழு இலங்கைக்கு வந்து திருத்தந்தையின் வருகைக்கான ஏற்பாடுகளை ஆராய்ந்துவிட்டுச் சென்றுள்ளது.

### 13ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வருகை

எதிர்வரும் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இலங்கை வரவுள்ள திருத்தந்தை 15ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார். ஜனவரி மாதம் 13ஆம் திகதி காலை 9.00 மணிக்கு திருத்தந்தை கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைவார். அங்கு அவருக்கு உத்தியோகபூர்வ வரவேற்பு அளிக்கப்படும்.

### ரத பவனியாக கொழும்புக்கு

பின்னர் கட்டுநாயக்கவிலிருந்து திறந்த ரத பவனியாக (திறந்த வாகனத்தில்) நீர்கொழும்பு – கொழும்பு வீதியூடாக அழைத்துவரப்படுவார். இதன்போது வீதியில் இருபுறங்களிலிருந்தும் மக்கள் அவரைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். பின்னர் 12.45 மணியளவில் அவர் கொழும்பு பேராயர் இல்லத்தை வந்தடைவார். அங்கு ஆயர்களுடன் கலந்துரையாடல் நடைபெறும்.

### ஜனாதிபதியுடன் சந்திப்பு

மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான மரியாதையின் நிமித்தமான சந்திப்பு இடம்பெறும். இந்த நிகழ்வு 4.45 மணியளவில் இடம்பெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது திருத்தந்தையின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு விசேட தபால்தலை (முத்திரை) ஒன்றும் வெளியிடப்படும்.

### சர்வமதத் தலைவர்களுடன் சந்திப்பு

அதன் பின்னர் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்துக்கு விஜயம் செய்யும் திருத்தந்தை அங்கு நாட்டின் பௌத்த, இஸ்லாமிய, இந்து மற்றும் கிறிஸ்தவத் தலைவர்களைச் சந்திப்பார். இதில் அனைத்து மதங்களினதும் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று நம்புகின்றோம். அந்தச் சந்திப்பையடுத்து அவர் வத்திக்கான் தூதரக இல்லத்தில் இரவு தங்குவார்.

### காலிமுகத்திடலில் திருப்பலி

மறுநாள் 14ஆம் திகதி காலை திருத்தந்தை காலிமுகத்திடலுக்கு வருகைதருவார். அங்கு நாட்டு மக்களுக்காக விசேட திருப்பலி



நடைபெறும். இந்தச் சந்தர்ப்பத்தில் யோசப்வாஸ் அடிகளாரை புனிதராகத் திருநிலைப்படுத்தும் விசேட ஆராதனையை நடத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இந்தச் செயற்பாடு இனிதே நடைபெறும் என்று நம்புகின்றோம். இதற்கான ஏற்பாடுகள் வத்திக்கானிலும் இலங்கையிலும் இடம்பெறுகின்றன. காலிமுகத்திடலில் 8.30 மணிக்கு விசேட திருப்பலி நடைபெறும்.

### மடு விஜயம்

அதனையடுத்து பிற்பகல் 2.00 மணிக்கு திருத்தந்தை விசேட உலங்குவானூர்தி மூலம் மடுத் தேவாலயத்துக்குப் பயணிப்பார். மாலை 3.30 மணியளவில் மடுத்தேவாலயத்தை அவர் சென்றடைவார். மடுவில் உலங்குவானூர்தி தரையிறக்கப்படும் இடத்திலிருந்து பாப்பரசரை திறந்த ரத பவனியூடாக (திறந்த வாகனத்தில்) மடுத் தேவாலயத்துக்கு அழைத்துச்செல்ல எதிர்பார்க்கின்றோம். இன்னும் அந்த ஏற்பாடு உறுதிபடுத்தப்படவில்லை. அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றோம்.

### மடுவில் விசேட ஆசியுரை

மடுத் தேவாலயத்தில் விசேட ஆராதனை நடைபெறாது. அங்கு விசேட ஆசியுரையே நடைபெறும். திருத்தந்தை விசேட ஆசியுரையை நிகழ்த்துவார். அதன்பின்னர் மன்னார் மறைமாவட்ட ஆயர் விசேட ஆசியுரை ஒன்றை வழங்குவார். சுமார் ஒரு மணி நேரம் திருத்தந்தை மடுத்தேவாலயத்தில் தங்கியிருப்பார். அதன்பின்னர் உலங்குவானூர்தி ஊடாக கொழும்பு திரும்புவார்.

### பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு விஜயம்

மறுநாள் ஜனவரி மாதம் 15ஆம் திகதி காலை 8.00 மணியளவில் கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா விமானம் நிலையத்தை திருத்தந்தை சென்றடைவார். அங்கிருந்து 9.00 மணியளவில் பிலிப்பைன்ஸ் நாட்டுக்குப் பயணிப்பார். இவைதான் திருத்தந்தையின் இலங்கை விஜயத்துக்குரிய நிகழ்ச்சி நிரலாகும்.

### குண்டுதுளைக்காத வாகனம் இல்லை

இதேவேளை இலங்கை வரும் திருத்தந்தை குண்டு துளைக்காத வாகனம் எதனையும் பயன்படுத்தமாட்டார். மாறாக சாதாரன வாகனங்களையே அவர் பயன்படுத்துவார். அவருக்காக வத்திக்கானிலிருந்து விசேட வாகனங்கள் எதுவும் கொண்டுவரப்படமாட்டாது. மக்களைவிட்டுத் தூரச் செல்லும் வகையில் எந்தவொரு ஏற்பாட்டையும் திருத்தந்தை விரும்பமாட்டார். அவர் மக்களுக்கு அருகில் இருப்பதையே விரும்புவார்.

### ஜோசப்வாஸ் அடிகளார் திருநிலைப்படுத்தல்

இதேவேளை ஜோப்வாஸ் அடிகளாரை புனிதராக திருநிலைப்படுத்தும் விசேட ஆராதனையை நடத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இந்தியாவின் கோவாப் பிரதேசத்தில் இருந்து இலங்கைக்குவந்து இலங்கையின் கத்தோலிக்க மக்களுக்காக சேவையாற்றிய ஜோசப்வாஸ் அடிகளார் கத்தோலிக்க மக்களுக்காக உன்னத பணியைச் செய்தவர். எனவே அவரை புனிதராக திருநிலைப்படுத்தும் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. அது சிறந்த முறையில் நடைபெறும் என்று நம்புகின்றோம்.

**கேள்வி :** ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் திருத்தந்தை நாடு ஒன்றுக்கு வரமுடியாது என்று கூறப்படுகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கையில் தேர்தல் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் நிலைமை என்ன?

### அரசியல் கருவியாக பயன்படுத்த இடமளிக்க மாட்டோம்

பதில் : திருத்தந்தை நாடு ஒன்றில் தேர்தல் பிரசாரம் நடைபெறும்போது அந்த நாட்டுக்கு விஜயம் செய்யமாட்டார். அந்த விடயத்தை இலங்கை அரசாங்கத்துக்கு நாங்கள் அறிவித்துவிட்டோம். இந்த விடயத்தில் கத்தோலிக்க திருச்சபையின் கோரிக்கையை அரசாங்கம் கவனத்திற்கொள்ளும் என்று நம்புகின்றோம்.

திருத்தந்தை பிரான்சிஸின் வருகையை இந்த நாட்டில் எவரும் அரசியல் கருவியாகப் பயன்படுத்துவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். அந்த வகையில் தேர்தல் பிரசாரக் காலத்தில் திருத்தந்தையினால் இலங்கைக்கு விஜயம்செய்ய முடியாது என்பதனை அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளோம். அதன்படி அரசாங்கம் நடந்துகொள்ளும் என்று நம்புகின்றோம்.

### ஆசிய மரபுகளுடன் வரவேற்போம்

இந்நிலையில் இன மத வேறுபாடின்றி எமக்கே உரிய கலாசார மரபுகளுடன் நாம் திருத்தந்தையை வரவேற்கத் தயாராகுவோம் என்பதே எனது கோரிக்கையாகும். ஆசியாவில் இலங்கை சிறிய நாடு. எனினும் ஆசியாவைப் பிரதிபலிக்கும் வகையில் அனைத்து விடயங்களும் இங்கு உள்ளன.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

திருத்தந்தையின் வருகையையொட்டி

# ஆன்மீக ஆயத்தத்திற்கு மன்னார் ஆயர் அழைப்பு

## இது தொடர்பாக குருக்களுக்கு சிறப்பு மடல்

திருத்தந்தையின் வருகையையொட்டி ஆன்மீக ஆயத்தங்களில் ஈடுபடுமாறு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை மன்னார் மறைமாவட்ட இறைமக்களைக் கேட்டுள்ளார். இது தொடர்பாக அவர் பங்குத்தந்தையர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்தக் கடிதம் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி ஞாயிறு திருப்பலியில் மக்களுக்கு வாசித்துக் காட்டப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். **அந்தக் கடிதத்தின் முழு விபரமும் வருமாறு :**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எதிர்வரும் 13.01.2015 தொடக்கம் 15.01.2015 வரை எமது நாட்டிற்கு வருகை தரவுள்ளதை நீங்கள அறிவீர்கள். இந்த மகிழ்ச்சியான இறையாசீர் நிறைந்த வருகைக்காக நாங்கள் ஆன்மீக ரீதியில் எங்களை ஆயத்தம் செய்ய வேண்டும். இதற்காக ஐப்பசி மாதம் 14ஆம் திகதி தொடக்கம் வருகின்ற தை மாதம் 14ஆம் திகதிவரை பங்குகளிலும் அன்பிய மட்டங்களிலும் குடும்ப மட்டத்திலும் இடம்பெறும்படியாக வழிபாட்டு முறைகள் ஆயத்தம் செய்யப்பட்டு பங்குகளுக்கு அனுப்பிவைக்கப்படட உள்ளன. இந்த நாட்களில் பரிசுத்த தந்தையினுடைய வாழ்வும், பணியும்பற்றிச் சிறப்பாகச் சிந்தித்து வேண்டுதல் செய்ய எம்மை அர்ப்பணிப்போம்.

### அருளாளர் யோசவ்வாசிற்கு புனிதர் பட்டமளித்தல்

திருத்தந்தை அவர்கள் எமது நாட்டின் திருத்தூதரான அருளாளர் யோசவ்வாசிற்கு புனிதர் பட்டம் அளிக்கவுள்ளார். இந்த அரிய நிகழ்வுடன் திருத்தந்தையின் திருப்பலி காலிமுகத்திடலில் தை மாதம் 14ஆம் திகதி காலையில் இடம்பெறும். முதன்முறையாக எம்நாட்டிற்கு ஒரு புனிதரைத் தந்த இறைதந்தைக்கு நன்றி கூறுவோம்.

### திருத்தந்தையின் மருதமடு வருகை

அன்று பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 4.30 மணி மட்டும் மருதமடுத்திருப்பதியில் மடு அன்னைக்கு வழிபாடும், பொது மக்கள் சந்திப்பும் இடம்பெறும், இந்நிகழ்வுக்கு வருகைதரவுள்ள மாற்றாற்றல் கொண்டவர்களைத் திருத்தந்தை சிறப்பாகச் சந்தித்து அவர்களுக்கு ஆசீர் வழங்கிச் செபிப்பார்.

மடுத்திருப்பதியில் தை மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதிவரை மூன்று நாள் வழிபாடுகள் இடம்பெற்று, 14 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு விழாத்திருப்பலியும் இடம்பெற்று மாலையில் திருத்தந்தையின் வருகைக்காக மக்கள் ஆயத்தம் செய்யப்படுவர். வரலாற்றில் இதுவே முதல் தடவை ஒரு திருத்தந்தை கொழும்புக்கு வெளியே பயணம் செய்கின்றார். அதுவும் மருதமடு திருத்தலத்திற்கு விஜயம் செய்வது வடக்கு கிழக்கு மக்களுக்கு கிடைத்த மாபெரும் ஆசீர்வாதமாகும். இதற்காக நாம் ஒவ்வொருவரும் பங்குகளிலே செய்யப்படுகின்ற பொது ஆயத்த வழிபாடுகளின் வழியாகவும் தனியாகவும் எம்மை ஆயத்தம் செய்வோம்.

## அருளாளர் யோசவ்வாஸ் புனிதராக உயர்த்தப்பட திருத்தந்தை பிரான்சிஸ் அங்கீகாரம்

1ஆம் பக்கத் தொடர்ச்சி

யோசவ்வாஸ் அடிகளாரைப் புனிதராக உயர்த்துவதற்கான அங்கீகாரத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அளித்ததை அடுத்து கடந்த செப்ரெம்பர் 21ஆம் திகதி மன்னார் மறைமாவட்டம் உட்பட இலங்கை நாட்டின் அனைத்துக் கத்தோலிக்க ஆலய மணிகளும் மகிழ்ச்சி ஒலியெழுப்பின. இறைமக்கள் நன்றிச் செபங்களை ஏறெடுத்தனர்.

இது தொடர்பான அறிவித்தலை இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்களும், அருளாளர் யோசவ்வாஸின் புனிதர் பட்ட ஆயத்தங்களுக்கான தேசிய செயலகத்தின் தலைவர் ஆயர் வியான்னி பெனாண்டோ ஆண்டகையும் கூட்டாக இணைந்து விடுத்திருந்தனர். மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையும் மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கு இதுதொடர்பான அறிவித்தலை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தருடைய ஆட்சியின்போது கத்தோலிக்க மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளானார்கள். தமது கத்தோலிக்க விசுவாசத்தைக் கைவிடும்படி துன்புறுத்தப்பட்டார்கள். கத்தோலிக்க விசுவாசம் அழிவின் விளிம்பில் இருந்தது. 29 வருடங்களாக எந்தவொரு கத்தோலிக்க குருவும் இலங்கையில் இல்லாதவேளையில் 1651ஆம் ஆண்டு ஒரு பிச்சைக்காரனைப்போல வேடமணிந்து ஒல்லாந்தருடைய அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யோசவ்வாஸ் அடிகளார் இலங்கை மண்ணில் காலடி பதித்தார்.

இந்தியாவின் கோவா என்ற இடத்தில் இருந்து வந்த இவர் மன்னார் சவுத்பார் கடற்கரையில் இறைவழிநடத்தலால் கரையிறங்கினார். அழிவின் விளிம்பில் இருந்த இலங்கை மக்களின் கத்தோலிக்க விசுவாசத்தைக் மீளக்கட்டியெழுப்பிய மாவீரராக யோசவ்வாஸ் அடிகளார் போற்றப்படுகின்றார். 1995ஆம் ஆண்டு அன்றைய திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இலங்கைக்கு வந்தபோது யோசவ்வாஸ் அடிகளாருக்கு அருளாளர் பட்டம் அளித்தார். இலங்கை மக்கள் யாவரும் அடிகளாருடைய புனிதர் பட்டத்திற்காகச் செபித்துவந்த நிலையில் தற்போது அவர் புனிதராகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளார் என்ற மகிழ்ச்சியின் செய்தி வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# வடமாகாண சபைக்கு அரசு முட்டுக்கட்டை

## அமெரிக்கப் பிரதிநிதியிடம் சுட்டிக்காட்டினார் யாழ். ஆயர்

வடக்கு மாகாண ஆளுநரை மாற்ற வேண்டும் என்ற தமிழ் மக்களின் விருப்பத்தைப் புறந்தள்ளி கொழும்பு அரசு செயற்படுவதுடன், வடக்கு மாகாண சபையை செயற்படவிடாமலும் முட்டுக்கட்டைகள் போடுவதாக அமெரிக்காவின் பிரதிப் பிரதமத் திட்டப் பணிப்பாளர் அன்றூ மன்னிடம், யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டு வந்துள்ள அமெரிக்காவின் பிரதிப் பிரதம திட்டப் பணிப்பாளர், யாழ். ஆயரை கடந்த செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி அன்று காலை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். சுமார் ஒரு மணி நேரம் வரையில் நீடித்த இந்தச் சந்திப்புத் தொடர்பாக, ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் கருத்துத் தெரிவிக்கையில்,

முக்கியமாக வடக்கு மாகாண சபையைச் செயற்படவிடாமல் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற தடைகள் - முட்டுக்கட்டைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் மக்கள் விருப்பத்துக்கு மாறாக, வடக்கு மாகாண ஆளுநராக மீண்டும் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறியை நியமித்துள்ளனர். இது



வடக்கு மாகாண சபையை இயங்கவிடாமல் செய்வதற்கான நடவடிக்கை என்பது தொடர்பாக எனது கருத்தைத் தெரிவித்தேன். அவர்களும் எனது கருத்தை ஏற்றுக்கொண்டனர்.

இங்குள்ள மக்கள் மகிழ்ச்சியாக இருக்க, அவர்களது வாழ்வில் திருப்பம் ஏற்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியதாக யாழ் ஆயர் மேலும் குறிப்பிட்டார்.

# மன்னார் ஆயரைக் கைது செய்ய முயன்றால் விளைவுகள் விபரீதமாகும்

## செல்வம் அடைக்கலநாதன் எம். பி. எச்சரிக்கை

பொதுபலசேனா அமைப்பின் எண்ணங்களை அரசு செயற்படுத்துமாக இருந்தால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையைக் கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்த வேண்டுமென பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் வலியுறுத்தியுள்ளமை தொடர்பாகச் செல்வம் எம். பி. விடுத்துள்ள அறிக்கையில், எங்களுடைய ஆயரைக் கைது செய்வது தொடர்பாக பொதுபலசேனா அமைப்பின் எண்ணங்களை அரசு ஏற்றுச் செயற்படுமாக இருந்தால் அது பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும். வடக்கு, கிழக்கு மக்கள் கொந்தளிக்கும் நிலைமை ஏற்படும். நியாயவாதிகளை அடக்க நினைப்பது மிகவும் மோசமான மனித உரிமை மீறல் என்பதனை அரசுக்குக் கூறவிரும்புகின்றேன் என அவர் குறிப்பிட்டார்.

# வைர விழாக் காணும் இலங்கை மாதா தேசிய குருமடம்

அருட்பணி. பி. கிறிஸ்துநாயகம், விரிவுரையாளர், தேசிய குருமடம், கண்டி.

கண்டி அம்பிட்டியாவில் அமைந்திருக்கும் இலங்கை மாதா தேசிய குருமடமானது 2014 – 2015ம் கல்வியாண்டில் தனது வைர விழவைக் கொண்டாடுகின்றது. பாப்பிறைக் குருமடமாக ஆரம்பிக்கப்பட்டு 1954 – 1955ம் கல்வியாண்டில் இலங்கை மாதா தேசியக் குருத்துவக் கல்லூரியாக மாற்றம் பெற்றது. அன்று தொடக்கம் இன்றுவரை இலங்கை முழுவதும் ஏன் வெளிநாடுகளிலும் பணி செய்யும் பல நூற்றுக்கணக்கான குருக்களை இக்குருமடம் உருவாக்கி உள்ளது, இன்றும் உருவாக்கிக்கொண்டு இருக்கின்றது.

இந்தக் கல்வியாண்டில் இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களையும் மற்றும் பதினான்கு துறவற சபைகளையும் சேர்ந்த 267 மாணவர்கள் கல்விகற்றுக்கொண்டு இருக்கின்றார்கள். வைரவிழாக் காணும் இக்குருமடத்தின் ஆரம்பம்தொட்டு இன்றுவரைக்குமான வரலாறு மிகவும் சுருக்கமாக இங்கு தரப்படுகின்றது.

1890இல் 13ம் சிங்கராயர் பாப்பரசராக இருந்தபோது இந்தியா, இலங்கை, பர்மா போன்ற தெற்காசிய நாடுகளுக்கு ஒரு திருப்பணிக் கல்லூரியை அமைக்கும் பொறுப்பு மொன்சிஞ்ஞோர் லடிஸ்லோஸ் சலஸ்கி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவர் இந்தியா, இலங்கை, பர்மா எனும் நாடுகளுக்குப் பிரதிநிதியாக பதவி உயர்த்தப்பட்டபோது அவரது விருப்பமாக கண்டியைத் தெரிவுசெய்தார். கடல் மட்டத்திலிருந்து 2000 அடி உயர்த்தில் அழகான, பசுமை படர்ந்த, மலைசார்ந்த தும்பறைப் பள்ளத்தாக்கை நோக்கியவண்ணமாக இருந்த அம்பிட்டியா, அவரின் உள்ளத்தைக் கொள்கைகொண்டது.

1893இல் பாப்பிறைத் திருப்பணிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, இயேசுசபை குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் முதலாவது பொறுப்பாளராக அருட்பணி. சில்வெயின் கொறோஸ்ஜீன் நியமிக்கப்பட்டார். இக்குருமடக் கட்டிடத்தின் முக்கிய பகுதி 1899ஆம் ஆண்டளவில் முடிக்கப்பட்டது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் மறைமாவட்டங்களிலிருந்து மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு இங்கு அனுப்பப்பட்டனர். இங்கு பயிற்சியளிக்கப்பட்டு, திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் தங்கள் நாடுகளில் முக்கிய பதவிகளை ஏற்றார்கள். புனித இராயப்பர் பாப்பிறைச் சபையினால் முதன் முதலாக உதவிசெய்யப்பட்ட பெரிய குருத்துவக் கல்லூரிகளில் இக்கல்லூரியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இக்குருத்துவக் கல்லூரியில் இந்தியாவைச் சார்ந்த பல அருட்தந்தையர்கள் கல்விகற்றதை இன்றும் இங்கு வருகைதரும்போது மகிழ்ச்சியுடன் நினைவுகூருகின்றார்கள்.

1954 – 1955ம் கல்வியாண்டில் அம்பிட்டிய பாப்பிறை திருப்பணிக் கல்லூரியானது இலங்கை மாதா தேசிய குருத்துவக் கல்லூரியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. பாப்பிறைக் கல்லூரியானது இந்தியாவிலுள்ள பூனாவிற்கு இடமாற்றப்பட்டது. இத்தேசியக் குருத்துவக் கல்லூரியை நிர்வகிக்கும் பொறுப்பை அமலமரித் தியாகிகள் சபைக் குருக்கள் பொறுப்பேற்றுக்கொண்டார்கள். அப்போது 66 மறைமாவட்டக் குருமாணவர்களும், 44 துறவறசபை மாணவர்களும் இங்கு பயிற்சிபெறத் தொடங்கினார்கள்.



இக்கல்லூரியின் முதல் அதிபராக அமெரிக்காவைச் சேர்ந்த அருட்பணி. சக்கற் (அ.ம.தி) அவர்களும், (1955 – 1964) இரண்டாவது அதிபராக 1964இல் அருட்பணி. டல்ஸ்டன் போர்ப்ஸ் அவர்களும் பொறுப்பேற்றுக்கொண்டார்கள்.

### 1972இல் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக்கு நிர்வாகம் மாற்றப்படல்

அமலமரித் தியாகிகள் சபையின் கட்டுப்பாட்டிலிருந்த தேசியக் குருத்துவக் கல்லூரி இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. உதவி அதிபராக இருந்த ஜேம்ஸ் குக் (அ.ம.தி) 1972இல் புதிய அதிபராகப் பொறுப்பேற்றார். 1974இல் கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஹறல்ட் பண்டிதரட்ண முதல் மறைமாவட்ட அதிபர் என்றும் பெருமையுடன் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவரின் காலத்தில் மறைமாவட்டக் குருக்கள் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டதோடு மெய்யியல் பீடம் உரோமையிலுள்ள 'உர்பான்' பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டு மெய்யியல் இளங்கலைமாணிப்பட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன் பின்பு அதிபர்களாக 1981 – 1991 வரை அருட்பணி. ஜோ டி மெல், 1991 – 1998 வரை அருட்பணி. இம்மானுவேல் பர்ணாந்து (தற்போதைய கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர்) 1998 – 2001 வரை அருட்பணி. மேரியஸ் பீரிஸ் (தற்போதைய கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயர்) 2001இல் அருட்பணி. வலனஸ் மெண்டிஸ் (தற்போதைய சிலாப மறைமாவட்ட ஆயர்) அவர்களும், அவரைத் தொடர்ந்து கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. அன்ரனி ஜெயக்கொடியும் 2011இல் தற்போதைய அதிபராகப் பணிசெய்கின்ற அருட்பணி. எல்மோ டயசும் பொறுப்பேற்றுக்கொண்டார்கள்.

தேசியக் குருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டு, தனது வைர விழாவைக் கொண்டாடும் இக்குருத்துவக்கல்லூரி இலங்கைத் திருச்சபையின் உயிர்நாடியாக விளங்குகின்றது. எதிர்காலக் குருக்களை உருவாக்கும் இதன் பணி தொடர இக்கல்லூரியின் பாதுகாவலியாம் இலங்கை மாதா தொடர்ந்து பரிந்துபேசுவாளாக.

# கத்தோலிக்க மக்களுடைய வாக்குகளை அரசு இழக்கக்கூடும்

## எச்சரிக்கின்றார் மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன

அரசு கத்தோலிக்க மக்களின் வாக்குகளை இழக்கக்கூடும். பொதுபல சேனா போன்ற அடிப்படைவாத அமைப்புக்களின் செயல்களால் அரசுக்கு சிறுபான்மை இன மக்களின் வாக்கு வங்கியில் பாரதூரமான சரிவு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார் மீன்பிடி நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன. இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இந்த நிலைமை தொடர்ந்தால் கத்தோலிக்க மக்களின் வாக்குகளையும் அரசு இழக்கநேரிடுவதுடன், ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள பௌத்த வாக்குகளை மட்டுமே பெற்று தேர்தலில் வெற்றிபெறவேண்டிய நிலைமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கட்டாயம் ஏற்படும். அரசின் சிறுபான்மை இன வாக்கு வங்கியானது முற்றாகச் சரிந்துள்ளது. போருக்குப் பின்னர் தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமற்போனது. பொதுபலசேனா முஸ்லிம் வாக்குகளையும் அரசுக்கு கிடைக்காமல் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

போர் காரணமாக தமிழ் மக்களின் வாக்குகளை அரசு இழந்துவிட்டது. அண்மைச் செயற்பாடுகளால் முஸ்லிம்களின் வாக்குகளையும் அரசு இழந்துள்ளது. சிங்களவர்களின் வாக்குகளையும் இழக்கும் நிலைமைக்கு வழிவகுக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அமைச்சரவை கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

நிலைமை இப்படியே தொடருமானால், கத்தோலிக்க வாக்குகளையும் அரசு இழந்து, வெறும் பௌத்த சிங்கள வாக்குகளை மாத்திரம் நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வாக்குச் சுதந்திரத்தை பணத்திற்கும் மதுவுக்கும் இழந்துவிட வேண்டாம்

## ஊவா தேர்தல் தொடர்பாக பதுளை ஆயர்

பெறுமதி வாய்ந்த வாக்குகளையும் வாக்குச் சுதந்திரத்தையும் வெறுமனே பணத்தையும் மதுபானத்தையும் மற்றும் பொருட்களையும் கொடுத்து வாங்க முயற்சிப்பவர்களுக்கு விற்றுவிடாதீர்கள் என ஊவா மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக பதுளை மறைமாவட்ட ஆயர் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை ஆயர் மேதகு ஜே. வின்சன் எஸ். பெனாண்டோ ஆண்டகை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஒரு சுதந்திரமான, சுமூகமான தேர்தல் நடைபெறுவதற்கான அடையாளங்கள் வேகமாக மறைந்து போய்க்கொண்டிருக்கின்றன. தேர்தல் சட்டங்களும் மக்களுடைய சுதந்திரமும் பாதிக்கப்படுவதும் வன்முறைகளுக்குள்ளாக்கப்படுவதும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சூழ்நிலைக்கு மத்தியில் கிறிஸ்தவர்களாகிய எமது பணியும் பங்கும் என்ன? நாங்கள் வெறுமனே பார்வையாளராக நடப்பதைப் பற்றியும் காண்பவை, கேட்பவை பற்றியும் விமர்சித்துக்கொண்டும் அவற்றை ஏற்றுக்கொள்ளாதவர்களாகவும் மட்டும் இருப்பதில் நிறைவடைய முடியாது.



வாக்காளர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் நடைமுறைக்குச் சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நாங்கள் வழங்கும் செய்தி, உயிர்களையும் உடமைகளையும் பாதுகாப்போம், பிரஜைகளின் சுதந்திரத்தை மதிப்போம், வன்முறைகளைக் கண்டிப்போம்.

உங்களது பெறுமதி வாய்ந்த வாக்குகளையும் வாக்குச் சுதந்திரத்தையும் வெறுமனே பணத்தையும் மதுபானத்தையும் மற்றும் பொருட்களையும் கொடுத்து வாங்க முயற்சிப்பவர்களுக்கு விற்றுவிடாதீர்கள் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'முகத்தில் அந்த எச்சில்' நாடக ஆற்றுகை

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் 'விடியல்' நாடகக் குழுவினரால் யூலை 29ம் திகதி 'முகத்தில் அந்த எச்சில்' எனும் நவீன நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.

செவ்விந்தியத் தலைவன் சியாட்டல் எழுதிய உலக பிரபலமான கடிதத்தினைப் பின்னணியாகக்கொண்டு இந்த ஆற்றுகை இடம்பெற்றது. மண்ணோடு ஒட்டிய வாழ்வு, இயற்கையைப் பேணும் அவசியம் போன்ற சூழலியல்சார் கருத்து வடிவங்களுக்குப் பெயர்போன அக்கடிதத்துக்கு விடியல் நாடகக் குழுவினர் அற்புதமான அரங்க வடிவம் கொடுத்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன் விழா








மன்னார் மாவட்டத்தில் கடந்த ஐம்பது (1964 - 2014) ஆண்டுகளாக கலைப்பணியாற்றிவரும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வுகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி முருங்கன் புனித இயாகப்பர் ஆலய வளாகத்தில் சிறப்பாக இடம்பெற்றது. கலைஞர் செபமாலை குழந்தை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு வளர்க்கப்பட்டுவந்த இக்கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வுகளை அருட்தந்தை செ. அன்புராசா மற்றும் முத்தமிழ் கலாமன்ற உறுப்பினர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர். அருட்தந்தை தமிழ் நேசன் இந்நிகழ்வுக்குத் தலைமைதாங்கினார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. பீற்றர் மனோகர், முருங்கன் மெதடிஸ்த குருவானவர் எஸ். ஆர். முருகுப்பிள்ளை, வவுனியாவைச் சேர்ந்த தமிழறிஞர் கலாநிதி அகளங்கன், யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரும் கலைஞருமான கலாநிதி த. கலாமணி, யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரும் கலைஞரும் ஆய்வாளருமான கலாநிதி க. சிறிகணேசன், அறிஞரும் கவிஞருமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. சோ. பத்மநாதன் (சோ.ப.), மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். எம். சியான் ஆகியோர் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ என். சிவசக்தி ஆனந்தன், கௌரவ எஸ். வினோ நோகராதலிங்கம், நானாட்டான் பிரதேசசபைத் தலைவர் திரு. ஏ. ரீ. அன்புராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். பல பிரமுகர்கள், கலைஞர்கள், கல்வியாளர்கள், குருக்கள், துறவியர் எனப் பலர் இவ்விழாவில் கலந்துசிறப்பித்தனர். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் இடம்பெற்ற

# நாட்டுக்கூத்து நாடகங்கள்









மன்னார் மக்களின் வளம்நிறைந்த பாரம்பரியக் கலைவடிவமான நாட்டுக்கூத்து நாடகங்கள் கடந்த மாதங்களில் மூன்று கிராமங்களில் மேடையேற்றப்பட்டன.

கடந்த ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி முருங்கன் பங்கில் உள்ள சுண்டிக்குளிக் கிராமத்தில் புனித அந்தோனியார் வாசாப்பு அரங்கேற்றப்பட்டது. சுண்டிக்குளி ஆலய மக்களின் முயற்சியில் முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. பீற்றர் மனோகர் அடிகளாரின் வழிகாட்டலில் இந்த வாசாப்பு சிறப்பாக இடம்பெற்றது.


கடந்த செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி அளவக்கைப் பங்கில் உள்ள பொன்தீவுகண்டல் கிராமத்தில் சந்தொம்மையார் வாசாப்பு அரங்கேற்றப்பட்டது. பொன்தீவுகண்டல் புனித அந்தோனியார் ஆலய மக்களின் முயற்சியில் அளவக்கைப் பங்குத்தந்தை அருட்பணி. சுரேந்திரன் றெவல் அடிகளாரின் வழிகாட்டலில் இந்த வாசாப்பு சிறப்பாக இடம்பெற்றது.

கடந்த செப்ரெம்பர் 13ஆம் திகதி பெரிய குஞ்சுக்குளம் கிராமத்தில் என்றிக் எம்பரதோர் நாடகம் அரங்கேற்றப்பட்டது. குஞ்சுக்குளம் அங்காமத்து மாதா ஆலய மக்களின் முயற்சியில் குஞ்சுக்குளம் பங்குத்தந்தை அருட்பணி. சுகுணராஜ் அடிகளாரின் வழிகாட்டலில் இந்த நாடக நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. சுண்டிக்குளியில் இடம்பெற்ற வாசாப்பின் சில காட்சிகளை மேலே காணலாம்.

# முருங்கன் டொண் பொஸ்கோவில் சிறப்பு நிகழ்வுகள்

**– வட இலங்கையில் டொண் பொஸ்கோ சபையினர் காலடி பதித்த 10 ஆண்டுகள் (2004 – 2014) நிறைவு**

**– புனித டொண் பொஸ்கோவினுடைய பிறப்பின் இருநூறாவது ஆண்டுக் (185 – 2015) கொண்டாட்டத்தின் ஆரம்பம்**




முருங்கன் டொண் பொஸ்கோ குழுமத்தினர் கடந்த செப்ரெம்பர் 13ஆம் திகதி இரண்டு முக்கிய நிகழ்வுகளைக் கொண்டாடினர். வட இலங்கையில் டொண் பொஸ்கோ சபையினர் காலடி பதித்த 10 ஆண்டுகள் (2004 - 2014) நிறைவையும், புனித டொண் பொஸ்கோவினுடைய பிறப்பின் இருநூறாவது ஆண்டுக் (1815 - 2015) கொண்டாட்டத்தின் ஆரம்ப நிகழ்வையும் நினைவுகூர்ந்து விழாக்கொண்டாடினர்.

இதனையொட்டி சலேசிய சபையின் இலங்கை மாகாண முதல்வரின் தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. கடந்த காலங்களில் முருங்கன் டொண் பொஸ்கோ நிறுவனத்தில் பணியாற்றிய அருட்தந்தையர்கள் அழைக்கப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## வவுனியா மறைக்கோட்ட சுப்பர் சிங்கர் போட்டியும் நூல் வெளியீடும்





கடந்த செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு வேப்பங்குளம் பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் வவுனியா மறைக்கோட்டப் பங்குகளோடு இணைந்து நடாத்திய மாணவர் மற்றும் இளையோர் ஆகிய இரு பிரிவுகளுக்குமான யூனியர் சூப்பர் ஸ்டார், சீனியர் சூப்பர் ஸ்டார் பாடல் போட்டியின் இறுதிச்சுற்று தூய சூசையப்பர் ஆலய முன்றலில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட சமூகதொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனர் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக திருமதி. சுகந்தி கிசோர் (பிரதேச சபைச் செயலாளர்) அவர்களும் சட்டத்தரணி திரு. அன்ரன் புனிதநாயகம் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக அருட்பணியாளர்கள் சத்தியராஜ், லக்கோன்ஸ், ஜெஸ்லி ஜெகானந்தன், சூசைதாசன் ஆகியோரும் நடுவர்களாக அருட்பணி. மெல்வின், அருட்சகோதரிகள் ஜெயம், அஞ்சலினா ஆகியோரும், வேப்பங்குளம் திருச்சிலுவை கன்னியர்மட அருட்சகோதரிகள், கணேசபுரம் நல்லாயன் சபை அருட்சகோதரிகள், வேப்பங்குளம் பங்குமக்கள், அயல் பங்குமக்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

இப்போட்டியின் முடிவாக:-
யூனியர் சூப்பர் ஸ்டாராக
**செல்வி. எஸ். இயூஜின் அனவெல் அவர்களும்,**
இரண்டாவதாக செல்வி. எல். ஜெனுசியா அவர்களும்,
மூன்றாவதாக செல்வி. பி. அகஸ்ரினா அவர்களும்
தெரிவானார்கள்.
**சீனியர் சூப்பர் ஸ்டாராக**
**செல்வன். எம். சனோஜன்** அவர்களும்,
இரண்டாவதாக செல்வன். ஏ. றெனிசியஸ் அவர்களும்,
மூன்றாவதாக செல்வன் எம். றொபேட் ஜோன்சன் அவர்களும்
தெரிவானார்கள்.

இந்நிகழ்வின்போது வேப்பங்குளம் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் அங்கத்தவரான **செல்வி. தேவராசா சுரேக்கா** அவர்களின் **"எனக்குள் பெய்த மழை"** என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவும் ஒருங்கிணைந்து நடைபெற்றது. இந்நூல் வெளியீட்டுக்கு மதிப்பீட்டுரையை திரு. யோகேஸ்வரன் ஆசிரியர் அவர்கள் வழங்கினார்.

தகவல் - அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,
பங்குத்தந்தை - வேப்பங்குளம்.

## மன்னார் சர்வமதப் பேரவையினர் கொழும்பு மாநாட்டில் பங்கேற்பு



இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் முறைமை சார்பு ஆய்வு நிலையத்தில் இடம்பெற்ற *சர்வ சமய தேசிய மாநாட்டில்* (Inter Religious National Symposium) மன்னார் மாவட்டத்தில் இருந்து ஒன்பது பேர் கலந்துகொண்டனர்.

மன்னார் மறைமாவட்ட சர்வமத விவகாரங்களுக்கான இணைப்பாளர் அருட்திரு. தமிழ் நேசன், அருட்சகோதரி றூபராணி, சகோதரி றீற்றா குணநாயகம். செல்வி சாந்தி கஸ்மீர், திருமதி பிரியந்தி, மௌலபி அஸீம், பாஸ்ரர் பத்திநாதன், திரு. ஜோண்சன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். மன்னார் ஆர். பி. ஆர் நிறுவனம் இந்தப் பயணத்திற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இலங்கையின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த சர்வமதத் தலைவர்களும் மற்றும் அமெரிக்க நாட்டின் இலங்கைக்கான தூதுவர், நோர்வே நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஆகியோரும், தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த அதிகாரிகாரிகள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இலங்கை நாட்டின் சமாதானத்திற்கு சர்வமதத் தலைவர்கள் எப்படிப்பட்ட பங்களிப்பை ஆற்றமுடியும் என்பதைக் குறித்து ஆராய்வதாக இந்த மாநாடு அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# உலகப் போரின்போது ஜப்பானிய இராணுவத்தால் கொடுமைப்படுத்தப்பட்ட பெண்களைச் சந்தித்த பாப்பரசர்



தென் கொரியாவுக்கு விஜயம் செய்த பாப்பரசர் அந்நாட்டுக்கான பயணத்தின் இறுதிக்கட்டமாக இடம்பெற்ற ஆராதனை நிகழ்வின்போது, இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் ஜப்பானிய இராணுவத்தால் பாலியல் அடிமைகளாக பணியாற்ற நிர்ப்பந்திக்கப்பட்ட பெண்களைச் சந்தித்து ஆசீர்வதித்தார்.

மேற்படி ஏழு பெண்களில் பலர் சக்கர நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். இந்நிலையில் ஆராதனையின் ஆரம்பத்தில் பாப்பரசர் குனிந்து அந்த ஏழு பெண்களையும் ஆசீர்வதித்தார். அந்தப் பெண்கள் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்காக ஜப்பானிடமிருந்து மன்னிப்பு மற்றும் நஷ்டஈட்டைக் கோரி வருகின்றனர்.

பாப்பரசருடனான சந்திப்பின்முன் பாதிக்கப்பட்ட அந்தப் பெண்களில் ஒருவரான லீயொங் ஸு விபரிக்கையில், தமக்கு வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு ஏழு தசாப்த காலத்திற்கு மேலாகின்ற நிலையில் பாப்பரசருடனான சந்திப்பு தமக்கு ஏற்பட்ட வலிக்கு சிறிய நிவாரணம் அளிக்கும் என நம்புவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

மேற்படி சந்திப்பின்போது அந்தப் பெண்களில் பிறிதொருவரான கிம் பொக் - டோங் பாப்பரசருக்கு வண்ணாத்திப்பூச்சி வடிவிலான குண்டூசியொன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

தொடர்ந்து ஆராதனை நிகழ்வில் உரையாற்றிய பாப்பரசர், மன்னிப்பது சாத்தியமற்றுத் தோன்றுகின்றபோதும் அதன்மூலமே நல்லிணக்கத்தைக் கொண்டுவர முடியும் என்று கூறினார்.

## இருபது ஜோடிகளுக்கு பாப்பரசர் திருமணம் செய்து வைத்தார்

### 14 வருடங்களுக்குப் பின்னர் பாப்பரசர் ஒருவர் நடத்திய திருமணம்



பல்வேறுபட்ட சமூகப் பின்னணியைக் கொண்ட 40 பேருக்கு திருமணம் செய்துவைத்த பாப்பரசர் பிரான்சிஸ், 40 பேரிடமும் திருமணத்துக்கான சம்மதத்தைக் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கடந்த கடந்த செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி ஞாயிறு தினத்தில் உரோமின் புனித பேதுரு தேவாலயத்தில் நடைபெற்ற இவ்வைபவம் தொடர்பில் மூன்று வாரங்களுக்கு முன்னரே பேசப்பட்டது. உலக நாடுகளிலுள்ள கத்தோலிக்க ஆயர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றில் குடும்ப விடயங்களில் திருச்சபையின் பங்களிப்புத் தொடர்பில் ஆராயப்பட்ட நிலையில் இத்திருமண வைபவம் குறித்தும் அறிவிக்கப்பட்டது. இந்த 20 ஜோடிகளில் ஒரு ஜோடி தனது பெண் பிள்ளையுடன் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்தத் திருமண வைபவத்தில் கருத்து வெளியிட்ட பாப்பரசர் பிரான்சிஸ், திருமணமென்பது இலகுவான வீதியல்ல. சச்சரவுமிக்க பயணமாகும். ஆனாலும் அதுதான் வாழ்க்கை என தெரிவித்துள்ளார். அத்துடன் குடும்பமென்பது செங்கற்கள் போன்றது. அதனைக் கொண்டு சமூகத்தைக் கட்டி எழுப்பவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்குமுன் 2000ஆம் ஆண்டு பாப்பரசர் 2ம் ஜோன் போல் தலைமையில் திருமண வைபவமொன்று நடத்தப்பட்டது. அதன் பிற்பாடு 14 வருடங்களின் பின்னர் பாப்பரசர் பிரான்சிஸினால் இந்தத் திருமணம் நடாத்தி வைக்கப்பட்டுள்ளது.

## இரண்டு அல்லது மூன்று வருடங்களே என்னால் உயிர்வாழ முடியும்

### – பாப்பரசர் பிரான்சிஸ் –

இன்னமும் இரண்டு அல்லது மூன்று வருடங்களே தன்னால் உயிர்வாழ முடியுமென எதிர்பார்ப்பதாக பாப்பரசர் பிரான்சிஸ் கூறியுள்ளமை வத்திக்கான் வட்டாரங்களில் அவரது ஓய்வு குறித்த சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ் தனது மரணம் தொடர்பான எதிர்பார்ப்பினை முதல் தடவையாகப் பகிரங்கமாகக் கூறியள்ளார். இன்னமும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் தனது மரணத்தினை எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட பாப்பரசர், அதன் முன்னர் தன்னுடைய ஓய்வு தொடர்பாக எந்தவிதமான கருத்துக்களையும் கூறியிருக்கவில்லை.

தென்கொரியாவுக்கு 5 நாள் விஜயத்தினை மேற்கொண்டு, நாடு திரும்புவதற்காக விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே 77 வயதுடைய பாப்பரசர் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படும் நிலையிலும் தனது மரணம் குறித்த எதிர்வுகூறலை முன்வைத்துள்ளார்.

உலகளவில் அவருடைய பிரபலத்தன்மை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பாப்பரசர், கடவுளின் மக்களது நேர்மைத் தன்மை என்றே எனது பிரபலத்தினை நான் நோக்குகின்றேன். எனது பாவங்கள், தவறுகள் தொடர்பாக நான் சிந்திக்க முயல்கிறேன். மிகவும் குறுகிய காலத்துக்கே மனிதரின் வாழ்க்கை நிலைத்திருக்கும் என்ற காரணத்தினால் நான் பெருமையடைய விரும்பவில்லை. இரண்டு அல்லது மூன்று வருடங்களில் அருட்தந்தைகளின் வசிப்பிடங்களில் இருந்து நான் விடைபெற வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய நாட்களில் பிரபலத் தன்மையினை மிகவும் இயல்பான முறையில் தான் கையாள்வதாக ஆஜென்ரீனாவைச் சேர்ந்த பாப்பரசர் குறிப்பிட்டுள்ளதுடன் ஆரம்பத்தில் பிரபலத்தன்மையினால் தான் சிறிதளவில் அச்சமடைந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

தனது கடமைகளைச் செய்வதற்கான போதுமான உடல்நிலை தன்னிடம் இருப்பதனை உணராவிட்டால் தனக்கு முன்னர் பதவியிலிருந்த பாப்பரசர் 16ஆம் பெனடிக்டைப் போன்று தாமும் ஓய்வு பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

## மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் அண்மைக்கால சாதனைகள்











மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியானது மீண்டும் சில சாதனைகளைப் படைத்துள்ளது. சர்வதேச ரீதியில் இத்தாலியில் உலக உணவு நிறுவனத்தால் நடாத்தப்பெற்ற 'பசியற்ற உலகம்' என்னும் தலைப்பிலான சித்திரப்போட்டியில் சிறந்த படைப்பாற்றலை வெளிப்படுத்தி ஆஸ்மின் என்ற மாணவன் சர்வதேசத்தில் கல்லூரியைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

அத்துடன் டிவைன்ஸ் என்ற மாணவன் தேசிய மட்டத்தில் தமிழ்த்தினப்போட்டியில் இசையும் அசையும் நிகழ்வில் 1ம் இடத்தைப்பெற்று கல்லூரிக்குப் பெருமைதேடித் தந்துள்ளார்.

மேலும் அனோஜ்குமார், அஜந்தன், சுதாகரன் ஆகிய மாணவர்கள் 46 ஆண்டுகளின்பின் சாரணியத்தில் ஜனாதிபதி விருதுபெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செப்ரம்பர் மாதம் 18ஆம் திகதி அன்று மன்னார் கல்வித்திணைக்களத்திற்கு முன்னால் இடம்பெற்றது. வலயக்கல்விப்பணிப்பாளர், மன்னார் நகர பிதா, உதவி மாவட்டச் செயலாளர், அதிகாரிகள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் சகிதம் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் புடைசூழ சாதனை படைத்த மாணவர்கள் மாலை அணிவித்து மங்களகரமாக மன்னார் நகர வீதி வழியாக அழைத்துவரப்பட்டனர். பாடசாலையில் சிறு கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

# புனிதர்களின் பாதையில்

## புனித அவிலா தெரசா

(துறவினி, பெண்குல முதல் மறைவல்லுனர்
(கி.பி. 1515- 1582)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இஸ்பெயின் நாட்டில் அவிலா என்ற ஊரில் இவர் பிறந்தார். ஏழு வயது முதல் புனிதர்களின் வரலாறு இவரை மிகவும் ஈர்த்தது.

வேதத்திற்காகக் குருதி சிந்தியவர்கள் மிக எளிதில் விண்ணகத்தைக் கைப்பற்றிக் கொண்டனர் என்பதால் இவர் மூர் ஜாதியினரிடையே சென்று மறைபரப்புப் பணியிலறங்கி, இதன் மூலம் மறைசாட்சியாக முடிவெடுத்தார். ஆனால் இவர் அங்கு செல்ல அனுமதிக்கப் படவில்லை.

"வீட்டிலேயே தங்கி முனிவர்களாக வாழ்வோம்" என்று தம் சகோதரன் ரொட்ரிகோவுடன் இணைந்து தோட்டத்தில் ஓரளவு வசதி செய்துகொண்டனர். இந்தக் குடிசையில், ஆண்டவர் சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்ட படத்தை மாட்டி இருந்தார். "ஆண்டவரே எனக்கும் தாகம் ஏற்படாதிருக்க அத்தகைய தண்ணீரைத் தாரும்" என்று ஜெபிப்பார்.

தாயின் இறப்பிற்குப்பின், இவரது 15வது வயதில், தந்தை இவரை அகஸ்டினியன் மடம் ஒன்றில் கொண்டுபோய்ச் சேர்த்தார். அங்கு தெரசா நோய்வாய்ப்பட்டார். தந்தை வீட்டிற்கு அழைத்துச் சென்றபோது, துறவியாக வேண்டுமெனத் தந்தையிடம் மீண்டும் மன்றாடினார். மடத்தில் போய்ச் சேர்ந்து விட்டார். ஓராண்டு நிறைவுற்று வார்த்தைப்பாடு கொடுத்தாலும், நோய் திரும்பிய சூழ்நிலையில் தந்தை மீண்டும் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார். அவரது மாமனார் கொடுத்த செபநூல் ஒன்றை நன்கு பயன் படுத்தியதின் மூலம் 3 ஆண்டுகளுக்குப் பின் நலம் பெற்றார்.

மீண்டும் துறவறத்திற்குத் திரும்பினார். மற்ற துறவிகளைப்போல் தம்மைச் சந்திக்க வரும் வெளி - யாட்களுடன் தொடர்பை வளர்த்துக்கொண்டதுடன், மற்றத் துறவிகளும் இவ்வாறுதானே நடக்கிறார்கள் என்று சொல்லித் தம்மையே தேற்றிக்கொண்டார்.


டொமினிக்கன் சபைக்குரு ஒருவர் இவ்வாறு செய்வது தவறு என்று சுட்டிக் காட்டினார். பின்னர் இவர் புனித மரிய மதலேன், புனித அகஸ்டின் ஆகியோர் எவ்வாறு மனந்திரும்பி அறவழிக்கு வந்தனர் என்பதை ஆராய்ந்தார்.

"அப்போது முதல் நான் எனது ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைந்தேன்" என்று குறிப்பிடுகின்றார்.

டான் பிரான்சிஸ் இவ்வேளையில் தெரசாவுக்கு ஆன்ம குருவாக வந்து ஆன்மீக மேடு பள்ளங்களைச் சுட்டிக்காட்டினார். மனமுடையத் தேவையில்லை என்று கூறினார். மேலும் தெரசா தமது ஆன்மீகம்பற்றி ஆராய்ந்திட இயேசு சபைக்குரு ஒருவரை நாட வேண்டுமெனப் பணித்தார். அத்தகைய ஒருவரைச் சந்தித்து அவரிடம் தெரசா பொதுப் பாவ அறிக்கை செய்து, தமது செப வாழ்வு முறை பற்றி விளக்கினார். ஆன்ம குருவோ, இம்முயற்சிகள் தூய ஆவியின் ஏவுதலால் அமைந்தவை என்று உறுதிப்படுத்தினார்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 36.




## பொய்யழகு கவிதைக்குத்தான், வாழ்க்கைக்கல்ல!

### சொல்பவனுக்கு மதியில்லை, கேட்பவனின் மதி?

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் ஏனைய நாடுகளைப்போல யேர்மனிய நாட்டிலும் உணவுக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் உணவுப் பொருட்களைக் கால்நடைகளுக்கும் பறவைகளுக்கும் போடுகிறவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனக் காவல்துறையினர் அறிவித்தனர். இது தொடர்பாக காவல்துறையினர் வீடுகளுக்குச் சென்று சோதனைகளைச் செய்து கிராமத்து மக்களிடம் பல விசாரணைகளை நடத்திவந்தார்கள்.

குடியானவன் ஒருவனிடம் அந்நாட்டுக் காவல்துறை அதிகாரிகள், "உன் பண்ணையிலுள்ள கோழிகளுக்கு என்ன உணவு போடுகிறாய்?' எனக் கேட்டதற்கு அவன்," கோதுமை, குரக்கன்..." எனப் பதில் கூறினான். "கோதுமை, குரக்கன் மக்களின் உபயோகத்திற்காக உள்ளவை. அவற்றை எப்படிக் கோழிகளுக்கு உணவாக்க முடியும்? ஆதலால், உன்னைக் கைதுசெய்கிறோம்!" என்று அவனை அழைத்துச் சென்றார்கள்.

அக்கிராமத்தில் இன்னொருவனிடம் சென்று விசாரணை செய்தார்கள். அவன் சாதுரியமாகப் பதில் சொல்வதாக நினைத்துக்கொண்டு தன் பண்ணையிலுள்ள கோழிகளுக்கு நெல் போடுவதாகச் சொன்னான். "நெல் மக்களின் உபயோகத்திலுள்ள பொருள், அதனை இப்பஞ்சகாலத்தில் கோழிகளுக்கு நீ உணவாகப் போடுவது தவறு!" என்றுசொல்லி அவனையும் சிறையில் அடைத்தார்கள்.

அடுத்து ஒருவனிடம் போனபோது அவன் மிகவும் சாமர்த்தியமாக, "என் பண்ணையிலுள்ள கோழிகள் சற்று புத்திக்கூர்மை உடையவை! அதனால், என் கோழிகளுக்கு நான் காசாகக் கொடுத்துவிடுகிறேன். அவை தங்களுக்கு எது வேண்டுமோ அதைவாங்கிச் சாப்பிடுகின்றன. மேலும், 'மக்களின் பாவனைக்குரிய உணவுப்பொருட்களைக் கடைகளிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடாது!' என்றும் அவைகளுக்குக் கண்டிப்பான அறிவுறுத்தல் கொடுத்திருக்கிறேன்!" என்றதும் அதிகாரிகள் அவனை விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள்!

### உண்மை பேசுபவர்கள் பலவீனர்களாகப் பார்க்கப்படும் பரிதாபநிலை!

உண்மை பேசுகிறவர்கள் பலவீனர்களாகவும் பொய்பேசி போலித்தனமாக நடந்துகொள்கிறவர்கள் வீரர்களாகவும் பார்க்கின்ற போக்கு இன்று வளர்ந்து வருகிறது. உண்மையைக்கூறி ஒரு செயலில் வெற்றி பெறவில்லையென்றால் 'பிளைக்கத் தெரியாதவன்' என்று சொல்பவர்கள்தான் இன்று அதிகம். 'கேட்கிறதத் கொடுத்து அலுவலை முடிச்சிற்றுவராமல் வந்து நிக்குது! இதுகள், எப்பிடித்தான் உருப்படப் போகுதுகளோ?' என்று பொய் பொய்யாய்ச் சொல்லியேனும் காரியத்தைச் சாதிக்கவே பார்க்கிறார்கள்.

'இலஞ்சம் வாங்கினேன். பிடித்துக்கொண்டார்கள், கொடுத்தேன் விட்டுவிட்டார்கள்' என்று சொல்லுகின்ற நிலமைதான் நடந்தேறிக்கொண்டிருக்கிறது. நினைத்ததை அடையமுடியாவிட்டாலும் அல்லது முன்னெடுத்த காரியத்தில் தோல்வியடைந்தாலும், அவன்(ள்) உண்மையோடு செயற்பட்டிருக்கிறான்(ள்) என எண்ணுபவர்கள் இல்லை என்றளவிற்கு நிலமை மாற்றமடைந்து வருகிறது.

### 'அண்டப்புழுகு ஆகாசப்புழுகு' என்பது இதுதான்!

ஒரு பாடசாலையில் உயர்தர மாணவர்கள் வெவ்வேறு குழுக்களாக சுற்றுலா போயிருந்தார்கள். சுற்றுலா முடிந்து பாடசாலை திரும்பியதும் அவர்களின் அனுபவங்கள் பகிரப்பட்டன. முதலாவது மாணவன்," என்னுடைய சுற்றுலாவில் 10 அடி அகலமும் 15 அடிநீளமுமான கீரைவகை ஒன்றைப் பார்த்தேன்!" என்றான். இரண்டாவது மாணவன், "என்னுடைய சுற்றுலாவில் 20 அடி அகலமும் 25 அடி நீளமுமான சட்டியைப் (கறிசமைக்கும் சட்டி) பார்த்தேன்!" என்றான். அப்போது முதலில் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்ட மாணவன், "எதற்காக 20 அடி அகலமும் 25 அடி நீளமுமான சட்டியைச் செய்து வைத்திருக்கிறார்கள்?" எனக் கேள்வி எழுப்பினான். உடனே வேறொரு மாணவன், "இல்ல, நீ பார்த்த கீரையைச் சமைக்க வேண்டும் அல்லவா! அதுதான் அப்படிப் பெரிய சட்டியைச் செய்து வைத்திருக்கிறார்கள்!" என்றான். சிரிப்பொலியில் வகுப்பறை கலகலத்தது.

### பொய் சொல்லும் கலை!

சிலர் சொல்லுகின்ற பொய்களுக்கு அளவோ, எல்லையோ இருக்காது! எடுத்ததெற்கெல்லாம் பொய் சொல்வார்கள். 'பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே...' என்றொரு பழைய பாடல் உண்டு. இவர்கள் இந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்! உண்மையில் புலவர்கள் கவிதைபாடும்போது நிறையக் கற்பனை செய்த விடயங்களை எழுதுவார்கள், அவற்றைப் பொய்யென்று கருதமுடியாது; காரணம் கவிப்பேரரசு வைரமுத்துக் கருதுவதுபோல கவிதைக்குப் பொய்தானே அழகு!

புலவர்கள் - கவிஞர்கள் கவிதைகளில், தங்கள் படைப்புக்களில் கற்பனைகளைக் கலந்துவிடுகிறார்கள். அப்படைப்புக்களில் யதார்த்தமானவை, யதார்த்தமற்றவை, உண்மையானவை கற்பனையானவை, சாத்தியமானவை, சாத்தியமற்றவை எனச்சேர்த்து, இணைத்துவிடுகிறார்கள். ஆனால், நம்மவர்களில் கணிசமானோர் 'பச்சப் பொய்' சொல்வதையே ஒரு கலையாக ஆக்கிக்கொள்கிறார்கள்! அதுதான் கவலைதரும் விடயமாகும்.

### பொய் பொய்யாப் பேசுவார்கள்

'பொய்யப் புடிச்சிவைச்சுப் பேசினா, உண்(மை)ம நிண்ணுகிண்ணு முழிக்குமாம்!' என்று கிராமிய வழக்கில் கூறுவார்கள். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது (Lie travels around the world while truth puts on the shoes); 'உண்மை பாத அணிகளைப் போடுவதற்குள் பொய் உலகத்தையே சுற்றி வந்துவிடுகிறது' என்று இதனை மொழிபெயர்க்கலாம். இன்றைய நம் நாட்டு - வீட்டு- 'றோட்டு'- 'கோட்டு' நிலமைகளில், மேற்சொன்ன அனுபவ மொழிகள் பிரதிபலிப்பவையாகவே இருக்கின்றன!

சிலர் பொய்பொய்யாய்ச் சொல்வார்கள்; 'பொய் சொல்கிறேன்' என்று பொய் சொல்பவருக்கும் தெரியும், அவர் பொய் சொல்கிறார் என்று அதைக் கேட்பவருக்கும் தெரியும்! இந்நிலையில், "நீ பொய்தானே சொல்கிறாய்?" எனச் கூறினால், "ஐயோ, பொய் என்பதே எனக்குத் தெரியாது, வாழ்க்கையில் இதுவரையில் பொய் சொன்னதே கிடையாது!" என்ற பொய்களின் உச்சப் பொய்யாகிய இப்பொய்யினைச் சொல்வார்கள். மகன்(ள்) பொய் சொல்கிறான்(ள்) என்று ஆசிரியர்/அதிபர் பெற்றோரைக் கூப்பிட்டு விசாரித்தால் அவர்கள் ஒருபடி முன்னோறி நம்பவோ அல்லது கிரகிக்கவோ முடியாத பொய்களைச் சொல்வார்கள்!

'1000 பொய்களைச் சொல்லி ஒரு கலியாணத்தை செய்துவை' என்று சொல்லி பொய்களைக் கூறி - உண்மைகளை மறைத்துத் திருமணத்தைச் செய்துவைப்பார்கள். அதன்பின், அருள்தந்தை வை. இருதயராஜ் குறிப்பிடுவதுபோல 2000 பொய்களைச் சொல்லி மணமுறிவு பெறுவதற்கு முண்டியடிப்பார்கள். நம்முடைய நீதிமன்றங்களைச் சென்று பார்ப்பீர்களேயானால் இதன் பொருள் புரியும்.

### பொய் சொல்லாமல் 'பிஸ்நெஸ்' செய்ய முடியுமா!

ஒரு தடவை பல விடயங்களைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தபோது வர்த்தகர் ஒருவர் என்னை நோக்கி, ... பொய் சொல்லாமல் இந்தக் காலத்தில 'பிஸ்நெஸ்' (Bisness) செய்ய ஏலுமே!...?..."என்ற கேள்வியை எழுப்பினார். அவரின் இக்கேள்விக்கு, "உண்மைதான், நீங்கள் சொல்வது சரிதான்! இந்தக் காலத்தில் பொய் சொல்லாமல் எப்படி 'பிஸ்நெஸ்' செய்யமுடியும்!" என்று, அவரது வாதத்திற்கு வலுச்சேர்ப்பதாகவோ அல்லது அவரது கருத்தை ஆதரிப்பதாகவோ என்னுடைய பதில் அமைய வேண்டும் என எதிர்பார்ப்பதுபோல அவர் தன் கருத்தை முன்வைத்தார். இதுவரை காலமும் வாழ்ந்துவந்த நேரிய–சத்தியவாழ்க்கை முறையிலிருந்து தடுமாறி, எவ்வாறான தந்திரமான போலியான சிந்தனைப் பொறிக்குள் இன்றைய சமுதாயம் விழுந்துகொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

### தங்கமுலாம் பூசப்பட்ட வர்த்தக வார்த்தைகள்!

கடைக்குச் சென்று ஒரு பொருளை எடுத்து, "இதுக்கு என்ன விலை?" என்றால், "எடுங்க, பாத்துப் போடுவம்!" என்பதுதான் பொதுவாகப் பதிலாகக் கிடைக்கும். பிறகென்ன, பார்க்காமலா போடுவார்கள்? விலையைச் சொன்னால் கொள்ளை இலாபம் பெறமுடியாது என்பதால், இவ்வாறான வியாபாரத் தந்திர அணுகுமுறைகளைக் கைக்கொள்கிறார்கள்! என்பது நமக்குப் புரிவதில்லை.

ஒரு 'கீபோட்' (Key-board) வாங்குவதற்காக இசைக் கருவிகளை விற்பனை செய்யும் கடை ஒன்றுக்குப் போயிருந்தேன். "பாதர் (father), உங்கட தேவைக்கு இந்த 'PSR 710' நல்ல 'கீபோட்'. இதுன்ர 'பிறைஸ்' (Price) 1,35,000. உங்களுக்கு 1,25,000 போடலாம். உங்களுக்குத்தான் இந்த 'பிறைஸ்'. வேற இடங்கள்ள இந்த 'பிறைஸ்'க்கு வாங்கமாட்டீங்க. யாருக்கும் பொய் சொன்னாலும் உங்களுக்கு பொய் சொல்ல ஏலாதுதானே? இந்த 'பிறைஸ்'சை வேற யாருக்கும் சொல்லிப் போடாதீங்க!" என என் மனம் மகிழ்ச்சியால் பிரமிக்கும்படி அக்கடை உரிமையாளன் கூறினான். தங்கமுலாம் பூசப்பட்ட இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் வழக்கமாக பொருளை நான் வாங்கியிருக்க வேண்டும்! எனினும் பெரிய தொகைப் பணம் என்பதால் அன்று அவ்வாறு செய்யவில்லை." எதற்கும்,'கொம்பனியில் ஒரு தடைவை விலையை விசாரி!" என என் மனம் சொன்னது. இந்நேரத்தில், வர்த்தக நண்பன் சொல்வதைக் கேட்பதா? அல்லது என்னோடே வாழ்நாள் முழுதும் கூடவேயிருக்கும் என் மனதுக்கு செவிசாய்ப்பதா? என்ற போராட்டம்! இறுதியில், ஒருவாறு விளிம்புநிலையில் என் மனம் வெற்றிகண்டது.

'யமகா'(Yamaha) நிறுவனத்திற்குச் சென்று விலையை விசாரித்தால், அதன் விலை 99,000 மட்டுமே! எப்படி இருக்கிறது 'கீபோட்'காரனின் 'பிஸ்நெஸ்'? இப்படிதான் பல சந்தர்ப்பங்களில் நாம் மிகவும் தந்திரமான - கபடத்தனமான முறையில் தாறுமாறாக ஏமாற்றப்படுகிறோம்.

### வியாபார வித்தைகள்!

ஏ9 வீதியாலே சில கிழமைகளுக்குமுன் பயணித்துக்கொண்டிருந்தபோது தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்று பின்வருமாறு விளம்பரம் செய்திருந்தது: 'பேசுங்க பேசுங்க, பேசிக்கிண்டே இருக்கலாம்' என்று! பேசிக்கொண்டே இருக்கலாம்தான்! ஆனால், யார் 'பில்லுக்கு'(Bill) காசு கட்டுவது? அதனைத்தான் விட்டாலும், இவ்வளவு நேரத்திற்கு இவ்வளவு காசு? என்று ஏன் குறிப்பிடுகிறார்கள் இல்லை! என்பதைச் சிந்திக்கவேண்டும்.

அவ்வாறு விலையைக் குறிப்பிட்டால் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் தொலைபேசியில் பேசமாட்டார்கள் அல்லது நேரடியாகச் சென்று பேசிவிட்டு வந்துவிடுவார்கள் என்பதால் மனதைத் தொடும் வார்த்தைகளைத் தந்திரமாகப் பயன்படுத்துகிறார்கள்! இவைபோன்ற 'வியாபார வித்தைகளை' நாம் ஏன் கண்டுகொள்ளத் தவறுகிறோம் என்பதுதான் புரியாமலிருக்கிறது.

இன்று, உற்பத்தியாளனைவிட விற்பனை செய்பவர்களுக்குத்தான் அதிக இலாபம் கிடைக்கிறது. அது மரக்கறிச் சந்தையாக இருந்தாலென்ன, மீன் சந்தையாக இருந்தாலென்ன, இறைச்சிக் கடையாக இருந்தாலென்ன, வேறு எவ்வகை வாணிப நிலையமாக இருந்தாலென்ன; உற்பத்தியாளனுக்குப் பொருள் உற்பத்தியில் மிகக்குறைந்த பங்கே வருமானமாகக் கிடைக்கிறது. இலாபம் பெறவேண்டும், அதற்காகக் 'கொள்ளை இலாபம்' பெறக்கூடாது அல்லவா! அது மனித நேயம் அல்லவே!

### பொய் சொல்லும் போட்டி!

வெளிநாடு ஒன்றில் புதுவகையான நிகழ்வாக பொய் சொல்லும் போட்டியொன்றை நடத்தினார்கள். 'யார் மிகத் தரமாகப் பொய் சொல்கிறாரோ அவர் வெற்றி பெற்றவராகத் தேர்த்தெடுக்கப்படுவார்' என அறிவித்திருந்தார்கள். இறுதிப் போட்டிக்கு நான்குபேர் நான்கு நாட்டினைச் சேர்ந்தவர்களாக தெரிவுசெய்யப்பட்டு இருந்தார்கள். அந்நால்வரில் நம் நாட்டவன் ஒருவனாவது கட்டாயமாக இருந்திருப்பான் என்பது குறிப்பிடாமலே புரியக்கூடிய ஒன்று! முதலாமவன் அழைக்கப்பட்டான்: "யாருடைய உதவியும் இல்லாமல் ஆகாயத்தில் பறந்தேன்!" என்றான். நடுவர்கள் பாராட்டினார்கள். இரண்டாமவன், "எங்கள் ஊருக்குள் நுழைந்த சிறுத்தையை அடக்கி அதன்மீது சவாரிசெய்தேன்!" என்றான். நடுவர்கள் மலைத்துப் போனார்கள். மூன்றாமவன், "நேற்று எங்கள் வீட்டு முற்றத்தில் மட்டும் தங்கமழை பெய்தது! "என்றான். நடுவர்கள் பிரமிப்பு அடைந்தார்கள். நான்காமவன் நம் நாட்டவன், சொன்னான்: "இவர்கள் மூவரும் சொன்ன மூன்று நிகழ்ச்சிகளையும் கண்ணால் கண்ட ஓரே ஆள் நான் மட்டும்தான்" என்றான். நடுவர்கள் மயங்கிவிழுந்தார்கள்! நம் நாட்டவன் பரிசுக்கும், அனைவரின் பாராட்டுக்கும் உரியவன் ஆனான்!

---

## பேசாலை முதியோர் சங்கத்தின் திருயாத்திரை



லங்கா மாதா பசிலிக்காவின் முன்பு எடுக்கப்பட்டது.

பேசாலை புனித வெற்றிநாயகி முதியோர் சங்க உறுப்பினர்கள் 58 பேர் 2014 ஆடி 19ம்,20ம் திகதிகளில் புனித யாத்திரைப் பயணம் ஒன்றை மேற்கொண்டார்கள். இவ்வமைப்பின் தலைவர் திரு. ச. அந்தோனி மிராண்டா அவர்களின் தலைமையில் இந்தப் பயணம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

அதிகாலை 4.30 மணிக்கு பேசாலையில் இருந்து புறப்பட்டு மடுத்திருப்பதியில் திவ்விய பூசைப்பலியில் பங்கெடுத்தார்கள். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு பௌத்தர்களின் புனித பூமியான அனுராதபுரத்தில் உள்ள புராதன கட்டடங்கள் விகாரைகள் ஆகியவற்றைப் பார்வையிட்டபின் தலாவ என்னுமிடத்தில் உள்ள மாதா கோவில் வளவில் மதிய உணவை உண்டனர். அங்கிருந்து தேவத்தை இலங்கை மாதா திருத்தலத்திற்குச் சென்று அங்கே இரவுப் பொழுதைக் கழித்தார்கள். அடுத்தநாள் 20ம் திகதி அத்திருத்தலத்தில் திவ்விய பூசைப்பலியில் பங்கெடுத்தபின் பல மணிநேரம் பசிலிக்காவில் செபவழிபாட்டில் ஈடுபட்டார்கள்.

பின்னர் அத்திருத்தலத்தில் இருந்து புறப்பட்டு, பேசாலையில் பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டியெழுப்பிய அன்புக்குரிய டேவின் வின்சன் பற்றிக் அடிகளார் சத்திர சிகிச்சைக்குட்பட்டு கொழும்பில் ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பதால் அவரைச் சென்று சந்தித்தார்கள். கொழும்பில் இருந்து சீதுவ என்னும் இடத்துக்குச் சென்று அங்கே இயேசுவின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் தத்துருபமானதும், பக்திஉணர்வைத் தூண்டும் சிற்பங்களைக்கண்டு முதியோர்கள் மகிழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுத்திருத்தல ஜாண் மரியவியான்னி தியான இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் – (2014 தை – ஆனி)



### (தை 15 – 30)
### உளவள ஆற்றுப்படுத்தல் கருத்தமர்வு

கடந்தகால உள்நாட்டுப் போரினால் பாதிப்படைத்த மக்களின் உளரீதியான தாக்கங்களை ஆற்றிடும் உளவள ஆற்றுப்படுத்தல் வழிகாட்டிகளை (Training of Trainers) பயிற்றுவிக்கும் கருத்தமர்வொன்று இடம்பெற்றது. 52 உறுப்பினர்கள் பங்கு கொண்ட இந்நிகழ்வினை கொழும்பு சலேசியன் துறவற சபையின் அனுசரணையுடன் ஆற்றுப்படுத்தல் நிபுணர்களான ஒரு ஐரோப்பியரும் ஒரு இந்தியரும் இணைந்து வளவாளர்களாகச் செயற்படுத்தினர். மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வெவ்வேறு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களே இப்பயிற்சிப்பட்டறை மூலம் பயிற்றப்பட்டவர்களாவர். இந்நிகழ்வினூடாக புதியன பலவற்றையும் தெரிந்துகொண்டோமென பலரும் பேசிக்கொண்டனர்.

### (மாசி 2–7) மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்களுக்கான வருடாந்தத் தியானம்

இவ்வருடத் தியானத்தினை யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் சபையின் முன்னைநாள் முதல்வர் அருட்திரு. ம. போல் நட்சத்திரம் அடிகளார் சிறப்பாக நெறிப்படுத்தினார். குருக்களின் அழைப்பு, பணி மற்றும் அர்ப்பண வாழ்வு பற்றி பல உதாரணங்களுடன் விபரித்து உரை நிகழ்த்தினார். ஆயர், குருக்கள் உட்பட 55 பேர் பங்கெடுத்த இத்தியானமானது மிகவும் பயனுள்ளதாக அமைந்ததெனப் பலரும் பேசிக்கொண்டனர். குருத்துவ வாழ்வின் கடந்தகாலத்தைப்பற்றி ஒவ்வொருவரும் சிந்தித்துப் புதுப்பித்து புத்தூக்கத்தோடு செயற்படுவதே இத்தியானத்தின் நோக்கமாகும்

### (பங்குனி 13 -15) கொழும்பு மறைமாவட்ட பொதுநிலையினருக்கான தியானம்

கொழும்பு உயர் மறைமாவட்ட பொதுநிலையினர் 47 உறுப்பினர்களுக்கான தவக்காலத் தியானமானது நற்கருணைச் சபையின் முதல்வர் அருட்தந்தை சவுகான் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது. 13ந் திகதி காலை 7.00 மணி அளவில் மடுத்தியான இல்லத்தினை வந்தடைந்த இக்குழுவினர் காலை உணவையடுத்து தமது தியானத்தினை ஆரம்பித்தனர். ஆன்மீகப் புதுப்பித்தலாக இடம்பெற்ற இத்தியானமானது 15ந் திகதி மதிய உணவுடன் நிறைவடைந்தது. இத்தியானமானது நற்கருணைச் சபைக்குருக்கள் மற்றும் அருட்சகோதரர்கள் எழுவரினால் சிறப்பாக நடாத்தப்பட்டது.

### (பங்குனி 21 – 23) மன்னார் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத்தியானம்

263 கத்தோலிக்க ஆசிரியர்கள் பங்கெடுத்த இத்தியானமானது 21ம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி 23ந் திகதி மதிய உணவுடன் நிறைவடைந்தது. முதல் நாள் ஆரம்பத்தில் இடம்பெற்ற சிறிய வழிபாட்டினை அடுத்து அனைவரும் வரவேற்கப்பட்டதுடன் ஆசிரியர்களுக்கான பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இரவுணவைத் தொடர்ந்து ஆன்மீக வலுவூட்டல் உரையானது செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்திரு அலெக்சாண்டர் பெனோ அடிகளாரினதும் மன்னார் மறைமாவட்ட ஆணைக்குழு இயக்குனர் அருட்திரு பிரான்சிஸ் றெஜினோல்ட் அடிகளாரினாலும் வழங்கப்பட்டன.

இரண்டாவது தின நிகழ்வுகள் யாவும் டிலாசால் சபைச் சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ் அவர்களால் விரிவாக நடாத்தப்பட்டன. ஆசிரியர்கள் அனைவரும் முழுமையாக நிகழ்வுகளில் பங்கெடுத்து ஒவ்வொருவரும் அவரவரைப்பற்றி முழுமையாக அறிந்துகொண்டு மேல் நடவடிக்கைகளுக்கு முன்வந்தமை அவர்களது பகிர்தல் வேளைகளில் தெரியவந்தது. மாலை இடம்பெற்ற நற்கருணை ஆராதனையில் அனைவரும் பங்கெடுத்து இறை ஆசீரைப் பெற்றுக்கொண்டனர்.

மூன்றாவது தினம் காலை உரை தோட்டவெளித் தியான இல்ல இயக்குனர் அருட்திரு. அ. யூட்குருஸ் அடிகளாரினாலும் தொடர்ந்து குருமுதல்வர் அருட்திரு அ. விக்ரர் சோசை அடிகளாரினால் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி நிறைவில் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆசிரியர்களைச் சந்தித்து ஆசிரியர்களது மகத்தான அழைப்பு, புனிதமான பணி, இறைவனைப் ரிரதிபலிக்கும் வாழ்க்கை பற்றி எடுத்தியம்பினார். மதிய உணவுடன் மூன்றுநாள் தியானம் நிறைவுபெற்றது. இத்தியானத்தினை மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி ஆணைக்குழு ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

### (சித்திரை 7 – 9)
### நீதி, சமாதானக் கருத்தமர்வு

அறுபத்தைந்து உறுப்பினர் அடங்கிய தமிழ், சிங்கள இளைஞர்களுக்கான கருத்தமர்வு மேற்குறிப்பிட்டுள்ள மூன்று தினங்களிலும் நடைபெற்றது. இரு இன இளைஞர்களிடையே பரந்தளவிலான புரிந்துணர்வும் ஒன்றித்துச் செயற்படுகின்ற மனநிலையும் உருவாக வேண்டுமென்ற பாணியில் இடம்பெற்ற இக்கருத்தமர்வு அர்த்தமுள்ளதாக அமைந்ததுடன் புதிய முகங்களைக் காண வாய்ப்பளித்ததோடு உறவுப்பாலத்தைக் கட்டி எழுப்பக்கூடியதாகவும் அமைந்ததென பங்கெடுத்தோரில் பலர் பகிர்ந்துகொண்டனர்.

### சித்திரை 10 : வன்னி கியூடெக் அமைப்புப் பணியாளர்களுக்கான தவக்காலத் தியானம்

யாழ் மறைமாவட்டத்தின் அங்கமான வன்னி கியூடெக் அமைப்பின் பணியாளர்களுக்கான தவக்காலத் தியானம் சித்திரை 10ம் திகதி காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை இடம்பெற்றது. வன்னி கியூடெக் அமைப்பின் இயக்குனர் அருட்திரு. யாவிஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இத்தியானத்தினை கிளறீஷியன் சபை அருட்தந்தை ஜோய் மரியரெட்டிணம் அடிகளார் மிகவும் சிறப்பாக நடாத்தினார். கியூடெக் அமைப்பில் இருந்துகொண்டு அல்லல்படுவோரின் துன்பங்களைத் துடைக்கக் கிடைத்த வாய்ப்பு இறைவனால் கொடுக்கப்பட்டது என்ற மனநிலையோடு எச்சந்தர்ப்பத்திலும் மனம் கோணாது செயற்படல் வேண்டுமென்று கூறி அனைவரையும் ஊக்குவித்தார். 40 உறுப்பினர்கள் மட்டில் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### வைகாசி 7- 9 : குருநாகல் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கருத்தமர்வு

குருநாகல் பிரதேசத்தில் இருந்து வருகை தந்த ஆசிரியர்களும் மாணவர்களுமாக 75 அங்கத்தினர் மட்டில் இந்நிகழ்வில் பங்கெடுத்தனர். வைகாசி மாதம் 7ம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வானது 9ம் திகதி காலை உணவுடன் நிறைவடைந்தது. ஆசிரியர்கள், மாணவர்களிடையே இருக்கவேண்டிய உறவு நிலை மற்றும் புரிந்துணர்வு பற்றிய உரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. இரு தரப்பினரும் திருப்திகரமாக இந்நிகழ்வுகளில் பங்கெடுத்து பல புதிய விடையங்கள் கற்றுக்கொண்டதாகக் கூறி மகிழந்தனர்.

### வைகாசி 25- 27 : யாழ் மறைமாவட்ட மூத்த குருக்களுக்கான கருத்தமர்வு

யாழ் மறைமாவட்ட மூத்த குருக்கள் 16 பேர் கலந்துகொண்ட இந்நிகழ்வானது வைகாசி மாதம் 25, 26, 27ம் திகதிகளில் இடம்பெற்றது. 25ம் திகதி மாலை 7.00 மணியளவில் தியான இல்லத்தை வந்தடைந்த அருட்தந்தையர்கள் இரவுணவின்பின் கருத்தமர்வுக்கான நிகழ்ச்சித் திட்டத்தினைத் தயார்படுத்தினர். மறுதினம் உரைகள் யாவும் திருகோணமலை மறைமாவட்டக் குரு அருட்திரு. நோயல் இம்மானுவேல் அடிகளாரினால் மேற்கொள்ளப்பட்டன. உரைகள் முடிவில் ஆய்வும் திருப்பலியும் இடம்பெற்றன. குருக்களின் வாழ்வு மற்றும் பணிகள் பற்றியதாக உரைகள் அமைந்திருந்தன.

27ம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடல் யாழ் மறைமாவட்ட அருட்தந்தையர்களான பயஸ் இருதயதாஸ், லோறன்ஸ் மற்றும் மன்னார் மறைமாவட்ட அருட்தந்தையர்களான யூட் குரூஸ், றொக்சன் குரூஸ் அடிகளாரினால் மேற்கொள்ளப்பட்டன. காலை 10.00 மணியளவில் நிகழ்வுகள் யாவும் முடிவடைந்தன. இந்நிகழ்வினை யாழ் மறைமாவட்டக் குருக்கள் குழாமின் தலைவர் அருட்திரு. ஸ்ரலின் அடிகளார் ஒழுங்குபடுத்தியிருந்தார்.

### ஆனி 9- 11 : தேசியமட்ட துறவறசபை முதல்வர்களுக்கான கருத்தமர்வு

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலை பரவலாக அறிந்துகொள்ளும் நோக்கோடும் இச்சூழலானது எந்தவகையில் மக்களின் நல்வாழ்வுக்கு அமைவானதாகவும் எவ்வகையில் மக்களைச் சாராதவையாகவும் உள்ளன என்பதைக் கண்டறியும் நோக்கோடும் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் 36 உறுப்பினர்கள் பங்குபற்றினர். இவ்வொன்றுகூடலில் 10 அருட்தந்தையர்களும் 26 அருட்சகோதரிகளும் கலந்துகொண்டனர். 9ம் திகதி மதிய உணவுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வானது 11ம் திகதி மதிய உணவுடன் நிறைவடைந்தது இக்கருத்தமர்வினை கிளறிஷியன் சபை முதல்வர் அருட்திரு. றொகான் டொமினிக் மற்றும் யேசுசபை முதல்வர் அருட்தந்தை ஜெயராஜ் இராசையா ஆகியோர் முன்னின்று நடாத்தினர்.

இரண்டாவது நாள் காலை இக்குழுவினர் மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் பிரதேசத்தின் கயாக்குழி என்னும் புதுக்குடியேற்றத் திட்டத்தில் வாழும் மக்களைச் சந்தித்து உரையாடினர். இறுதிநாள் நிகழ்வினை யாழ் பெரிய குருமட விரிவுரையாளர் அருட்திரு. S. V. B. மங்களராஜா அடிகளார் நடாத்தினார். அடிகளார் தமது உரையில் கூடுதலாக வடபகுதி நிலைமைபற்றி விபரித்தார். நிகழ்வுகள் யாவும் மாலை 3.00 மணியளவில் நிறைவுபெற்றது.

### ஆனி 11 – 14 : இளைஞர்களுக்கான பால்நிலைக் கருத்தமர்வு

மன்னார் பெமிலியன் அமைப்பினால் நடாத்தப்பட்ட மேற்படி கருத்தமர்வில் ஆண்கள், பெண்கள் என 35 உறுப்பினர்கள் பங்கெடுத்தனர். மன்னார் மறைமாவட்டத்தின் சில பகுதிகளில் இருந்தும் கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பிரதேசத்திலிருந்தும் இளைஞர்கள், யுவதிகள் வருகை தந்திருந்தனர். இந்நிகழ்விற்கு வளவாளராக வவுனியா சேவா லங்கா அமைப்பின் பணியாளர் திருவாளர் அருள் அழகன் செயற்பட்டார். ஆண், பெண் சமஉரிமை சமூகத்தில் பேணப்படல் அவசியமானது என்ற வகையில் உரைகள் யாவும் அமைந்திருந்தன.

### ஆனி 18 – 20 : தேசியமட்ட அன்பிய ஆணைக்குழுவின் நிர்வாக ஒன்றுகூடல்

ஆனி மாதம் 18ம் திகதி முதல் 20ம் திகதி வரை இடம்பெற்ற மேற்படி ஒன்றுகூடலில் 43 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் 10 அருட்தந்தையர்களும் 9 அருட்கன்னியர்களும் ஏனையோர் பொது நிலையினருமாவர். தேசிய இயக்குனரின் வழிகாட்டலில் மன்னார் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குனர் அருட்திரு. சூ. டக்லஸ் லோகு அடிகளாரினால் ஒழுங்கமைக்கப்பட்ட இக்கருத்தமர்வானது 18ம் திகதி மதிய உணவுடன் ஆரம்பமாகி 20ம் திகதி பி.ப 2.00 மணியளவில் நிறைவுபெற்றது.

மன்னார் மறைமாவட்ட அருட்தந்தை சூ. ஜெயபாலன் குரூஸ் அவர்கள் இரண்டாம் நாள் கருத்தமர்வினை நெறிப்படுத்தினார். முதல்நாள் பிற்பகல் இடம்பெற்ற பொது ஒன்றுகூடலையடுத்து உறுப்பினர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நான்கு பங்குகளின் அன்பிய உறுப்பினர்களைச் சந்தித்து பகிர்தல் நடாத்துவதற்காக தட்சனாமருதமடு, சின்னப்பண்டிவிரிச்சான், குஞ்சுக்குளம் மற்றும் செட்டிகுளம் ஆகிய பிரதேசங்களுக்குச் சென்றனர். இரண்டாவது நாள் பி.ப 2.00 மணிக்கு மன்னார் சென்று மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகையுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். தொடர்ந்து மன்னார் பேராலய அன்பியப் பணியாளர்களோடு கலந்துரையாடிவிட்டு இராவுணவைப் பேசாலைப் பங்கில் முடித்துவிட்டு மீண்டும் மடுத்தியான இல்லம் வந்தனர்.

மூன்றாம் நாள் இடம்பெற்ற பொது அமர்வில் பல திட்டங்களை எடுத்துக்கொண்டு மனநிறைவோடு அவரவர் மறைமாவட்டங்களுக்குச் சென்றனர்.

### ஆனி 22 – 24 :- யாழ் நடுத்தர வயது அருட்தந்தையர்களுக்கான கருத்தமர்வு

குருத்துவ வாழ்வின் 16 வருடங்கள் முதல் 24 வருடங்கள்வரை பூர்த்திசெய்த குருக்களுக்கான ஒன்றுகூடல் இதுவாகும். கடந்துவந்த வருடங்கள் பயணித்த பாதை மற்றும் ஆற்றிய பணிகள் பற்றிய மீளாய்வுக் கருத்தமர்வு மிகவும் சிறப்பாகவும் அர்த்தமுள்ள வகையிலும் இடம்பெற்றது. 14 குருக்கள் பங்குபற்றிய இக்கருத்தமர்வானது யாழ் மறைமாவட்டக் குருக்கள் குழாமின் தலைவர் அருட்திரு. ஸ்ரலின் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது. வளவாளராக திருமலை மறைமாவட்டக் குரு அருட்திரு. நோயல் இம்மானுவேல் அடிகளாரும் மற்றும் யேசுசபைச் சேர்ந்த அனுராதபுர மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருவானவர் ஒருவரும் செயற்பட்டனர். இந்நிகழ்வு மிகவும் பயனுடையதாக இருந்தது எனப் பலரும் பேசிக்கொண்டனர். 22ம் திகதி மாலை 7.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வு 24ம் திகதி காலை 10.00 மணியளவில் நிறைவுபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## பெண்ணாய் பிறந்ததனால் ........

இந்திரா காந்தியோடு நான் சுடப்பட்டேன்
கல்பனா சால்வாவோடு விண்வெளியில் கரைந்துபோனேன்
நவநீதம்பிள்ளையோடு ஐ.நா. சபையில் .....
சுசந்திக்காவின் அத்தனை பதக்கங்களையும்கூட
நின்று பெற்றுக்கொண்டேன்!
எம். எஸ். சுப்புலட்சுமியின் இசை கேட்கும்போது
இறைவனை நேரில் காண்கிறேன்.
கிருஷாந்தியோடு புதையுண்டு போனேன்
ஒவ்வொரு வல்லுறவுச் செய்திகளைப் படிக்கும்போதும்
இந்த வலியை உணர்கின்றேன்.
ஒவ்வொரு தாயின் தியாகத்தாலும் தலைநிமிர்கின்றேன்
தெருக்களும், புதர்களும் தாயாகும்போது சாலமோனின்
ஞானத்தைச் சந்தேகிக்கிறேன்.

தாமரையின் கவிதைகளால் என் பேனா மலர்கிறது
ஐஸ்வர்யாராயின் அழகிலே அகமகிழ்கிறேன்
சின்னஞ் சிறிய மலாலா எரிநெருப்பாய் என் முன்னே .......
றிசானாவின் மரணத்தால் வறுமை, ஏழ்மை, இல்லாமை,
இயலாமை என்கின்ற கயிறுகள் என் குரல்வளையை நெரித்தன.
எழுதமுடியாத அளவுக்கு எண்ணற்ற பெயர்கள் ....
விழுதுகளாய் வேர்களாய் விருட்சங்களாய் எனக்குள்ளே...

"கஸ்தூரிபாய் காந்தி" நான் படித்த மிகச் சிறந்த புத்தகம்.
அனைத்து நாட்டின் தேசியக்கொடிகளாலும்
அன்னை திரேசா போர்த்தப்பட்டபோது
பெண்ணாய்ப் பிறந்ததையிட்டு பேருவகை கொண்டேன்.

எங்கு யுத்தமோ எங்கெல்லாம் அழிவுகளோ
எந்த நாட்டில் கலவரமோ அவற்றினால் அதிகம்
பாதிக்கப்படுகின்ற பெண் இனத்திற்காக
பெண்களுள் பெரும் துயரைச் சந்தித்தவளும்
பெண்களுள் பேறுபெற்றவளுமான
அன்னை மரியாளின்முன் நான்......!

ஜெயா பாலாஜி, முருங்கன்.

## சீதனம்



கனவுகளோடு காத்திருக்கும்
கன்னிப் பெண்கள்
தன்னம்பிக்கை இல்லா
ஆண் மகனுக்கு அளிக்கும்
பிச்சைப் பணம்.

அ. கனிஸ்ரா (நிறஞ்சலா)
நறுவிலிக்குளம், வங்காலை

## முத்தரிப்புத்துறை
## காமலின் சௌமியா குரூஸ் கவிதைகள்


### மரணித்த மனித நேயம்

அதிக நம்பிக்கையும் அளவு கடந்த அன்பும்
என்றோ ஒருநாள் உங்களையே கொல்லும்.
மனச்சாட்சி இல்லாத மனித சமுதாயத்தில்
உறவுகளில் ஒருநாளும் உண்மை இருக்காது.
மனித நேயம் மரணித்து மண்ணோடு புதையுண்டு போனது.
பிறப்புக்கே அர்த்தமின்றி இறப்புக்கள் சொந்தமாகின.
ஆட்சிகளே பொய்யானபோது சாட்சிகளுக்கு ஏது கதி?
உறவுகளே உணருங்கள், உங்களையே மாற்றுங்கள்
நிலையற்ற வாழ்வில் நியாயங்களை நிலைநாட்டி
மனிதநேயம் உள்ள மனிதர்களாய் வாழுங்கள்.

### புதிய உறவு

தாயை நேசித்தேன் - அன்பு கிடைத்தது
தந்தையை நேசித்தேன் - பாசம் கிடைத்தது
நண்பர்களை நேசித்தேன் - நட்புக் கிடைத்தது
உற்றாரை நேசித்தேன் - உறவு கிடைத்தது
கடவுளை நேசித்தேன் - அனைத்தும் கிடைத்தது.

### இறைவார்த்தை




பாவத்தை அகற்ற ....
பிறரை மன்னிக்க .......
உள்ளத்தைத் தொட ......
அன்பைப் பகிர .....
கருணை காட்ட ........
நிம்மதி பெற .....
இறைவழி செல்ல ....
இறைவார்த்தை - எம்
உயிர் வார்த்தையாக
உதவுகிறது.

### வலி



தனிமையில் அழுவதுகூட
வலிக்கவில்லை
ஆனால் வலிக்கிறது
பிறர்முன் சிரிப்பதுபோல
நான் நடிப்பது.

# சிறுகதை

அ. ஜஸ்மின் ஷறோன்
ஆவணம், நானாட்டான்.

## தாயுமானவள்

"ஐயோ! அம்மா! பசிக்கிது, தண்ணி தவிக்கிது, என்னால் முடியாது .... ஏதாச்சும் தாங்க....!" அடிக்கடி திவ்வியா இதையே கூறிக்கொண்டிருந்தாள். எதைக் கொடுப்பது? எங்கிருந்து வாங்கிக் கொடுப்பது? யாரிடம் போய்க் கையேந்துவது? என்று தெரியாமல் தவித்தாள் திவ்வியாவின் தாய் செல்லம்மா. பசியின் கொடுமையால் பிள்ளை தவிக்கும் தவிப்பை எண்ணி அழுத அவள், தன் கடந்தகால வாழ்க்கைக்குள் மூழ்கினாள்.

நான்கு பிள்ளைகளுக்குத் தாயான செல்லம்மா, ஆசைக்கு மூன்று மகனையும், ஆஸ்திக்கு ஒரு மகளையும் பெற்றெடுத்தாள். தினமும் குடித்துவிட்டுவந்து அடித்து உதைக்கும் கணவனின் தொல்லையால் செல்லம்மா மிகவும் களைத்துப்போயிருந்தாள். தாங்கமுடியாத தனது வேதனை மத்தியிலும், தன் கணவர் தனிமையில் இருக்கும்வேளை அவருக்குப் புத்தி சொல்லி, அவரை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுடன் வைத்திருந்தாள். கட்டுப்பாட்டில் இருந்தாலும் மனைவிக்குத் தெரியாமல் அவ்வப்போது அவள் கணவர் குடித்துவந்தார். இதை அறிந்த செல்லம்மா என்ன செய்வதென்றே தெரியாமல் தவித்தாள். சொந்தக்காலில் நிற்கமுடியாத கணவரை எண்ணி எண்ணி வருந்தினாள். குழந்தைகளுக்கு உணவு கொடுக்கமுடியாமல் தவித்தாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிப்போய் இருந்தவளுக்கு ஓர் யோசனை எட்டியது. சிறு கடை ஒன்றைப் போட்டு உழைத்தால் என்ன என்று சிந்தித்தாள். அருகிலுள்ள லோகேஸ் அண்ணனிடம் சென்று ஆலோசனை பெற்றாள். அவரின் உதவியுடன் சிறு தொகையைக் கடனாகப் பெற்று கடையை ஆரம்பித்தாள். சிறிது சிறிதாக வியாபாரம் சூடுபிடிக்கத் துவங்கியது. மக்கள் தொகை அமோகமாக வர ஆரம்பித்தது. தனியாக நின்று சமாளிக்க முடியவில்லை. அதனால் படித்துகொண்டிருந்த தன் மூத்த மகனை இடைநிறுத்தி கடைக்கு உதவியாக வைத்துக்கொண்டாள்.

மூன்று ஆண் குழந்தைகளும் தகப்பனின் சொல்கேட்டு வளர்ந்தார்கள். அவருடனே அதிக பாசம் காட்டினார்கள். பெண் குழந்தை மட்டும் தாயின் அன்பிலும், பாசத்திலும், அரவணைப்பிலும், நற்குணத்திலும் வளர்ந்தாள். இதனாலே இவள் தாயுடன் அதிக அன்பு கொண்டிருந்தாள்.

ஒருநாள் செல்லம்மாவின் மூத்த மகன் தனியாகக் கடையைத் தனியாகக் கவனிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அம்மாவும், மகள் திவ்வியாவும் கோவிலுக்குப் போயிருந்தனர். இதனால் மகனுக்கு சந்தோஷமாக இருந்தது. இத்தனை நாளாக இரகசியமாக அப்பாவுக்குச் சாராயம் வாங்கப் பணத்தைக் கொடுத்தவன், இன்று பரகசியமாகத் தகப்பனுக்குக் காசு கொடுத்து தனக்கும் சாராயம் வாங்கிவரச் சொன்னான். இதனைக் கடைக்கு வந்த பலர் கண்டனர். முக்கியமாக செல்லம்மாவுக்குப் பணம் கொடுத்த லோகேசும் கண்டுவிட்டார். உடனடியாக அவர் செல்லம்மாவைச் சந்தித்து நடந்த சம்பவங்களை விளக்கினார். செய்வதறியாது ஓடிவந்த தாயும், மகளும் மூத்தமகன் குடிபோதையில் மயங்கிக் கிடப்பதைக் கண்டு அழுது புலம்பினாள். மனைவியைக் கண்டு பயத்துடன் ஓடிய கணவன் வீதியில் வந்த வாகனம் ஒன்றில் மோதி தலை அடிபட்டு அந்த இடத்திலேயே மரணமானார். இச்செய்தி கேட்ட செல்லம்மா தன் கணவனை இழந்த சோகத்தில் தன் மகளை அணைத்துக்கொண்டு அழுது புலம்பினாள்.

கடை வியாபாரம் ஓகோ என்று உயர்ந்து சென்றாலும் செல்லம்மாவின் மனம் கணவனை எண்ணி வருந்தியது. கடை வியாபாரம் மூலம் அவர்கள் நிறைந்த செல்வத்துடன் வாழ்ந்தார்கள். எதற்குமே குறையில்லை. அதற்கு ஏற்றாற்போல மகனும் வளர்ந்து தன்னைக் காப்பாற்றுவான் என எண்ணிய செல்லம்மாவிற்கு பெரும் அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது. மூன்று மகன்மாரும் போதைக்கு அடிமையானார்கள். சிறிது சிறிதாக குடித்து போதைப்பொருள் இல்லாமல் வாழமுடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டனர். இதனால் பணம் கடையில் இருந்து திருட்டுப்போகத் தொடங்கியது. இதை அறிந்தும் அறியாத செல்லம்மா மீதியாக எஞ்சும் பணத்தைச் சேமித்து வந்தாள்.

ஒரு நாள் தாய் இல்லாத நேரம் பார்த்து பணத்தை திருடச்சென்ற இளைய மகன் பணப்பெட்டியில் காசுத்தாள் இல்லாததைக் கண்டு திகைத்துப் போனான். நான் வருவதற்குள் யார் எடுத்திருப்பார் என எண்ணியவன் பணப்பெட்டி இருந்த இடம் எல்லாம் தேடிப்பார்த்துக் கொண்டிருந்தவேளை தாயும் வந்துவிட்டாள். தாயின் குரலைக் கேட்டு பதட்டப்பட்டவன், தாயை கண்டவன் அவ்விடத்தைவிட்டு ஓடிப்போனான். பணப்பெட்டியைத் திறந்து பார்த்த செல்லம்மா, அதற்குள் பணம் எதுவும் இல்லாததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாள். "இளையமகன்தான் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான், வரட்டும் பார்த்துக்கொள்கிறேன்" என எண்ணியவளாய்க் கவலையுடன் காத்திருந்தாள்.

இரவு 7.00 மணிக்கு போதை மயக்கத்தில் வந்த மூத்த மகனிடம் நடந்தவைகளைக் கூறி இளையமகன் செய்த செயல்களை எடுத்துரைத்தாள். கடைசித் தம்பியைவிட்டு தான் பணத்தைச் சுருட்டி எடுத்த விடயம் அம்மாவுக்குத் தெரியாதென எண்ணியவன், தாயுடன் சேர்ந்து இளைய மகனைத் திட்டிக்கொண்டிருந்தான். அந்தவேளையில் இளையவனும், கடைசி மகனும் அங்குவந்து சேர்ந்தனர். வந்த உடனே இளைய மகனிடம், "பணத்தை எல்லாம் சுருட்டிக்கொண்டுபோய் என்ன செய்தாய்? பணத்தை எல்லாம் எங்கே ஒழித்துவைத்துள்ளாய்? சொல்லு!" என்று மிரட்டினாள் தாய். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# கொஞ்சம் சிரிங்க

ஆவி 1: விஷம் குடிச்சி சாகபோனேன்..... விஷத்தில கலப்படம். பிழைச்சிகிட்டேன்.
ஆவி 2: அப்புறம் எப்படி செத்த?
ஆவி 1: காப்பாத்த மருந்து கொடுத்தாங்க மருந்துல கலப்படம். செத்துட்டேன்.

.....................

ஒரு பையனும் பொண்ணும் பேசிக்கொண்டது :
"ஐ லவ் யூ!"
"ஐ டோன்ட் லவ் யூ"
"நல்லா யோசிச்சு சொல்லு டியர்!"
"கண்டிப்பா, ஐ டோன்ட் லவ் யூ!"
"ஒ.கே. வெயிட்டர்...... எனக்கு மட்டும் பில் போடு"
"ஏய்! ஏய்! ஐ லவ் யூடா! செல்லம்!"

பெ. பிரகாச மேரி, கலைப்பிரிவு, வ.பூவரசங்குளம் ம.வி

காதலன் - ஆப்பிரேஷன்ல நான் இறந்திட்டா இந்த டாக்டரையே நீ கல்யாணம் பண்ணிக்கனும். எனக்காகச் செய்வியா?
காதலி – ஏன் இப்படிப் பேசுறீங்க?
காதலன் - வேற எப்படி அந்த டாக்டர பழிவாங்கிறது?

.....................

வாசு - டேய்! நான் நேத்து உங்க வீட்டுக்கு வந்தேன். உங்க அப்பாகிட்ட உன்னை எங்கேன்னு கேட்டேன், "அந்த மாடு எங்கேயாவது மேயப் போயிருக்கும்னு" சொன்னாரு, உன்கிட்ட சொன்னாரா?
பாசு – ஆமாடா, நான் வெளிலேயிருந்து வந்ததும், "ஒரு எருமை உன்னை வந்து தேடிட்டு போச்சு" என்று சொன்னாரு.

ஆர். றோஜினி றோஜ், பள்ளிமுனை மேற்கு, மன்னார்.


மகன் - எப்போது கை நிறைய பணம் இருக்கும்?
தந்தை - வாய் நிறையப் பொய் இருந்தால்.

# மன்னா விளம்பரப் பலகை

தோல்விகளிடம் வழிகேட்டுத்தான்
வெற்றியின் வாசல்படிக்கு வந்துசேரமுடியும்.....!



வலியோடு போராடினால்தான்,
ஒரு பெண் தாயாக முடியும்.
இருளோடு போராடினால்தான்,
புழு வண்ணத்துப் பூச்சியாக முடியும்.
மண்ணோடு போராடினால்தான்,
விதை மரமாக முடியும்.
வாழ்க்கையோடு போராடினால்தான்,
நீ வரலாறு படைக்க முடியும்!



"நேற்று என்பது அனுபவம் இன்று என்பது நிகழ்வு
நாளை என்பது நம்பிக்கை"

.....................................

"நல்லவனாகப் பிறப்பது சந்தர்ப்பத்தினால்.
நல்லவனாக வாழ்வது முயற்சியினால்"

- சீ. மி. எலோமா அஸ்வினி,
கள்ளியடைஞ்சான், வட்டக்கண்டல்.



உதிரும் மலருக்கு ஒரு நாள்தான் மரணம்.
பேசாத அன்புக்கு தினம் தினம் மரணம்.
உரிமையோடு பேசுங்கள்,
உறவுகளை நேசியுங்கள்.
அன்பைச் சுவாசியுங்கள்.

மண்ணுக்கும் பொன்னுக்கும் உயிரைக்கொடுத்து போராடுவது பயனற்றது. மண் நமக்குச் சொந்தமல்ல, நாம்தான் மண்ணுக்குச் சொந்தமானவர்கள்.

வீழ்வது வெட்கமில்லை. வீழ்ந்துக் கிடப்பதுதான் வெட்கம்.

- ஆர். மயூறி, கொக்குப்படையான், சிலாவத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் – 09 மாணவர்களுக்கான வினா – விடைத் தொகுப்பு - 2014 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ புனித ஆனாள் ம.மா.வி, வங்காலை.

01. இறை ஏவுதலில் செயல், பேச்சு, எழுத்து ஆகிய நிலைகளுக்குள் அடங்குவோர் யார்?
செயல் - இஸ்ராயேலை வழிநடத்திய தலைவர்கள்
பேச்சு - இறைவாக்கினர்கள்
எழுத்து - திருவிவிலிய எழுத்தாளர்கள்
02. பாலைநிலத்தில் சோதனைகளுக்கு இயேசு முகம் கொடுக்கின்றபோது எந்த நூலிலிருந்து பதிலளித்தார்?
இணைச்சட்டம் 8:3
03. இறைவனின் குரலுக்குச் செவிசாய்த்து அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக்கொண்ட நால்வரின் பெயர்களைத் தருக?
சாமுவேல், எசாயா, யோசேப்பு, மரியாள்.
04. இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொண்டவர்களது பண்புகள்பற்றி திருவிவிலியத்தில் எந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ளது?
கொலோசையர் 3:12-15
05. இவ்வுலகில் இயேசுவில் மிளிர்ந்த பண்புகள் எவை?
தாழ்மை, கீழ்ப்படிவு, சுயபரித்தியாகம்
06 வழக்கறிஞரின் பாதுகாவலர் யார்? புனித தோமஸ் மூர்.
07. புத்தளம் என்னுமிடத்தில் 'சுபசெத்கெதர' என்னும் அமைப்பை உருவாக்கி ஏழை விவசாயிகளுக்கு உதவியவர் யார்?
அருட்பணி. மைக்கல் ரொட்ரிக்கோ அடிகள்.
08. ஒழுக்கரீதியில் பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோரின் கடமை என்பதையறிந்து அவர்களுக்கு வகுப்புகள் நடத்தி அறிவுரைகள் வழங்கியவர் யார்? திரு. கொட்வின் மெண்டிஸ்
09. தோமஸ் பெஞ்சமீன் கருதினால் கூறே ஆற்றிய சமூகப் பணிகள் யாவை?
அமலமரித்தியாகிகளின் பராமரிப்பில் மக்கொனாவிலுள்ள தவறியோரைத் திருத்தும் தொழில்நுட்ப நிறுவனமாகிய புனித வின்சன்ட் இல்லம், அச்சியந்திரசாலை, கைத்தொழிற்சாலை, மணிக்கூடு செய்யும் நிலையம், அனாதைகள் இல்லம், கத்தோலிக்க நன்கொடை பெறும் பாடசாலை போன்றவற்றை நிறுவி சமூகப் பணிசெய்தார்.
10. திருப்பலி வாசகங்கள் மாறாத விழாக்கள் எவை?
கிறிஸ்து பிறப்பு விழா, உயிர்ப்பு விழா, மரியாளின் விண்ணேற்பு
11. பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கைப் பேழையின் அர்த்தம் என்ன? இறைபிரசன்னம்
12. நோயில்பூசுதலில் பயன்படுத்தப்படும் எண்ணெய் எது?
நோயாளர் எண்ணெய்
13. திருப்பலி நன்றியுரையின் முடிவில் மக்கள் கூறும் பதில் என்ன? தூயவர் தூயவர் தூயவர்
14. திருவழிபாட்டில் ஆரார்த்தி எடுப்பதன் நோக்கம் என்ன?
இறைவனுக்கு அஞ்சலி செலுத்த, இறைபிரசன்னத்தை உணர்ந்திட.
15. நாம் எத்தகைய அழைப்பைப் பெற்றிருந்தாலும் எந்தப் பணியில் அல்லது தொழிலில் ஈடுபட்டாலும் நாம் எவ்வாறான இறையரசின் மதிப்பீடுகளை எம்மில் வளர்த்துப் பணிபுரிய வேண்டும்? உண்மை, நீதி, நேர்மை, அர்ப்பணிப்பு, சகிப்புத்தன்மை, தியாகம்.
16. செபிக்கும்போது எமக்கு இருக்க வேண்டிய மனநிலை?
இறைவனில் தங்கியிருத்தல்
17. திருச்பையின் பணிவாழ்வில் மிகச் சிறந்த பணி எது?
திருவழிபாடு
18. தை மாதத்தில் எந்தப் புனிதருக்கு விழா எடுக்கப்படுகிறது?
புனித டொன் பொஸ்கோ
19. பரிசுத்த ஆவியின் விழாவிற்கு முன்வரும் ஞாயிறு கொண்டாடப்படுவது? கிறிஸ்துவின் விண்ணேற்பு
20. ஒளியின் மறை உண்மை செபிக்கப்படும் தினம்?
வியாழன்
21. ஆண்டவரே! தேவரீர்......... எழுந்தருள நான் தகுதியற்றவன்? (என் இல்லத்தில்)
22. அன்னை மரியா ஆண்டு எப்போது உலகத் திருச்சபையால் கொண்டாடப்பட்டது? 1954
23. "நம் வாழ்க்கையின் இறுதித் தீர்ப்பு நாம் செய்த அன்பின் அடிப்படையில்தான் இருக்கும்" எனக் கூறியவர்?
புனித சிலுவை யோவான்
24. "நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறிவோம்" எனக் குருவானவர் கூறியபின் இறைமக்களின் பதில் என்ன?
அது தகுதியும் நீதியும் ஆனதே
25. திருவிவிலியத்தில் தோராவில் அடங்காத நூல் ?
யூதித்து
26. பழைய ஏற்பாட்டில் வரலாற்று நூல்? எஸ்ரா
27. இலங்கையின் தற்போதைய கருதினால் யார்?
கருதினால் மல்கம் ரஞ்சித்
28. அமல உற்பவக்குழு என்ற சபையை மாணவர்களுக்கு ஏற்படுத்தியவர்? புனித டோமினிக் சாவியோ
29. "மறைநூல் அனைத்தும் கடவுளின் ........... பெற்றுள்ளது" (தூண்டுதல்)
30. "நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் ..........இணைந்து இருங்கள். (என்னோடு)
31. "இழந்துபோனதைத் தேடிமீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்" லூக். 19: 10
32. பாப்பரசர் 10ம் பத்திநாதரால் 'புனிதர்' எனக் அழைக்கப்பட்டவர் யார்? புனித டோமினிக் சாவியோ
33. தூய யோசப்வாஸ் கண்டியில் புதுமைசெய்யும்போது அங்கு அரசாண்ட மன்னன் யார்? விமலதர்ம சூரியன்
34. "இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி" என இயேசுவைக் குறித்துக் கூறியவர் யார்? திருமுழுக்கு யோவான்
35. "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" என இயேசு யாருக்குக் கூறினார்? தம்மை நம்பிய யூதர்களுக்கு
36. "நித்திய வாழ்வு" பற்றிய எண்ணக்கரு அல்லாதது?
உலக வாழ்வு
37. இயேசுவின் மீட்புப்பணியின் செய்திகள் எவ்வழிகளில் வெளிப்பட்டன? இயேசுவின் புதுமைகள், உவமைகள் வழியாக
38. ஒற்றுமையின் அடையாளமாக இருப்பது எது?
கிறிஸ்துவின் மறையுடல்
39. இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு என்பன எவை? திருப்பலியின் முக்கிய இரு பகுதிகள்
40. "பாழாய்ப்போகும் அரசு" எது என இயேசு எந்த அரசைக் கூறுகின்றார்? தனக்கு எதிராகத்தானே பிளவுபடும் அரசை.
41. பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர் யார்? பெஞ்சமின்
42. திருச்சபையின் பண்புகளுள் அடங்காதது? ஒற்றுமையின்மை
43. பூமியில் நெடுங்காலம் வாழ வழிசொல்லும் கற்பனை எது?
நான்காம் கற்பனை
44. மண்ணினால் உண்டாக்கப்பட்ட அனைத்தும் எங்கே திரும்பும்?
மண்ணுக்கு
45. "உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்குமேல் எதையும் அறவிடாதீர்கள்" எனத் திருமுழுக்கு யோவான் யாருக்கு கூறினார்? வரிதண்டுவோருக்கு
46. திருமுழுக்கு யோவான் இயேசுவை அறிமுகம் செய்வதற்கு பயன்படுத்திய மிருகத்தின் பெயர் என்ன? ஆட்டுக்குட்டி
47. தமது உடமைகளை விற்று அதில் ஒரு பகுதியை வைத்துக்கொண்டு, பொய்கூறி தூய ஆவிக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்கள் யார்? அனனியா - சபிரா
48. திருவழிபாட்டின் நோக்கங்களுள் ஒன்றாக இருப்பது?
மனிதனைப் புனிதப்படுத்தல்
49. திருச்சபையால் மேற்கொள்ளப்படும் பக்திமுயற்சிகளில் அடங்காதது? திருமணித்தியாலம்
50. திருவருகைக்கால திரு உடையின் நிறம் என்ன? ஊதா

## உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 134

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

நாம் இப்போது வேதாகமம் தரும் மூன்றாம் இறைவாக்கினரான எசேக்கியேலின் நூலுக்குள் செல்கின்றோம். இது ஆதி உடன்படிக்கையின் 26ஆம் நூல். இதில் மொத்தமாக 48 அதிகாரங்கள் உள்ளன. நாம் சென்ற வாரம் பார்த்த புலம்பல் என்ற நூலின் 5 அதிகாரங்கள் எருசலேம் வீழ்ச்சியின்பின் மக்கள் அனுபவித்த கொடிய துன்பத்தைச் சொல்லுகின்றன.

எசேக்கியேலின் அதிகாரங்கள், இஸ்ராயேலின் பபிலேனிய அடிமைத்தனத்தின்போதும் எருசலேமின் வீழ்ச்சிக்குப் பின்பும் இருந்த காலங்களில் வாழ்ந்த யூதாவுக்கு பபிலோனிலும் எருசேலேமிலும் உரைக்கப்பட்ட இறைவாக்குகளைக் கூறுகின்றன.

எசேக்கியேல் ஏரேமியாவின் காலத்துக்குச் சிறிது முன்னதாக வாழ்ந்திருக்கலாம். இவர் ஒரு குருவாகவும் இருந்திருக்கின்றார். அதனால் மக்களை வழிநடத்தவேண்டிய பொறுப்பும் அவரிடம் இருந்தது. இவரது தந்தை 'பூசி' என்பதை நாம் அவர் நூலின் முதல் அதிகாரத்திலேயே காண்கின்றோம். அவரும் ஒரு குருவே.

எசேக்கியேல் ஆழ்ந்த இறைப்பற்று மிக்க, கற்பனை வளம் நிறையப்பெற்ற ஒருவராக இருந்தார். ஒவ்வொருவரும் தம் தீச்செயல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பதை உறுதிபடச் சொன்னார்.

பொதுவாக எப்போது மக்கள் தம் தீச்செயல்களால் கடவுளைவிட்டுத் தூரமாய் விலகிச்செல்கின்றார்களோ அப்பொழுது இறைவாக்கினர்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அபிசேகம் செய்யப்பட்டு, மனமாற்றத்திற்காக மக்களிடம் அனுப்பப்பட்டனர்.

**இனி எமது வினாக்களுக்கு வருவோம்.**

**வினாக்கள் எசேக்கியேலின் 1ம் அதிகாரத்திலிருந்து 12ம் அதிகாரம் வரை உள்ள பகுதிகளிருந்து தொகுக்கப்படுகின்றன.**

01. முப்பதாம் ஆண்டு நான்காம் மாதம் ஐந்தாம் நாள் நாடு கடத்தப்பட்டோருடன் எசேக்கியேல் எந்த ஆற்றோரம் இருந்தபோது விண்ணுலகம் திறந்து அவருக்கு முதலாம் காட்சி வழங்கப்பட்டது?
02. எசேக்கியேலை நோக்கி நீண்ட கையிலிருந்த சுருளேட்டில் எழுதப்பட்டிருந்தவை எவை?
03. எப்போது எசேக்கியேல் தன் உயிரைக் காத்துக்கொள்வார் என இறைவன் எசேக்கியேலிடம் கூறினார்?
04 . "நான் உங்களிடம் இருந்து விலகிவிடுவேன். என் கண்கள் இரக்கம் காட்டா." இது தலைவராகிய ஆண்டவரின் அறிவிப்பு. இறைவன் இப்படியான அறிவிப்பை ஏன் விடுக்கின்றார்?
05. "நீ கையடித்து காலை உதறிச் சொல், 'ஐயோ கேடு, இஸ்ராயேல் வீட்டாரின் எல்லாத் தீய அருவருப்புக்களுக்காகவும் அவர்கள் வாளாலும், வரட்சியாலும், கொள்ளைநோயாலும் மடிவர். அருகில் இருப்போர் வாளால் மடிவர்'" இறைவன் ஏன் இப்படி செய்கின்றார்?
06. எசேக்கியேலின் 8ம் அதிகாரம் எதைப்பற்றிக் கூறுகின்றது?
07. வடக்கு நோக்கி இருக்கும் வாசல் வழியாகக் கொலைக்கருவிகளுடன் வந்த அறுவருக்கும் ஆண்டவர் இட்ட கட்டளை என்ன?
08. எசேக்கியேல் காட்சியில் கண்ட நான்கு கெருபுன்களுக்கும் நான்கு முகங்கள் எவை?
09. நாடு கடத்தப்பட்டு பல்வேறு நாடுகளில் சிதறி வாழ்ந்த இஸ்ராயேல் மக்களுக்கு இறைவன் அருளும் மகிழ்ச்சிநிறை வாக்குறுதி என்ன?
10. பபிலோனில் வாழ்ந்த மக்களினம் எது?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 125 இற்கான கேள்விகளுக்கு 15 பேர் விடையளித்திருந்தனர்.**

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி

எ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. யே. அனோஜா பீரிஸ், கொவ்வங்குளம், நானாட்டான்.
2. ஆர். றோஜினி றோச், பள்ளிமுனை மேற்கு.
3. எம். ஜெசில்டா, இல 29B, பாசையூர், யாழ்ப்பாணம்.
4. எம். தேவி, 22/21B, எமில்நகர், மன்னார்.
5. திருமதி. யே. கத்தறின் றெஜினா, நானாட்டான்.
6. சு. அன்ரனி பொபிக்ஷன், கொக்குப்படையான். சிலாவத்துறை
7. யே. ஜீவறொமா, பரிகாரிகண்டல், முருங்கன்.
8. ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.
9. பு. சனோமிகா, முருங்கன்கமம், முருங்கன்.
10. யூ. பென்சி, ப. க. கொ. மேற்கு, மன்னார்

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## நீத்தார் நினைவு தொடர்பான அறிவித்தல்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=
(மன்னா இணையத்தளத்திலும் இந்த நினைவுகள் இடம்பெற வேண்டுமாயின் மேலதிகமாக ரூபா 3000 செலுத்தவும்)

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - மன்னா நிர்வாகம்.

## புனிதர்களின் பாதையில் ....

9ஆம் பக்கத் தொடர்ச்சி

மற்றொரு இயேசு சபைக்குரு பல்தசார் ஆல்வரஸ் என்பவர் "தூய ஆவியே எழுந்து வாரும்" என்ற பாடலை நாள்தோறும் பாடி இறைவனின் திருஉள்ளத்தைக் கண்டுகொள்ள வழிவகுத்தார். இம்முறையைப் பின்பற்றியதன் பயனாக, ஒரு முறை, "மனிதர்களுடன் பேசுவதற்குப் பதிலாக, தேவதூதர்களிடம் உரையாடலை வைத்துக்கொள்" என்ற குரல் தெரசாவுக்குக் கேட்டது. அன்று முதல் ஆண்டவர் மட்டுமே அவருடன் பேசுவதை அவரால் உணரமுடிந்தது.

கி.பி. 1515-ல் புனித பீற்றர் அல்காந்த்ரா இவரைச் சந்தித்தார். தூய ஆவியார் தெரசாவை முழுமையாக ஆட்கொண்டிப்பதாகக் குறிப்பிட்டார். இச்சூழலில்தான் தமது இதயம் ஈட்டியால் குத்தப் பட்டதையும் தெரசா உணர்ந்தார். கார்மேல் சபைச் சகோதரிகள் அத்துமீறி நடந்ததையும், செபவாழ்வில் அக்கறையற்று வாழ்ந்ததையும் உணர்ந்தார். மடங்களில் உள்ள வரவேற்பகத்தில் நாள் முழுவதும் வெளியாட்கள் வருவதும் போதுமான அவலநிலையை நீக்க முடிவெடுத்தார். துறவிகள் எராளமாக இருந்தது இந்த இழிநிலைக்கொரு காரணம்.

குருக்கள் பலரின் ஒப்பதலுடன், புதிதாகத் தானமாகக் கிடைத்த ஓர் இடத்தில் அவிலாவின் கி.பி. 1561-ல் புதிய சூழ்நிலையில் ஒரு மடம் கட்டப்பட்டது.

புதிய மடத்திற்குப் புனித வளனாரைப் பாதுகாவரலாகத் தெரிந்துகொண்டார் தெரசா. அவரின் உறவினர் 3 இளந்துறவு நிலையினர் மட்டுமே இங்கு அனுமதிக்கப்பட்டனர். இம்மடத்திற்குள் வெளியாட்சிகளின் தொடர்புக்கு இடமே இல்லாமற்போனது. நீடித்த மௌனம், கடுமையான எளிமைத்தனம், காலணிகள் அணியாமை, (எனவேதான் Disealced என்று இன்று வரை அழைக்கப்படுகின்றார்) →

புலால் உணவை முற்றிலும் தவிர்த்தல் முதலிய ஒழுங்குகளைக் கடைப்பிடித்தனர். இந்தப் புதிய மடத்தில் 13 துறவிகளுடன் 5 ஆண்டுகள் தெரசா வாழ்ந்து வந்தார்.

கி.பி. 1567-ல் மெடினா டெல்காம்போ என்ற இடத்தில் இதே கடுமையான ஒழுங்குகளுடன் கூடிய மற்றொரு மடம் ஒன்றை நிறுவினார். கடுமையான ஒழுங்குகளுடன்கூடிய இந்த மடத்தைப் பார்த்த இரண்டு கார்மேல் சபைக் குருக்கள் இதைப் பின்பற்றத் திட்டமிட்டனர். கி.பி 1568-ல் தெரசாவின் 65வது வயதில் உடல்நிலை மிகவும் நலிவடைந்தது. அப்போது 17 மடங்கள் காட்சியளித்தன. இவர் கி.பி 1582 அக்டோபர் 4ம் இறைவனடி சேர்ந்தார். இவரே பெண் குலத்தில் முதலாவது மறைவல்லுனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.147
## சாலமோனின் ஞானம் 1 – 19 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | 02 |
| | | 04 | | | | | | 20 |
| | 07 | 06 | | 03 | 21 | | | 22 |
| 05 | | | | 26 | ❖ | ❖ | ❖ | |
| | | 08 | | | ❖ | | 24 | 23 |
| | | | | 25 | ❖ | | 13 | |
| | | | | ❖ | ❖ | ❖ | | 18 |
| | 11 | | | ❖ | | | | 17 |
| | 12 | | | 15 | | | 16 | 19 |
| 09 | 10 | | | | 14 | | | |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(—— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்
1. .................. உள்ளத்திலிருந்து அச்சத்தையும் ——
8. அவரது .................. ஆண்டவருக்கு ஏற்புடையதாயிருந்தது.
9. அறிவிலிகளின் ............................ க் கண்ணிகள்.
11. அலகையின் பொறாமையினால் ........... உலகில் நுழைந்தது.
14. இதன் விளைவாக எங்கும் ஒரே ..........................
15. ஆனால் பகைவர்கள் கதறியழுத ........... கள் எதிரொலித்தன.

### வலமிருந்து இடம்
2. அது அறிவிலிகளை .................... காட்டிவிடும்.
4. அநீதி ..................... யில் அது நாணி ஒதுங்கும்.
13. நிலத்தின்மீது ........................ காலைப் பணியின் ——
16. நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் ........... உள்ளன.
17. .................. குரிய வழியில் அவர்களை நடத்திச்சென்றது.
18. போர் வீரனைப்போல் ............ க்கென குறிக்கப்பட்ட ——
19. அங்கும் இங்கும் கலைக்கப்படும் ................ போன்றது.
20. விபச்சாரிகளின் ..................... முதிர்ச்சி அடையமாட்டார்கள்.
22. ................ என்பது பகுத்தறிவின் துணையைக் கைவிடுவதே.
23. இன்பத்தின் ................. களை எங்கும் விட்டுச்செல்வோம்.

### மேலிருந்து கீழ்
4. அவர்கள் .......... நாட்டினரைப் பகைவர்களென நடத்தினார்கள்.
5. அழிவுக்குரிய ............. ஆன்மாவைக் கீழ்நோக்கி அழுத்துகிறது.
6. அவற்றில் ஆற்றல் ................ த் தண்டிப்பதில்லை.
7. நீதிமான்களின் ஆன்மாக்கள் ................ கையில் உள்ளன.
8. ஆண்டவருடைய ஊழியர் ஒருவரின் ............. நுழைந்தது.
12. சினம் செறிந்த .................... மழைவிழும்.
22. அவர்களை .................. த்திக் கொன்றுவிடக்கூடியவை.
26. எனவே ..................... சொற்களால் நற்பயிற்சி பெறுங்கள்.

### கீழிருந்து மேல்
3. வாழ்வின் மேலும் ......... மேலும் உமக்கு அதிகாரம் உண்டு.
5. ........ ஆராய்ந்தறியும் அளவுக்கு ஆற்றல் அவர்களுக்கு ——
9. ................ ன் அடிமைகளாகவும் —— கடத்தப்பட்டார்கள்.
10. வழியில் ................. டன் தன்னையே காட்டுகிறது.
21. ..................... மக்கள்மீது ஆட்சி செலுத்துவேன்.
24. அவர்களுடைய .................... மரபினர் சபிக்கப்பட்டவர்கள்.
25. நமது முடிவுக்குப் .................. நாம் மீண்டும் வருவதில்லை.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 145ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:
கொ. ஆன்சிக்கா குரூஸ்
வங்காலை - 06

இரண்டாம் பரிசு:
யோ. அனோஜன்
கள்ளிகட்டைக்காடு,
உயிலங்குளம்

மூன்றாம் பரிசு:
கு. டினோசன் சில்வா
பெரிய பண்டிவிரிச்சான்
மடு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 69 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 62 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 138ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. அ. றோயல். டீ. சில்வா, சுவிஸ்.
2. ம. மெரிலின் டலிமா, ஜேர்மனி.
3. தே. ஜீவடிலோஜன், பரிகாரிகண்டல், முருங்கன்.
4. லொ. லக்சி டீ. சில்வா, அவுஸ்ரேலியா.
5. ஆர். மிதுஷா, பூமலர்ந்தான் வீட்டுத்திட்டம், மடுறோட்.
6. ஜே. பென்சியன், மாதா கோவில் வீதி, தலைமன்னார்.
7. செ. மரியதர்சினி, கண்டல், திருக்கேதிஸ்வரம்.
8. அ. ஆரோக்கியம், அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.
9. டொ. டர்லின் றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.
10. ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.
11. ஆர். மீகா ஜெனிபர், சுண்டிக்குளி, முருங்கன்.
12. றொ. ஸ்ரெலா, இல– 50, வீரபுரம், நேரியகுளம்.
13. தே. செபமாலைநாயகி, வல்வெட்டித்துறை.
14. ஞா. வினோதர்சி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
15. தா. விதுர்சிக்கா, பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.
16. செ. அசுந்தா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
17. நி. டேனியல், குடியிருப்பு, செட்டிகுளம்.
18. யோ. ஆன் லிபோஷிகன், நறுவிலிக்குளம், வங்காலை.
19. லீ. பாலன், பெற்றா, மன்னார்.
20. ஜெ. றேபனா, அந்தோனியார்புரம், மன்னார்.
21. யே. அனோஜா பீரிஸ், கொவ்வங்குளம், நானாட்டான்.
22. கத்தரின் சேவியர், பெரியகடை, மன்னார்.
23. கமலா கிறிஸ்தோப்பர், சின்னக்கடை, மன்னார்.
24. ராணி அரசரத்தினம், புகையிரத நிலைய வீதி, மன்னார்.
25. திருமதி. ரஜனி எட்வின், உவர்மலை, திருகோணமலை.
26. பாபு. நியூட்லின் றோச், அந்தோனியார்புரம்.
27. எம். திரேசா, எமில்நகர், மன்னார்.
28. வே. நெவில்றாஜ், பிச்சகுளம்.
29. இ. பி. நிக்கலஸ் சோசை, 1ம் வட்டாரம், வங்காலை.
30. யோ. சயந்தினி, பரிகாரிகண்டல்.
31. அ. இசக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
32. கெ. சுகந்தினி, பொன்தீவுகண்டல், அளவக்கை.
33. செ. அனுசியா கூஞ்ஞ, அரிப்பு மேற்கு, அரிப்புத்துறை.
34. அ. தர்சினி, பரப்புக்கடந்தான், ஆட்காட்டிவெளி.
35. யே. டியூலா குரூஸ், எமில் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
36. வி. ஆனந்தசெல்வி, கில்லறி வீதி, சாவற்கட்டு, மன்னார்.
37. எ. தர்சினி, பரப்புக்கடந்தான், ஆட்காட்டிவெளி.
38. ஆர். மீரா, இல– 168, 50, பள்ளிமுனை கிழக்கு.
39. ரி. டக்ஷாஜினி, இல34/7 கன்னியர்மடவீதி, மன்னார்.
40. அ. கரோலினி கீர்த்திக்கா, தபால்நிலைய வீதி, திருமலை.
41. அ. ஆன் நெவின்சியா கூஞ்ஞ, முத்தரிப்புத்துறை கிழக்கு.
42. கொ. யோசப் டினோஷியன், இல– 167, உப்புக்குளம்.
43. ஸ். நிவ்ஷயானி, பாணமைப்பற்று, கோமாரி -1
44. மேரி பிலோமினா றோஸ் கிறிஸ்ரோபர், யாழ்ப்பாணம்.
45. தா. சங்கீதா, ஆத்திக்குளி, அளவக்கை.
46. ஜெகன் ரதி, கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.
47. எஸ். கிறிஸ்துராசா, இல - 309, வீரபுரம், நேரியகுளம்.
48. எக்ஸ். சி. பேரின்பநாயகம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
49. எம். றொசின்டன், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
50. எம். மெரிஜெசின்டா, இல- 29B, பாசையூர்.

## இல.145 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ¹ஆ | ண் | ட | வ | ரி | ன் | ❋ | ய் | ளா | ⁹நா |
| த¹⁹ | ²கோ | ப | த் | தி⁸ | பி | மை | ன் | ¹⁰மே | ட் |
| ரி | வு | டி | ¹¹மு | ³மு | ன் | வே | ரு | ¹²வ | ழ |
| த் | சி | ட் | சா | ர | ⁴அ | ண் | மை | யி | ல் |
| த | ⁵பு | ¹⁸க | லி | ட | ம் | ⁶செ | ன் | று | லை |
| வ | மே | த | தை | ன | மா | ல | ¹³நி | ¹⁶நெ | ல் |
| ர | ச | வா | ¹⁴கூ | ¹⁵ப | ல் | ர | ம் | ரு | யி |
| னை | ஞ் | த | டை | யி | ¹⁷மே | ய | பி | ப் | ரு |
| ன் | ப¹⁷ | ⁷உ | ல | ர் | ந் | ²⁰து | க் | பை | வ |
| ⁸உ | ரி | மை | ச் | சொ | த் | தை | கை | ❋ | எ²¹ |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.147ற்கான முடிவுகளை 2014ம் ஆண்டு நவம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வுகள்
8ஆம் பக்கத் தொடர்ச்சி

இப்பொன்விழா நிகழ்வின்போது வடமாகாண ஆளுனர் செயலகத்தினால் நடாத்தப்பட்ட பாரம்பரியக் கலைகளுக்கான போட்டியில் மாகாண மட்டத்தில் பங்குகொண்ட, முதலிடங்களைப் பெற்ற இம்மன்றத்தின் கலைநிகழ்வுகள் மேடையேற்றப்பட்டமை சிறப்பம்சமாக அமைந்திருந்தது. மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற சிறுவருக்கான கூத்துவழி நடனம், முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் குழந்தைக் கலைஞர்கள் நடித்த 'யார் குழந்தை' என்ற கூத்து நாடகம், 'வீரத்தாய்' நாடகம், ஆவணம் கார்மேல் அன்னை கலர்மன்றத்தின் வடமாகாணப் போட்டியில் முதலிடம் பெற்ற 'பாஞ்சாலி சபதம்' கூத்து நாடகம் போன்றவை இவ்விழாவில் அரங்கேற்றப்பட்டு பலரது பாராட்டைப் பெற்றிருந்தன.

கடந்த ஐம்பது வருடங்களாக மன்றத்தில் கலைப்பணியாற்றிய மூத்த கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி, பொற்கிளி வழங்கப்பட்டது. இறந்தபோன கலைஞர்களின் மனைவிமார் மேடைக்கு அழைக்கப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்டனர். கலாமன்றத்தில் நீண்டகாலமாகப் பணிபுரிந்த, பணிபுரிந்துவருகின்ற இளங்கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இதைவிட மன்னார் மாவட்டத்தின் பல்வேறு இடங்களைச் சேர்ந்த சமூகப்பெரியார்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள் ஆகியோர் கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். ஆத்திக்குளியைச் சேர்ந்த ஆளுனர் விருது பெற்ற திரு. அ. அந்தோனிப்பிள்ளை அவர்கள் சிறுவர் இலக்கியத்திற்கு செய்த பணிகளைப் பாராட்டி 'பிள்ளைத் தமிழோன்' என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. பேசாலையைச் சேர்ந்த திரு. எஸ். ஏ. உதயன் அவர்களின் நாவல் இலக்கியப் படைப்புக்களைப் பாராட்டி 'நாவல் நாயகன்' என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. ஆட்காட்டிவெளியைச் சேர்ந்த திரு. பி. எம். செபமாலை அவர்கள் மாதோட்ட வரலாற்றியலுக்கு செய்த பங்களிப்பைப் பாராட்டி 'ஆய்வறித் தலைமகன்' என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. இசைமாலைத்தாழ்வைச் சேர்ந்த திரு. செபமாலை பிலிப்பு (சிங்கராசா) அவர்களின் கலைச்செயற்பாடுகளைப் பாராட்டி 'சுடர்கலைச் சோதி' என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. காத்தான்குளத்தைச் சேர்ந்த திருமதி. வசந்தி சுவாந்தா குரூஸ் அவர்களின் நாடகத்துறைப் பங்களிப்பைப் பாராட்டி 'அரங்கச் செல்வி' என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது.

இதைவிட இவ்வாண்டு குருத்துவ வெள்ளிவிழாக் கண்ட அருட்பணியாளர்கள் தேவராஜா கொடுதோர், பீற்றர் மனோகர் மற்றும் கலாநிதி அகளங்கன், கவிஞர் சோ. பத்மநாதன், கலாநிதி த. கலாமணி, கலாநிதி சிறிகணேசன், கலாபூசணம் விருது பெற்ற மன்னார் மணி (திரு. மரியதாஸ்), யாழ் குருநகர் இராயப்பு கலையார்வன் ஆகியோரும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நேரத்திற்கு நிகழ்வுகள் ஆரம்பம்ாகி குறிப்பிட்ட நேரத்திற்குள் நிகழ்வுகள் யாவும் நிறைவுபெற்றமையும், நிகழ்வுகள் யாவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தமையும், பார்வையாளர்கள் பெருமளவில் கலந்துகொண்டமையும் இவ்விழாவின் சிறப்புக்களாக சிலாகித்துப் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் சிறிய குருமட வெள்ளிவிழா நிகழ்வுகள்
3ஆம் பக்கத் தொடர்ச்சி

இக்குருமடத்தின் பழைய மாணவர்களான இளங்குருக்களின் வில்லுப்பாட்டு நிகழ்வு, சிறிய குருமட மாணவர்களின் புனித பவுலடியார் நாட்டுக்கூத்து நிகழ்வு போன்றவை குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாக அமைந்திருந்தன. நிகழ்வுகளின் நிறைவில் அழைக்கப்பட்ட அனைவருக்கும் இரவுவிருந்து வழங்கப்பட்டது.

மன்னார் சிறிய குருமடத்தின் அதிபராக அதன் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை பணியாற்றிக்கொண்டிருக்கும் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளார் தனது சுகவீனத்தின் மத்தியிலும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அடிகளாருடைய பணி இவ்விழாவில் பலராலும் சிலாகித்துப் பேசப்பட்டது.

திருப்பலியின்போது மறையுரையாற்றிய மன்னார் ஆயர் அவர்கள் குருக்களுக்காக குருமட மாணவர்களுக்காக செபிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

சிறிய குருமட மாணவர்களின் பெற்றோர், இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், மற்றும் குருக்கள் துறவியர் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

யூபிலிவிழாக் குழுவினர் இவ்விழா சிறப்புற அமைய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இக்குழுவில் இடம்பெற்ற அனைத்துக் குருக்களுக்கும் சிறப்பாக இக்குழுவின் செயலர் அருட்பணி. நெவின்ஸ் பீரிஸ் அவர்களுக்கும் மன்னார் மறைமாவட்டத் திருச்சபைச் சமூகம் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றது.

## புலமைப்பரிசில் பரீட்சை ..... 3ஆம் பக்கத் தொடர்ச்சி

இதன்போது கருத்து தெரிவித்த முதலிடம் பெற்ற பாடசாலையின் அதிபர் என். சிவானந்தன், குறித்த பாடசாலையானது 2010ம் ஆண்டு புனரமைக்கப்பட்டு தலைமன்னார் பகுதியில் முதல் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை இவ்வெற்றியினை அடைந்துள்ளது. இது எமக்கு பெருமை தருகிறது எனினும் விசேடமாக ஆன் பொபிஷா பிரத்தியேக வகுப்புக்கள் மற்றும் தனியார் வகுப்புக்களுக்கு நேரத்தைச் செலவிடாமல் பாடசாலையின் வகுப்புக்களுக்கு மட்டுமே சமூகமளித்து இந்த வெற்றிக்குரிய பெறுபேற்றினை பெற்றிருப்பது எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது என்றார்.

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கும் அவர்கள் சார்ந்த பாடசாலைச் சமூகத்திற்கும் மன்னாவின் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

## திருத்தந்தையின் இலங்கை வருகை ....
6ஆம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையர்களிடம் சிறந்த உபசரிப்பு மற்றும் வரவேற்புக் குணாம்சங்கள் காணப்படுகின்றன. எனவே அவற்றைக்கொண்டு திருத்தந்தையை நாங்கள் வரவேற்போம். அவரை வரவேற்பதன் மூலம் உலகுக்கு ஒரு செய்தியை வழங்குவோம். எமது விசேட அடையாளமான நட்பின் பெயரில் திருத்தந்தையை வரவேற்கத் தயாராக வேண்டும்.

**அரசாங்கத்துக்கு நன்றி**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்துத் தரப்புக்களுக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம் என்று கர்தினால் குறிப்பிட்டார்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்
பதிப்பாசிரியர்

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 06 1988



உதிர்வு 06 10 2010

### செல்வன். த. சில்வஸ்ரன் சில்வர்

(பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்)

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன் "

அன்பின் இருப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே!
எம்மைவிட்டுப்பிரிந்து நான்காண்டு நிறைவாய்........!
இன்னுமெம் மனங்களில் இது ஒரு கனவாய்.......
நிழற்படமாய் நீ நிற்கும்
உம் உருவம்கண்டு நினைந்துருகும்
எந்நாளும் எம் மனமின்று!
எம் மகனே சில்வேஸ்ரா......! உம் ஆத்மாவின்
சாந்திக்காக இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்.

*உம் பிரிவால் துயருறும்:*
*குடும்பத்தினர்*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 10 1930



உதிர்வு 12 10 2013

### திரு. ஹென்றி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்

(தாழ்வுபாடு வீதி, மன்னார்)

இல்லறத்தில் இன்பமுற இனிதாக வாழ்ந்தவரே
எல்லோரும் புகழ்ந்திடவே இனியபணி புரிந்தவரே!
வல்லபரன் கருணையினால் வளமான வாழ்வு தந்தீர்
செல்லுமிடமெங்குமுந்தன் செயலறிந்து நாம் மகிழ்தோம்.

ஞானம் எனும் பெயருக்கே இலக்கணமாய் வாழ்ந்தவரே!
மோனத் தவமிருந்து பிள்ளைகளை உயர்த்தி வைத்தீர்
வானத்திலிருந்து வந்த முழுமதிபோல் முகமலர்ந்து
தானமது புரிந்தவரே இறைவனுடன் இணைந்தருள்க!

*உம் பிரிவால் துயருறும்:*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 09 1945



உதிர்வு 31 10 2013

### திரு. அந்தோனி கிறேசியன் கபிரியேல் குரூஸ்

(5ம் வட்டாரம், பேசாலை)

பெருமைசேர் பெரும்பதி பேசாலையாம்
அரும்மருந்தாய் அமைந்த ஊரில்
சீர்கொண்டு சிறப்புற்ற பெருமகனே
சிரம்தாழ்த்தி வரம்கேட்போம் ஈசன் பெரும்தாழ்.

நெஞ்சோடு கலந்த உங்கள் திருமுகம் - அந்த
நினைவோடு இது என்றும் நிலைத்து நிற்கும் - விழி
நீரோடு புலம்புகின்றது எம் இதயம் - தலைசாய்த்து
விடைதந்தோம் தொடர்க உம் பயணம்.

மாமறை பரப்பும் பணி சிறக்க ஞானமகன்
தந்தாய் மகிழ்ந்தோம் மாநிலமதில்
உம் அன்பையும், பண்பையும் எம் வாழ்வில்
வெளிப்படுத்த எமக்காக இறைவனை மன்றாடுவீர்.

*பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 01 1944



உதிர்வு 01 10 2007

### திருமதி. கிறகோரியம்மா (தங்கம்)

(விடத்தல்தீவு)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
(யோவான்: 11:25)

நினைந்து நினைந்து எம்மை நீள்புவியிற் கலங்கவிட்டு
நேசன் உமையழைக்க நிம்மதியாய்ச் சென்றீரோ?
தேன் இனிமையிலும் சிறந்த தெவிட்டாத
தீஞ்சுவையே! எல்லாமாய் நீ இருந்து
எமக்கன்பை சொரிந்து நின்றாய்!
வஞ்சம் சிறிதுமிலா வளமான ஆரணங்கே!
தங்கநிகர் குணத்தால் அனைவரையும் கவர்ந்தவளே!
பஞ்சம், படை, பிணி நோய் பாழ்பட்டுப் போவதுடன்
நினையும் உவந்தேற்க நிமலனை நாம் வேண்டுகின்றோம்.

*உம் பிரிவால் துயருறும்:*
*கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 02 1936



உதிர்வு 07 10 2013

### திருமதி. செபஸ்தியாம்பிள்ளை அன்னம்மா

(நானாட்டான்)

ஓராண்டு சென்றாலும் அம்மா
உங்கள் நினைவு எங்களோடுதான் என்றும்.
குடும்பத்தின் குலவிளக்காய் குன்றா மணிச்சுடராய்
விளங்கிய எங்கள் அம்மாவே - நீங்கள்
உங்கள் பிள்ளைகளுக்காய் என்றும்
இறைவனிடம் மன்றாடுவீர்கள் என அறிவோம்.
செபமாலை அன்னையின் நினைவுநாளில்
ஆண்டவரோடு சங்கமமானீர்கள்.
தினமும் செபமாலை சொல்லி
அன்னையின் பிள்ளைகள் நாம் - என்றும்
உங்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
தொடர்ந்து செபிக்கின்றோம்.

*உம் பிரிவால் துயருறும்:*
*பாசமிகு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

## சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பனங்கட்டுக்கொட்டு மாணவர்களுக்கு கௌரவம்

5ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட மேதகு ஆயர், கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்ட நகர முதல்வர் திரு எஸ் . ஞானப்பிரகாசம், சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்ட பங்குத்தந்தை அருட்திரு. பெப்பி சோசை, துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. மாலினி வெனிற்றன் மற்றும் விருந்தினர்களாக அழைக்கப்பட்ட அனைவரும் பனங்கட்டுக்கொட்டுக் கிராமத்தின் மெழுகுதிரிச் சந்தியிலிருந்து புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையினரின் பேண்ட் வாத்திய இசையுடன் சிறார்களினால் மாலை அணிவித்து விழா மைதானத்திற்கு அழைத்துவரப்பட்டார்கள்.

மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், கலைமாணி திருமதி. தயாளன் செல்வவனிதாவின் மாணவர்களுடைய வரவேற்பு நடனம் என்பவற்றைத் தொடர்ந்து பனங்கட்டுக்கொட்டு கல்வி கலாசார மேம்பாட்டு அமைப்பின் தலைவர் பொறியியலாளர் பி. ஜே. ரமேஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமையுரையை உபதலைவர் வைத்திய கலாநிதி. ரி. ஒஸ்மட் ரெனி ஆற்றினார். தொடர்ந்து பங்குத்தந்தை அவர்களினால் ஆசியுரை வழங்கப்பட்டது. தொடர்ந்து திருமதி. செல்வவனிதாவின் மாணவர்களுடைய கிராமிய நடனம் இடம்பெற்றது.

மாணவர்களுடைய தமிழ், ஆங்கிலக் கவிதைகள், பேச்சு போன்றவை நடைபெற்றன. பிரதம விருந்தினர் உரையினை வணக்கத்திற்குரிய ஆயர் அவர்களும், சிறப்பு விருந்தினர் உரையினை துனுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் அவர்களும் நிகழ்த்தினர். கௌரவ விருந்தினர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் நகர முதல்வரும் உரையாற்றினார்.

பனங்கட்டுக்கொட்டுக் கிராமத்தைச் சேர்ந்த மாணவி செல்வி. வில்சன் சுவேந்திரன் அபிஷா பெர்ணான்டோ புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் 9வது இடத்தினையும் பெற்றிருந்தார்.

தரம் 5 புலமைப்பரிசு பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்குமேல் பெற்றவர்கள், மாகாண, தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் ஆகியோருக்கு வணக்கத்திற்குரிய ஆயர் அவர்களினால் நினைவுப் பரிசும் பதக்கமும் வழங்கப்பட்டது. க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் முதல்நிலை பெறுபேற்றினைப் பெற்றவர்கள், தரம் 5 புலமைப்பரிசு பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள், மாகாண, தேசிய, மட்டத்தில் வெற்றிபெற்றவர்கள், எலக்ரீயூசன், UCmass பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றவர்கள், ஆகியோர்களிற்கு சிறப்பு விருந்தினர்களினாலும், கௌரவ விருந்தினர்களினாலும் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

கலாவித்தகர் திருமதி. உஷா கிறிஸ்கந்தராஜா அவர்களுடைய மாணவியின் பரத நாட்டியமும் நடைபெற்றது.

பனங்கட்டுக்கொட்டு கல்வி கலாசார மேம்பாட்டு அமைப்பு செயலாளர் எஸ். ஜோன் நிக்சன் குரூஸ் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வானது பல்வேறு வழிகளில் முன்னேறிவரும் பனங்கட்டுக்கொட்டு இளையதலைமுறையினருக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

## சிறுகதை தாயுமானவள் ....

12ஆம் பக்கத் தொடர்ச்சி

"அந்தப் பணத்தை நான் எடுக்கவில்லை. பணப்பெட்டியைத் திறந்ததும் வெறுமையாகவே இருந்தது" என்று கூறியதைக் கேட்டு குழப்பமடைந்தாள் தாய். அந்த நேரம் பார்த்துக் கடைசி மகன், "அம்மா.... அம்மா.... அந்தப் பணத்தை சின்னண்ணா எடுக்கவில்லை. நான்தான் எடுத்து பெரியண்ணனிடம் கொடுத்தேன். பெரியண்ணா தினமும் பணத்தை எடுத்துவரச்சொல்லுவார். நான்தான் எடுத்துக் கொடுப்பேன். இம்முறை அதற்குள் கொஞ்சப்பணம் கிடந்ததால் எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்துவிட்டேன்" என்று நடந்தது, நடந்துகொண்டிருப்பது என எல்லாவற்றையும் கூறினான்.

இதைக் கேட்டதாய் மனம் நொந்தவளாய் பிள்ளைகள் மூவரையும் திட்டித்தீர்தாள். தடி ஒன்றை எடுத்து மகன்மாரை தாறுமாறாக அடித்தாள். அடி தாங்க முடியாத மூன்று பிள்ளைகளும் தாயையும், மகளையும் தாக்கி அடித்து வீட்டைவிட்டே கலைத்துவிட்டனர்.

வெளியேறி வந்த செல்லம்மா செய்வதறியாது திகைத்து மகளையும் அழைத்துக்கொண்டு தெருத்தெருவாக அலைந்தாள். என்ன செய்வது, எங்கு போவது என்று தெரியாத அவள். நாளும் ஒரு வீடு என்று மா இடித்து தன் வயிற்றையும், மகளின் வயிற்றையும் கழுவிவந்தாள்.

இவளின் நிலையை உணர்ந்தவர் மட்டும் காசுகொடுத்து உதவினர். பலரோ இவளைத் திட்டி அனுப்பினர். எங்கு போவதென்று தெரியாத செல்லம்மா அனாதை மடம் ஒன்றுக்குச் சென்று அங்கு தன் நிலையைச் சென்னால் ஒருவேளை தன்னை ஏற்றுக்கொள்வார்களோ என்று எண்ணியவளாய் இருந்தபோது, "அம்மா பசிக்கிறது, என்னால ஏலாது... "என்ற மகளின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டாள். தன் கடந்தகால நினைவுக்குள் மூழ்கி இருந்தவள் தன்னுணர்வு பெற்றவளாய்த் தன் மகளை அழைத்துக்கொண்டு அனாதை மடத்தை நோக்கி நம்பிக்கையுடன் புறப்பட்டுச் சென்றாள் தாயுள்ளம் கொண்ட தாயுமானாவள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 40வது ஆண்டு பொன் விழா வாழ்த்து



(28. 10. 1974 - 28. 10. 2014)

### திரு. திருமதி. வஸ்தியாம்பிள்ளை பயஸ், மேரி பிலோமினா

(குட்செட் வீதி, வவுனியா.)

நாற்பதாண்டுகள் நல்லபரன்
நலம்பல அளித்தார் நாதனுக்கு நன்றி!
மூப்பது அடைந்தாலும் காப்பது கடவுளே
கனதனம் பெற்று நீங்கள் நீடூழி வாழ்கவே!

வாழ்த்துக்கள் கூறும் :
ஜெயலங்கா என்ர பிறைசஸ்
உரிமையாளரும், பணியாளர்களும்
க. ஜெயசீலன், பிரதான வீதி, முருங்கன்.


மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம்

கலையருவியின் முயற்சிகளுக்கு உங்கள் ஆதரவைத் தாரீர்!

### மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க அருங்காட்சியகம்

ஏறக்குறைய 500 வருட நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதான மன்னார் கத்தோலிக்க திருச்சபையின் புராதன வரலாற்றுச் சின்னங்களை, கத்தோலிக்க அடையாளங்களைப் பேணிக் காக்கவும், காட்சிப்படுத்தவும் மேற்படி அருங்காட்சியகத்தை அமைக்கவுள்ளோம்.

உங்கள் பங்கில், ஆலயத்தில், வீடுகளில் உள்ள பழைய சுருவங்கள், சிலுவைகள், பூசைப் புத்தகங்கள், நாட்டுக்கூத்து ஏடுகள் போன்ற அரிய, புராதன, புனிதப் பொருட்களை எமது நிலையத்திற்கு தந்து உதவுங்கள்.

### மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க நூல் நிலையம்


பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்வேறு மட்டத்தில் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் இறையியல், மறையியல் கல்வியில் ஆர்வமுள்ள குருக்கள், துறவியர், பொதுநிலையினர் போன்றோரின் அறிவுத் தேடலை பூர்த்திசெய்யும் வகையில் தரமான நூல்நிலையம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்கின்றோம்.

உங்களிடம் இருக்கக்கூடிய, நீங்கள் வாசித்த, பெறுமதியான, உங்களால் பாதுகாக்க முடியாத நூல்களை எமது நூல்நிலையத்திற்கு தந்து உதவுங்கள்.

அருங்காட்சியகப் பொருட்களை, நூல்களை உங்கள் இடங்களுக்கு நேரடியாக வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். இது தொடர்பாக எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்.
இயக்குனர், கலையருவி, தொலைபேசி இல. 023.- 2250789, 023 - 3233276


## 2ம் மாத நினைவஞ்சலி

மலர்வு 17 ✝ 08 ✝ 1974



உதிர்வு 18 ✝ 08 ✝ 2014

### அருட்பணி. தேவதாசன் எட்வின் (அமதி)

குருத்துவத்தின் மகிமையில் 12. 11. 2007. "எளியோர்க்கு நற்செய்தி நவில"

விழிகள் தூங்க மறுக்கின்றதே விலையுயர்ந்த பொக்கிஷமே
உம்மை இழந்தமையால் வழிநெடுகத் தேடுகின்றோம்.
விழிகளெல்லாம் குளமாகின்றதே.
புயணங்கள் பல செய்தோம் உமைக்காண - இனி
எங்குதான் செல்வோம் உம்மைத்தேடி?
கால்களும் ஓய்ந்து போயினவே - எம்
கனவிலேனும் நீர் வருவீரோ.

மாதமிரண்டு மறைந்ததையா மலைமேல் விளக்கே நீர் அணைந்து
இருளில் மூழ்கித் தவிக்கின்றோம் அருளைப் பொழிய வருவீரோ?
அழியாத வாழ்வு உமக்குண்டு அந்த ஆழ்ந்த நம்பிக்கை எமக்குண்டு
அல்லும் பகலும் எங்களுக்காய் ஆண்டவர் யேசுவிடம் வேண்டிடுவீர்.

"இறை நிழலில் நீர்
என்றென்றும் துயில் கொள்வீராக"

என்றும் உங்கள் பாசமுள்ள: குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.


மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம்

### கலையருவியின் புத்தாக்கப் போட்டி முடிவுகள் அடுத்த மன்னாவில்


மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கட்டுரை, சிறுகதை, கவிதை நாடக ஆக்கம் போன்ற போட்டிகளுக்கான முடிவுகளை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்.

- இயக்குனர், கலையருவி


## நீங்காத நினைவுகள்

### 8ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 ✝ 05 ✝ 1958



உதிர்வு 27 ✝ 10 ✝ 2006

#### திரு. ஞானப்பிரகாசம் அமிர்தநாதன்

(இல 114, மில்வீதி, வவுனியா)

பாரினில் வாழ்ந்த காலம் பாசமழை பொழிந்து,
தேடி வந்தோரின் தேவையறிந்து தேவைகளை
நிறைவேற்றிக் கொடுக்கும் பெருந்தகை நீங்கள்!

பாரில் நாம் வாழ பல நல்ல காரியங்கள் செய்துவிட்டு,
பாதியில் கானல் நீர்போல் மறைந்ததென்ன ..... ?

பாரினில் வாழ்ந்த காலம் சிறிது எனினும்
பலர் நலமுடனும், வளமுடனும் வாழ வழிசெய்தீர்கள்!

நீங்கள் செய்த நன்மைகளில் உங்களைக் கண்டு
பாரினில் நாம் வாழும் நாட்கள் வளமான நாட்கள்தான்.
கண்ணீர்ப் பூக்கள் தூவுகின்றோம்
கல்லறையில் தூங்கினாலும்
கடவுள் கிருபை எப்போதும் உங்களோடு.

என்றும் உங்கள் நினைவில் : குடும்பத்தார்

### 25ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. எ. செபஸ்ரியான் குருஸ் (இளைப்பாறிய அதிபர்) — திருமதி. எஸ். றோசாறி பீரிஸ்

(5ம் வட்டாரம், பேசாலை)

மலர்வு : 17 - 10 - 1916
உதிர்வு : 21 - 10 - 1989

மலர்வு : 02 - 07 - 1926
உதிர்வு : 22 - 08 - 1988

"வாழ்வு மாறுபடுகிறதே அன்றி அழிக்கப்படுவதில்லை"

கால் நூற்றாண்டு கடந்துபோன கண்ணீரின் காவியம்,
காலத்தால் அழியாத உயிருள்ள ஓவியம்.
செபஸ்ரியான் றோசாறி எனும் இருமலர்கள்
எம்மைவிட்டு மண்ணில் வீழ்ந்து
உரமாக மாறிப்போய்விட்ட இருபத்தைந்து ஆண்டு நிறைவு.

உங்களுடன் நாம் வாழ்ந்த ஒவ்வொரு மணித்துளியும்
மறக்கத்தான் முடியுமோ ஐயா அம்மா!
இறைவா! காலமெல்லாம் உம்நிழலில் காத்திடுவாய்.
கரம்கூப்பி வேண்டுகின்றோம் எம் கண்ணீரை நோக்கிடுவாய்.

உம் பிரிவால் துயருறும் :
பாசமுள்ள பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

### 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 ✝ 11 ✝ 1930



உதிர்வு 28 ✝ 10 ✝ 2013

#### திரு. J.W. றொபேட் (மனேஜர்)

(கிளை முகாமையாளர், பெரிய பண்டிவிரிச்சான்)

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோ.11: 25)

ஆண்டு ஒன்று முடிந்தாலும் - ஐயா
உங்கள் அன்பு, பாசம் எம்மைவிட்டுப் பிரியாது.
அனைவருக்கும் வாழ்வு கொடுப்பவராய்
எல்லார் இதயத்திலும் இடம்பிடித்தவராய்
இன்றும் என்றும் எம் உள்ளத்தில் உறவாடி
இயேசுவின் உயிர்ப்பில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஐயா!
உங்கள் நல்ல வாழ்விற்கு நன்றி!
எமக்காக இறைவனிடம் பரிந்துபேசி
என்றும் இறைவனுடன் இணைந்திருக்க வேண்டுகிறோம்.

என்றும் உங்கள் பாசமுள்ள: மனைவி - பொன்றோஸ்,
பிள்ளைகள், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள். - கற்கடந்தகுளம்.


இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org